விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

Now in JAFFNA
BBA
(Bachelor of Business Administration)
Leading to MBA
BLC CAMPUS
0777 174 443
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 493 6666
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk

வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 வைகாசி 25 சனிக்கிழமை (08.06.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 171

# உலகளவில் நாமே பெரும்பான்மையினர் இலகுவாக எம்மை அடக்கிவிட முடியாது

## கிழக்கின் முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் எச்சரிக்கை

(கொழும்பு)

நாங்கள் இந்த நாட்டில் மட்டும்தான் சிறுபான்மை. உலகளவில் நாம் பெரும்பான்மையினர். எம்மை இலகுவாக அடக்கி ஒடுக்கி விட முடியும் என யாரும் நினைத்து விடக் கூடாது என கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் எச்சரித்துள்ளார்.

"ஒட்டுமொத்த முஸ்லிம் அமைச்சர்களும் பதவி விலகியமை பெரிதல்ல. ஆனால் ரவூப் ஹக்கீம், கபீர் காசிம் ஆகியோர் பதவி விலகியமையே பாரிய விடயம். அவர்கள் எமது சமூகமன்றி சிங்கள மக்களின் 24



### முல்லைத்தீவுக்கு ஜனாதிபதி மைத்திரி இன்று விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடைய எண்ணக் கருவில் உருவான நாட்டுக்காக ஒன்றிணைவோம் தேசிய வேலைத் திட்டமானது முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த மூன்றாம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதனுடைய இறுதி 23

# பாராளுமன்ற தெரிவுக்குழு புலனாய்வு அதிகாரிகளை விசாரிக்க முடியாது

## ஜனாதிபதி மைத்திரி அதிரடி உத்தரவு



(கொழும்பு)

அரச புலனாய்வு அதிகாரிகளை பாராளுமன்ற தெரிவுக்குழுவினர் விசாரிக்க அனுமதிக்க முடியாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிரடியான உத்தரவை நேற்று பிறப்பித்துள்ளார்.

பாராளுமன்ற தெரிவுக்குழுவினரால் புலனாய்வு அதிகாரிகள் வரவழைக்கப்பட்டு அரச புலனாய்வு தகவல்கள் ஊடகங்களின் முன்னிலையில் வெளிப்படுத்தப்படுவதனை தாம் ஒருபோதும் அனுமதிக்கவில்லை என ஜனாதிபதி தெரிவித்தார்.

இதுவரையில் தெரிவுக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டவர்கள் சேவையிலிருந்து நீக்கப்பட்ட அதிகாரிகள் என்பதோடு, 23

### புதிய கூட்டணி தொடர்பில் பொதுஜன முன்னணி சு.க., பேச்சுவார்த்தை

(கொழும்பு)

புதிய கூட்டணியை உருவாக்குவது தொடர்பில் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கிடையேயான ஐந்தாம் கட்ட பேச்சுவார்த்தை 23

### வீடு புகுந்து நவாலியில் மாணவன் மீது வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)

நவாலியில் வீடொன்றுக்குள் புகுந்த வாள்வெட்டுக் 23

### வன்முறை வராமல் மாவட்டச் செயலர் பார்க்க வேண்டும்

பிரதமர் வேண்டுகோள்

(கொழும்பு)

நாட்டில் எந்தவொரு பிரதேசத்திலும் இனவாத வன்முறையொன்று இடம்பெறாமல் பார்த்துக் கொள்ளுமாறு மாவட்ட 23

### ஜனாதிபதி மைத்திரி தலைமையில் நேற்று இரவு விசேட அமைச்சரவைக் கூட்டம்

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்க மறுப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியின் தலைமையில் நேற்றிரவு இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டம் தொடர்பில், அதில் கலந்துகொள்ள வந்த எந்தவொரு அமைச்சரும் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்க மறுப்புத் தெரிவித்ததாக தகவல் 23

### தெரிவுக்குழுவை இரத்துச் செய்க?

ஜனாதிபதி உத்தரவிட்டதாக தகவல்கள் கசிவு

(கொழும்பு)

அண்மைய தீவிரவாத தாக்குதல் குறித்து விசாரணை செய்ய ஏற்படுத்தப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழுவை உடனடியாக இரத்துச் செய்யுமாறு ஜனாதிபதி மைத்திரி 23

### மோடி நாளை இலங்கை விஜயம் மைத்திரி, ரணில், மகிந்த சம்பந்தனுடன் பேச்சுவார்த்தை



(கொழும்பு)

இலங்கைக்கு வருகை தரும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நாளை மணித்தியாலங்களுக்குள் இலங்கைப் பயணத்தை முடித்துக் கொண்டு இங்கிருந்து 23

### வாக்காளர் பெயர்ப்பட்டியலில் 15 - 18 வயதினரையும் இணைக்கத் தீர்மானம்

(கொழும்பு)

இந்த ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் பதிவுடன் 15 தொடக்கம் 18 வயதுடைய இளையோரைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவமும் விநியோகிக்கப்படுவதாக தேர்தல்கள் ஆணைக் 24

### இலங்கைக்கான பயண எச்சரிக்கையை

பிரிட்டன், கனடா தளர்த்தியது

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நாட்டில் இடம்பெற்ற தொடர் குண்டுத்தாக்குதல்களை அடுத்து தமது நாட்டுப் பிரஜைகளுக்கு இலங்கை செல்வதற்கு விதித்திருந்த கடுமையான 24

### மூங்கிலாறில் விபத்து இளைஞன் உயிரிழப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூங்கிலாறு பகுதியில் நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளார் 24



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பான அறிவிப்பை ஐக்கிய தேசியக் கட்சி இன்று அறிவிக்கும்

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் குறித்த அறிவிப்பினை இன்று வெளியிடவுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி அறிவித்துள்ளது.

இது குறித்த அறிவிப்பு அனுராதபுரத்தில் நடைபெறவிருக்கும் 'சுசந்த அருணா' நிகழ்ச்சித் திட்டத்தில் வைத்து வெளியிடப்படும் என இராஜாங்க அமைச்சர் திலிப் வெத ஆராச்சி தெரிவித்துள்ளார்.

சுதந்திர கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவும் பொதுஜன பெரமுன உறுப்பினருக்கு பிரதமர் பதவியும் கொடுக்கப்பட வேண்டும் என சில ஊடகங்களில் செய்திகள் வெளியாகின.

கடந்த ஆட்சியில், இளைஞர் மையம் முடங்கியது என்றும் அது 'நில் பாலகாய' வுடன் மாற்றப்பட்டது. இதன் காரணமாக நாட்டின் இளைஞர்கள் என்ன செய்வது ஒரு குழப்பத்தில் இருந்தனர்.

இதனால் பாடசாலையை விட்டு வெளியேறியவர்கள் மூன்று சக்கர வாகனம் ஓட்டுனர்களாக செயல்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்றும் குறிப்பிட்டார்.

ஆனால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் கடுமையான மாற்றங்கள் கொண்டுவரப்பட்டது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கவுள்ளதாக கோட்டபாய ராஜபக்ஷ ஏற்கனவே அறிவித்துள்ளார். இந்நிலையில் தொடர்ந்தும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திர கட்சியுடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில் ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாச மற்றும் சபாநாயகர் கரு ஜயசூரிய போட்டியிடலாம் என தகவல்கள் வெளியாகின.

அந்தவகையில் அடுத்த தேர்தலில் வேட்பாளர்களை களமிறக்க தயார் என கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். (ம-3)

## வெளிநாட்டு அழுத்தத்திலேயே முஸ்லிம் அமைச்சர்கள் பதவி விலகியுள்ளனர்

### பாராளுமன்றில் உதய கம்மன்பில

(கொழும்பு)

வெளிநாட்டு அழுத்தத்திலே முஸ்லிம் அமைச்சர்கள் பதவி விலகியுள்ளனர். இது தொடர்பாக புலனாய்வுத்துறை தேடிப்பார்க்கவேண்டும். அத்துடன் இவர்களின் பதவி விலகலின் மூலம் சாதாரண முஸ்லிம்களையும் பயங்கரவாதிகளாக பார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற தேசிய பாதுகாப்பு மற்றும் இலங்கையின் உள்விவகாரத்தில் வெளிநாடுகளின் தலையீடு தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

இலங்கையில் ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களின் பின்னர் எவரும் முஸ்லிம் சமூகத்தின் மீது குற்றஞ்சாட்டவில்லை. முஸ்லிம் சமூகத்தை விரோதிகளாகப் பார்க்கவில்லை, ஆனால் தாக்குதல்களுடன் தொடர்புபட்ட பயங்கரவாதிகளுக்குத் தண்டனை பெற்றுக் கொடுங்கள் என்ற கோரிக்கையே வலுப்பெற்றது.

ஆனால் இந்த பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளுக்கு அழுத்தங்கள் கொடுக்கப்படுவதாக ஊடகங்கள் மூலம் நாம் அறிந்துகொண்டோம். முஸ்லிம் அரசியல் வாதிகள் பயங்கரவாதிகளை பாதுகாக்கின்றனர். அவர்களை பலப்படுத்துகின்றனர் என்ற குற்றச்சாட்டுக்களும் எழுந்தன. இதனால் முஸ்லிம் சமூகம் தொடர்பில் சந்தேகம்,வைராக்கியம் ஏற்பட்டது. இதனால் முஸ்லிம் வர்த்தக நிலையங்களைப் புறக்கணிக்க வேண்டும் என்ற மன நிலைக்கு மக்கள் வந்தனர் என அவர் இதன்போது தெரிவித்தார். (ம-3)

### பாராளுமன்ற

## தெரிவுக்குழு முன் சாட்சியமளிக்க உலமா சபைக்கு அழைப்பு

காத்தான்குடி பள்ளிவாசல், இலங்கை ஜமைத்துல் உலமாசபையின் பிரதிநிதிகள் நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் முன்பாக அழைக்கப்பட்டுள்ளனர். எதிர்வரும் 11ம் திகதி இவர்கள் சாட்சியமளிப்பார்கள் என கலாநிதி ஜயம்பதி விக்ரமரட்ண தெரிவித்துள்ளார்.

மேல் மாகாண ஆளுனர் அசாத் சாலியும் அதேநாளில் சாட்சியமளிக்க அழைக்கப்படலாமென தெரிகிறது.

ஜமைத்துல் உலமாசபையினர், முஸ்லிம் சிவில் அமைப்புக்கள் சில, முஸ்லிம் அடிப்படைவாத குழுக்கள் பற்றி முறையிட்ட போதும், அது குறித்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையென செய்திகள் வெளியானது குறிப்பிடத்தக்கது. (ம-3)


கல்விக் கருத்தரங்கு - யாழ்ப்பாணம்

"CHOOSE YOUR FUTURE"

உங்கள் எதிர்காலத் தெரிவுக்கு...

TO WHOM

STUDENTS
YOUNGTERS
WORKING PEOPLE

COME AND MEET US.

யாழ் மாநகரில் எம்முடன் தொடர்பு கொள்ள...

Hotel Jet Wing - Jaffna

9th June 2019
10.00 am till 3.00 pm

அனுமதி இலவசம்

with GCE
ORDINARY LEVEL
ADVANCED LEVEL

முன்கூட்டிய ஆசனப் பதிவுகளுக்கு

Call for more 0760291030

lakelandreservations@gmail.com

Course details:-

- Aviation Engineering (A.M.E) / Management
- Gateway to North America
- Teacher Training
- Business management
- Medical Programme
- English Courses

Lakeland Inter - American School
Aerolanka Aviation Academy
Management International Sri Lanka



பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று கலாநிதி பட்டம் பெறும்

கலாநிதி.தில்லையம்பலவாணர் விமலன் (Ph.D)

B.A (Geo), M.A (Sociology), M.A (Public.Admini), L.L.B (Hons)

( அகில இலங்கை சமாதான நீதவான், அரச அங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளர்)

அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கோப்பாய் பிரதேச தேசோதய சபையின் துணைத்தலைவரும் வடமாகாண காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளருமான புத்தூரைச் சேர்ந்த தில்லையம்பலவாணர் விமலன் இன்று பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் இந்தியா சத்ரபதி மகாராஜ் பல்கலைக்கழகத்தில் சமூக சேவைத் துறையில் [SOCIAL WORK] கலாநிதி பட்டம் பெறுவதையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.


தேசாபிமானி.இ.மயில்வாகனம் ஜே.பி
தலைவர்
பிரதேச தேசோதய சபை
வலி கிழக்கு. கோப்பாய்

# இலங்கையில் தமிழருக்கு இடையே ஒற்றுமையில்லை

# ஆலயங்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலுக்கு எதிராக

# இந்து மதத்தவர்கள் இணைய வேண்டும்!

## ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜி



(ஜெனிவா)

இலங்கையிலுள்ள தமிழருக்கு இடையே ஒற்றுமையில்லை, ஒற்றுமையாக இருக்கின்ற பட்சத்தில் இலங்கை தனது கடந்த கால பிரச்சினைகள் மற்றும் நிகழ்காலப் பிரச்சினைகளிலிருந்து வெளியில் வரும் எனச் சுட்டிக்காட்டிய இந்தியாவின் பிரபல இந்துமத ஆன்மீக குருவும் வாழும் கலை அமைப்பின் நிறுவுநருமான ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜி.

வடக்கு-கிழக்கிலுள்ள இந்து ஆலயங்கள் தொடர்பாக எழுந்துள்ள அச்சுறுத்தலுக்கு எதிராக இந்திய அரசு செயற்படுமெனவும் இதற்கான நியாயத்திற்காக இந்து மதத்தைச் சேர்ந்த எல்லோரும் சேர்ந்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமெனவும் தெரிவித்தார்.

மேலும் உலகத்தில் ஆன்மீகத்தன்மை குறைந்ததனால்தான் வன்முறைகளும் அநியாயங்களும் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். மனிதன் மனத்தில் நிம்மதியோடு இருந்தால் தான் ஒரு பரந்த மனப்பாங்கோடு வாழ்க்கையை நடத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

சுவிட்சர்லாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த நிலையில் அங்கு தொலைக்காட்சிக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இயந்திர வாழ்க்கைக்குள் சிக்கியிருக்கும் மனிதன் இலகு வாழ்க்கைக்கு திரும்பவேண்டுமெனில் யோகா பயிற்சியும் ஆன்மீக ஞானமும் தெரிந்திருக்க வேண்டும்.

மேலும் இந்தியாவின் தற்போதைய ஆட்சியை ஆதரித்துள்ள அவர், இந்தப் பலமான ஆட்சியின்மூலம் இந்தியாவைச் சுற்றியிருக்கிற நாடுகளுக்கு ஒரு பலமான உறுதுணைச் சக்தியாக விளங்கும் என்கிறார். குறிப்பாக இலங்கை உட்பட இந்தியாவைச் சுற்றியிருக்கிற ஏனைய நாடுகளுடனான சம்பந்தம் இணைந்து வரும் என தான் கருதுவதாகவும் தெரிவித்தார்.


இலங்கையில் இருக்கின்ற தமிழருக்கு இடையே ஒற்றுமை இல்லை. ஒற்றுமையாக இருக்கிற பட்சத்தில் இலங்கை தனது கடந்தகால பிரச்சினைகள் மற்றும் நிகழ்காலப் பிரச்சினைகளிலிருந்து வெளியில் வரும் எனத் தான் நம்புவதாகவும் குருஜி தெரிவித்தார்.

இதுதவிர இலங்கையின் வடக்கு-கிழக்கிலுள்ள இந்து ஆலயங்கள் தொடர்பாக எழுந்துள்ள அச்சுறுத்தலுக்கு எதிராக இந்திய அரசு செயற்படுமெனவும் இதற்கான நியாயத்திற்காக இந்துமதத்தைச் சேர்ந்த எல்லோருமே சேர்ந்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

ஈழத் தமிழ் மக்கள் தொடர்பாக கடந்த வாஜ்பாய் காலத்து இந்திய அரசு கொடுத்த அழுத்தம்போல் இப்போதைய சூழ்நிலையில் ஏற்படுத்துவதற்கு என்ன செய்யவேண்டுமென்று கேட்ட போது, தமிழ் மக்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து ஒரு அறிக்கையாக இந்திய அரசாங்கத்திடம் கொடுக்கின்ற பட்சத்தில் அரசாங்கம் ஏதாவது செய்யும் என தான் நினைப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் இந்திய அரசாங்கத்துடன் தமிழர் நலன் சார்ந்த இடைவினைகள் தோன்றுகின்ற சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களுக்காக எப்போதும் எதை வேண்டுமானாலும் செய்வதற்கு தான் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# விமலின் குற்றச்சாட்டுக்கெதிராக றிசாத் பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு





(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச வெளியிட்ட கருத்துக்கு எதிராக முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன் பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்தார்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் அவர் பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச முன்வைத்த பல பொய்யான குற்றச்சாட்டுக்களால் தான் உள்ளிட்ட முஸ்லிம் சமூகம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

இதன் காரணமாக விமல் வீரவன்சவின் குறுகிய அரசியல் நோக்கம் கொண்ட கருத்துக்களுக்கு எதிராக முறைப்பாடு செய்ததாக றிசாத் தெரிவித்தார். (இ-7)

# ஐ.தே.கவுக்கு புதிய தலைவர் அமைச்சர் பெரேரா தகவல்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கு புதிய தலைமைத்துவம் அவசியமாகியுள்ளது என்று அமைச்சர் அஜித் பி.பெரேரா தெரிவித்தார்.

சிங்கள தொலைக்காட்சியொன்றில் நேற்று முன்தினம் இரவு ஒளிபரப்பப்பட்ட அரசியல் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

எமது நாட்டுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் புதியதொரு தலைமைத்துவம் தேவைப்படுகின்றது. எனவே, புதிய சிந்தனைகள் மற்றும் கொள்கையுடைய தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்பு மக்களுக்கு விரைவில் கிடைக்கும்.

திட்டமிட்ட அடிப்படையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும். எக்காரணம் கொண்டும் அது ஒத்திவைக்கப்படாது. அதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தேர்ந்தெடுக்கும் ஜனநாயக உரிமையை மக்களுக்கு நிச்சயம் வழங்குவோம்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் மாற்றம் வேண்டும் என்பதே மக்களின் விருப்பமாக உள்ளது. அதை ஏற்படுத்துவதற்கு கட்சிக்குள்ளும் வெளியிலும் அழுத்தங்களைப் பிரயோகிப்போம் என அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.

அதேவேளை, சஜித் பிரேமதாஸவை முன்னிலைப்படுத்தும் வகையில் அஜித் பி. பெரேராவால் அண்மைக்காலமாக வெளியிடப்பட்டுவரும் கருத்துக்களானது, ஐ.தே.கவிலுள்ள ரணில் ஆதரவுக் குழுவை அதிருப்தியடையச் செய்துள்ளது என கட்சி வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது. (இ-7)

# நீர்கொழும்பில் நேற்று திடீரென சுற்றிவளைப்பு 402 ஐபோன் 17 ஆயிரம் சிம்களுடன் மூவர் கைது

நீர்கொழும்பில் 402 ஐபோன் 17 ஆயிரத்து 400 சிம் அட்டைகள் மற்றும் 60 ரவுட்டர்களுடன் 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய எத்துக்கல பகுதியில் நேற்று மேற்கொண்ட சோதனையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டதுடன் இந்தப் பொருட்களும் கைப்பற்றப்பட்டன.

மேலும் கைதுசெய்யப்பட்டவர்களில் சீன நாட்டவரும் அடங்குவதாகவும் மேலதிக விசாரணை தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார். (இ-7)

### "அமைதியை சீர்குலைத்து பதற்றத்தை ஏற்படுத்தும்"

# சிங்கள ராவயவின் ஊர்வலத்திற்கு நீதிமன்றம் முற்றாகத்தடை விதிப்பு!

(தெஹிவளை)

தெஹிவளை பொலிஸ் பிரிவில் சங்கைக்குரிய அக்மீமன தயாரட்ன தேரர் உள்ளிட்ட குழுவொன்று நேற்று நடத்தவிருந்த ஊர்வலத்திற்கும் கூட்டத்திற்கும் நீதிமன்றம் முற்று முழுதாகத் தடை விதித்தது.

இந்தக் கூட்டத்தின் மூலம் அமைதி சீர்குலைந்து மக்கள் மத்தியில் பதற்ற நிலை ஏற்படலாம் என தெஹிவளை பொலிஸார் கல்கிஸ நீதவான் நீதிமன்றத்திற்கு அறிவித்தனர்.

புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் பொலிஸார் முன்வைத்த இக் கோரிக்கையை ஏற்று நீதவான் நீதிமன்றம் ஊர்வலத்திற்கும் கூட்டத்திற்கும் தடை விதித்தது.

சிங்கள ராவய அமைப்பின் தலைவரான அக்மீமன தயாரத்ன தேரரால் தெஹிவளை ஜெயசிங்க விளையாட்டு மைதானத்திற்கு அருகில் நேற்று மத்ரஸா ஒன்றிற்கு எதிரான ஆர்ப்பாட்டம் நடத்த திட்டமிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கை - பாகிஸ்தான் போட்டி மழையால் இரத்து

இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையே இடம்பெறவிருந்த உலகக் கிண்ணத் தொடரின் 11 ஆவது போட்டி எதுவித பந்துகளும் வீசப்படாத நிலையில் கைவிடப்பட்டுள்ளது.

ஐ.சி.சி. 12 ஆவது உலகக் கிண்ணத் தொடரின் 11 ஆவது போட்டி நேற்று மாலை 3.00 மணிக்கு பிரிஸ்டலில் இடம்பெற விருந்தது. இந் நிலையில் தொடர்ந்து அங்கு மழை பெய்து வந்ததன் காரணமாக போட்டி நாணய சுழற்சி கூட மேற்கொள்ளப்படாது கைவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் பாகிஸ்தான் மற்றும் இலங்கை அணிகளுக்கு தலா ஒவ்வொரு புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# எனது ஆட்டத்தை என்னாலேயே நம்பமுடியவில்லை - குல்டர் நைல்



உலகக்கிண்ண தொடரின் நேற்று முன்தினம் நடை பெற்ற ஆட்டத்தில், அவுஸ்திரேலிய வீரர் கொல்டர் நைல் அபாரமாக விளையாடி அரைச்சதம் விளாசியது குறித்து பேட்டி அளித்துள்ளார்.

இங்கிலாந்தில் 12வது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர், கடந்த 30ஆம் திகதி தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் நடந்த லீக் போட்டியில் வெஸ்ட் இண்டீஸ்-அவுஸ் திரேலியா அணிகள் மோதின.

இந்தப் போட்டியில் அவுஸ்திரேலிய வீரர்கள் தொடக்கத்தில் அடுத்தடுத்து ஆட்ட மிழந்தனர். ஒருபுறம் ஸ்மித் அணியை மீட்க போராடிக் கொண்டிருக்க, மறுமுனையில் கொல்டர் நைல் அவருக்கு பார்ட்னர்ஷிப் கொடுத்து ஆடிக்கொண்டிருந்தார்.


ஆரம்பத்தில் பொறுமை காட்டிய அவர், பின்னர் அதிரடியில் இறங்கி விஸ்வரூபம் எடுத்தார். வெஸ்ட் இண்டீஸின் பந்து வீச்சை அடித்து நொறுக்கிய கொல்டர் நைல், 60 பந்துகளில் 4 சிக்சர்கள், 8 பவுண்டரிகளுடன் 92 ஓட்டங்கள் விளாசினார். அத்துடன் ஆட்டநாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டார்.

இந்நிலையில், அரைச்சதம் விளாசியது குறித்து கொல்டர் நைல் கூறுகையில், 'நான் இவ்வளவு ஓட்டங்கள் எடுப்பேன் என நினைக்கவில்லை. நானா இத்தனை ஓட்டங்கள் எடுத்தேன் பயிற்சி மேற்கொள்ளும் போது, ஸ்மித் 80 ஓட்டங்கள் எடுத்தார்.

ஆனால், நான் அதுகூட எடுக்கவில்லை. அதனால், சிறிதுநேரம் ஸ்மித்துடன் துணையாக நிற்கலாம் என நினைத்தேன். இரண்டாவது பந்தை நான் எதிர்கொண்டபோது மேலே சென்றது. நல்ல வேளையாக கேட்ச் ஆகவில்லை. இப்படியே சில பந்துகள் சென்றன. சில பந்துகள் எட்ஜில் பட்டு சென்றது.

அப்படியே எனது பேட்டிங் தொடர்ந்தது. நாங்கள் மீண்டும் போர்முக்கு வந்துள்ளோம். எங்கள் அணியில் இரண்டு உலக தரம் வாய்ந்த பந்துவீச்சாளர்கள் இருக்கின்றனர். மிட்ஜெல் ஸ்டார்க் 5 விக்கெட்டுகளை சாய்த்து அசத்தினார். அவரை மீண்டும் அணிக்கு கொண்டு வந்தது நல்ல முடிவு' என தெரிவித்துள்ளார்.

# நடுவரின் தீர்ப்பை கடுமையாக விமர்சித்த நடிகர் தனுஷ்



உலக கிண்ண கிரிக்கெட் தொடரில், ஆஸ்திரேலியா, வெஸ்ட் இண்டீஸ் அணிகள் மோதிய ஆட்டத்தில் நடுவரின் தீர்ப்பை நடிகர் தனுஷ் கடுமையாக விமர்சித்துள்ளார்.

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் ஆஸ்திரேலியா வெஸ்ட் இண்டீஸ் அணிகள் மோதின. இப்போட்டியில் ஆஸ்திரேலியா வென்றது. இப்போட்டியில்நடுவர்களின் தீர்ப்புகள் பல முறை தவறாக அமைந்தது.

வெஸ்ட் இண்டீஸ் அணி பேட்டிங் செய்யும்போது பல முறை ஆஸ்திரேலிய அணி பௌலரின் அப்பீலுக்கு நடுவர் அவுட் கொடுத்தார். ஆனால் உண்மையில் நாட் அவுட் என்பது மூன்றாம் அம்பயரிடம் ரிவ்யூ கேட்டதன் மூலம் தெரியவந்தது.

குறிப்பாக கிறிஸ் கெய்ல் விளையாடும் போது தொடர்சியாக மூன்று முறை அம்பயர் அவுட் கொடுத்தார். அதில் இரு முறை கெய்ல் தப்பித்தார். மூன்றாவது முறை கள அம்பயரின் தீர்ப்பே இறுதியானது எனும் தீர்ப்பால் கெய்ல் அவுட் ஆனார்.


நேற்று முன்தினம் போட்டியின் முடிவில் வெஸ்ட் இண்டீஸ் ரசிகர்கள் நடுவர்களின் முடிவை கடும் விமர்சனம் செய்து வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் போட்டி முடிந்த பிறகு செய்தியாளர்களிடம் பேசிய வெஸ்ட் இண்டீஸ் அணியின் கார்லஸ் பிராத் வெய்ட், நடுவர்களின் செயற்பாட்டை கடுமையாக விமர்சித்தார்.

இதையடுத்து நடிகர் தனுஷ் நடுவர்களின் தீர்ப்பை விமர்சித்து ஒரு டுவீட் பதிவிட்டிருக்கிறார்.

வெஸ்ட் இண்டீஸ் எப்பயும் வென்று விடக் கூடாது என நடுவர் விரும்புகிறார். வெஸ்ட் இண்டீஸ் கடுமையாக போராடியது. நடுவரின் செயற்பாடுகள் மிகவும் மோசமாக இருப்பது உச்சக்கட்டத்தை அடைந்திருக்கிறது. நடுவரின் செயற்பாடுகள் ஒருதலைப் பட்சமாக உள்ளது என தனுஷ் விமர்சனம் செய்துள்ளார்.

# ஸ்மித்திற்கு அதிர்ச்சியளித்த கோட்ரெலின் பிடியெடுப்பு



வெஸ்ட் இண்டீஸ் அணி வீரர் ஷெல்டன் கோட்ரெல் பிடித்த கேட்ச், சமூக வலைத் தளங்களில் வைரலாக பரவி வருகிறது.

சவுதம்டானில் நடந்த உலகக்கிண்ண லீக் போட்டியில், நேற்று முன் தினம் அவுஸ் திரேலியா மற்றும் வெஸ்ட் இண்டீஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. முதலில் ஆடிய அவுஸ்திரேலிய அணி கொல்டர் நைல்(92), ஸ்மித்(73) ஆகியோரின் உதவியுடன் 288 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் ஆடிய வெஸ்ட் இண்டீஸ் அணி 273 ஓட்டங்களுக்கு ஆல்-அவுட் ஆகி தோல்வியுற்றது. அதிகபட்சமாக ஹோப் 68 ஓட்டங்களும், ஹோல்டர் 51 ஓட்டங்களும் எடுத்தனர்.

இந்தப் போட்டியில், அவுஸ்திரேலிய அணி துடுப்பாட்டம் செய்துகொண்டிருந்த போது, ஸ்டீவ் ஸ்மித் அடித்த ஷாட்டை வெஸ்ட் இண்டீஸ் வீரர் ஷெல்டன் கோட்ரெல் அபாரமாக கேட்ச் பிடித்து அசத்தினார்.

சிக்ஸ் போக வேண்டிய பந்தை கையால் தடுத்த ஷெல்டன், பின்னர் தடுத்த வேகத்திலேயே பவுண்டரி எல்லைக்கு சென்று திரும்பி கேட்ச் செய்தார்.

இதனைக் கண்டு ஸ்மித் அதிர்ச்சி யடைந்த நிலையில், அப்போது மைதானத்தில் அமர்ந்திருந்த ரசிகர்கள் பலரும் எழுந்து நின்று, கைதட்டி ஆரவாரம் செய்தனர். இதுதொடர்பான வீடியோ தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவிவருகிறது.

# போருக்கா போய் உள்ளார் டோனி - பாகிஸ்தான் அமைச்சர்



டோனி என்ன மகாபாரதப் போருக்கா போயிருக்கிறார் என்று பாகிஸ்தான் அமைச்சர் ஆவேசமாக கேள்வி எழுப்பியுள்ளார்.

தென் ஆபிரிக்காவுக்கு எதிரான உலகக் கிண்ண லீக் போட்டியில், இந்திய அணியின் விக்கெட் கீப்பர் டோனி தனது கையில் அணிந்திருந்த கையுறையில், ராணுவத்தில் ஒரு பிரிவான பலிதான் ரெஜிமென்டின் முத்திரை இருந்தது.

இக்காட்சி கமெராவில் Zoom செய்யப்பட்டு, டோனியின் கையுறையில் ராணுவ பலிதான் பிரிவு முத்திரை இருப்பது காட்டப்பட்டது. இதனைப் பார்த்த ரசிகர்கள், டோனியின் நாட்டுப்பற்றை புகழ்ந்துள்ளனர்.

மேலும், சமூக ஊடகங்களில் அவரை பாராட்டி வரும் பலரும், குறித்த முத்திரை படத்தை வைரலாக்கி வருகின்றனர். எனினும், ஐ.சி.சி நடத்தும் உலகக்கிண்ண போட்டியில் ஒரு நாட்டின் ராணுவ முத்திரையைப் பதித்து விளையாடுவதை விரும்ப வில்லை.

எனவே, டோனியின் கையுறையில் இருக்கும் முத்திரையை நீக்குமாறு பி.சி.சி.ஐ அமைப்புக்கும், டோனிக்கும் ஐ.சி.சி அறிவுரை வழங்கியது.

இந்நிலையில், பாகிஸ்தானின் பிரதமர் இம்ரான் கான் அமைச்சரவையில், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சராக இருக்கும் பவத் சவுத்ரி, கையுறை அணிந்த டோனியின் செயலுக்கு பாராட்டு தெரிவிக்கும் ஊடகங்கள் மீது கடும் விமர்சனம் வைத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், 'இங்கிலாந்துக்கு டோனி கிரிக்கெட் விளையாடத்தான் போயிருக்கிறார். மகாபாரதப் போருக்கு செல்லவில்லை. இந்திய ஊடகங்கள் என்ன ஒரு முட்டாள்தனமான விவாதத்தை வைக்கின்றன.

போரைப் பற்றி கவலைப்படும் சில இந்திய ஊடகங்கள், தொழில்ரீதியாக டோனியை ராணுவ வீரராக்கி, அவரை சிரியா, ஆப்கானிஸ்தான் அல்லது ரவாண்டாக்கு அனுப்பி வையுங்கள். முட்டாள்கள்' என தெரிவித்துள்ளார்.

# பௌத்த பிக்குமாரின் அத்துமீறிய செல்வாக்கிற்கு எதிராக

# ஜனாதிபதி, பிரதமர் கடும் நிலைப்பாட்டை எடுக்கவில்லை

## த ஹிந்து விசனத்துடன் சுட்டிக்காட்டு



(டில்லி)

**நாசகாரத்தனமான ஒரு உள்நாட்டுப் போரிலிருந்து விடுபட்ட இலங்கை, இனங்களுக்கிடையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதிலும் புதியதொரு ஒப்புரவான சமூக ஒழுங்கை உருவாக்குவதிலும் கவனத்தைக் குவிக்க வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கும் இந்தியாவின் பிரபல தேசிய ஆங்கிலத் தினசரிகளில் ஒன்றான "த ஹிந்து", உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்களுக்குப் பிறகு நாட்டில் தோன்றியுள்ள அரசியல் நிலைவரத்தின் மீது சில பௌத்த பிக்குமார், அவர்களது அளவுக்கு ஒவ்வாத முறையில் செல்வாக்குச் செலுத்துவதற்கு எதிராகக் கடுமையான நிலைப்பாட்டை எடுக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தவறியிருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ளது.**

இலங்கையில் முஸ்லிம் அமைச்சர்களின் இராஜினாமா தொடர்பாக ஆசிரியர் தலையங்கத்தைத் தீட்டியிருக்கும் அந்தப் பத்திரிகை, முஸ்லிம் சமூகத்தவர்களை ஆபத்தானவர்களாகக் காட்டும் ஒருங்கிணைந்த திட்டமிட்ட பிரசாரமொன்று இப்போது முன்னெடுக்கப்படுகிறது என்று விசனம் வெளியிட்டுள்ளது.

ஆசிரியர் தலையங்கத்தின் முழு விபரம் வருமாறு,

இஸ்லாமியத் தீவிரவாதக் குழுவொன்றால் கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறன்று நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களுக்குப் பிறகு இலங்கைத் தீவில் வெளிக்கிளம்பிய புதிய பிளவொன்றை இரு முஸ்லிம் ஆளுநர்களும், ஒன்பது அமைச்சர்களும் கூண்டோடு இராஜினாமா செய்த சம்பவம் மேலும் ஆழப்படுத்தியிருக்கிறது.

பயங்கரவாதக் குழுக்களுக்கு ஆதரவளித்ததாகவும், விசாரணைகளில் தலையீடு செய்ததாகவும் மாகாண ஆளுநர்களான அஸாத் சாலி, எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா மற்றும் அமைச்சர் றிசாத் பதியுதீன் ஆகிய மூவர் மீதும் குற்றம்சாட்டிய சிங்கள பௌத்த கடும் போக்காளர்கள் அவர்களைப் பதவிவிலகவேண்டுமெனக்கோரினர்.

அந்த மூன்று முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கும் எதிராக சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் எந்தவொரு சான்றுமே விசாரணையாளர்களால் கண்டுபிடிக்கப்படாத ஒரு நேரத்தில் இவ்வாறாக ஆக்ரோஷமான கோரிக்கை முன்வைக்கப்பட்டதால் சினமடைந்த அரசாங்கத்தில் அங்கம் வகித்த சகல முஸ்லிம் அமைச்சர்களும் தங்களது பதவிகளை இராஜினாமாச் செய்து தங்களுக்கிடையிலான ஒருமைப்பாட்டை வெளிக்காட்டினார்கள்.

பாராளுமன்ற உறுப்பினரான பௌத்த பிக்கு அத்துரலியே ரத்ன தேரர் கண்டியில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்தலையடுத்து முஸ்லிம்களுக்கும், இந்த அமைச்சர்களுக்கும் எதிரான பிரசாரம் தீவிரமடையத் தொடங்கியது. தேரருக்கு ஆதரவாக ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

கிறிஸ்தவ தேவாலயங்களிலும், ஆடம்பர ஹோட்டல்களிலும் 250 இற்கும் அதிகமானவர்களை பலியெடுத்த குண்டுத்தாக்குதலின் விளைவாகத் தோன்றிய கொந்தளிப்பு சகல இனத்தவர்கள் மத்தியிலும் பீதியையும், அவநம்பிக்கையையும் ஏற்படுத்தியது. முஸ்லிம்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயல்களும், அச்சுறுத்தல்களும் குண்டுத் தாக்குதல்களின் விளைவான தன்னிச்சையான செயற்பாடுகளாக அன்றி, திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டவையாகவே தோன்றின. இஸ்லாமியத் தீவிரவாத மதப்பிரசாரகர் சஹ்ரானின் தலைமையிலானதும், தற்கொலைக் குண்டுதாரிகளை உள்ளடக்கியதுமான தேசிய தௌஹீத் ஜமாத் இயக்கம் பாதுகாப்புப் படையினரதும், பொலிஸாரினதும் துரித நடவடிக்கைகளால் நிர்மூலம் செய்யப்பட்டு விட்டதையும் பொருட்படுத்தாமல் முஸ்லிம்கள் மீது வன்முறைகள் தூண்டப்பட்டன.

குண்டுத்தாக்குதல்களை அடுத்து நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டார்கள். இஸ்லாமிய அரசின் பிரசாரங்களினால் தூண்டிவிடப்பட்டிருக்கக்கூடிய சதித்திட்டமும் அம்பலமானது. குண்டுத் தாக்குதல்கள் நடைபெறக்கூடிய ஆபத்திருப்பதாக முன்கூட்டியே கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவல்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கத் தவறியதற்காக அரசாங்கத்தைப் பொறுப்புக்கூற வைக்காமல் முஸ்லிம்சமூகம் இலக்கு வைக்கப்படுகின்றமை ஆச்சரியமாக இருக்கின்றது. எந்தவொரு சமூகத்திலும் இருக்கக்கூடிய இனக்குழும பெரும்பான்மைவாத உணர்வுகள் எப்போதுமே குற்றம்சாட்டுவதற்கு ஒரு அடுத்தவரையும் புதிய எதிரிகளையும் தேடுவதில் நாட்டம் காட்டும்.

அதுவும் குறிப்பாக மத ரீதியாகத் தூண்டிவிடப்பட்ட ஒரு தாக்குதலின் விளைவாகப் பேரனர்த்தம் நிகழ்ந்தால் அந்த பெரும்பான்மைவாத உணர்வு மேலும் தீவிரமடையும். ஆனால் குண்டுத்தாக்குதல்களை நடத்தியவர்களுக்கு எதிரான ஆவேசம் செல்வாக்கு மிக்க சில பிரிவினரால் முஸ்லிம்களை நோக்கிய வெறுப்பாகவும், பீதியாகவும் மாற்றப்பட்டிருப்பது இலங்கையின் துரதிர்ஷ்டமாகும்.

நாட்டின் இரு பிரதான தேசிய அரசியல் கட்சிகளைச் சேர்ந்த ஜனாதிபதியும், பிரதமரும் தற்போதைய அரசியல் நிலைவரத்தின் மீது சில பௌத்த பிக்குமார் தங்களது அளவிற்கு ஒவ்வாத முறையில் செல்வாக்குச் செலுத்துவதற்கு எதிராக உறுதியான ஒரு நிலைப்பாட்டை எடுக்கவில்லை.

வெறுப்புணர்வுப் பிரசாரங்களைப் பலர் கண்டுக்கவுமில்லை. ஆனால் நிதியமைச்சர் மங்கள சமரவீர, பயங்கரவாதிகளுடன் தொடர்பு கொண்டிருந்ததாக தனது அமைச்சரவை சகாக்களில் ஒருவருக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டைக் கண்டித்ததுடன், இன மற்றும் மத வெறுப்புணர்வைத் தூண்டுவதற்கு முயற்சிக்கின்ற அரசியல்வாதிகள், மதத்தலைவர்கள், ஊடக நிறுவனங்களைக் கடுமையாகத் துணிச்சலுடன் சாடினார்.

முஸ்லிம்கள் கணிசமானளவில் வாழும் சில பகுதிகளில் கடந்த மாதம் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. அந்த சமூகத்தை ஆபத்தானவர்களாகக் காட்டும் ஒருங்கிணைந்த திட்டமிட்ட பிரசாரமொன்று இப்போது உக்கிரமாக முன்னெடுக்கப்படுகிறது.

சிங்களப் பெண்களை வஞ்சகத்தனமான முறையில் முஸ்லிம் வைத்தியர்கள் மலடாக்கினார்கள் என்று முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான பிரசாரத்தின் உக்கிரத்தை வெளிப்படுத்துகிறது. நாசகாரத்தனமான உள்நாட்டுப் போரொன்றிலிருந்து விடுபட்டிருக்கும் இலங்கை, இனங்களுக்கிடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதிலும் ஒப்புரவான ஒழுங்கொன்றைத் தோற்றுவிப்பதிலும் கவனத்தைச் செலுத்த வேண்டியது அவசியமாகின்றது. சமூகங்களுக்கிடையிலான மோதல் இலங்கைக்கு மேலும் பாதகமான விளைவுகளையே கொண்டுவரும் என அந்த ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

## இராசி பலன்

**மீனம்:** நீண்ட நாட்களாக திட்டமிட்டிருந்த காரியமொன்று இன்று கைகூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மேடம்:** எடுத்த காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், பெற்றோர் நலனில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்:** சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், தொழில் போட்டிகள் மாறும், விடாமுயற்சிக்கு இன்று பரிசு கிடைக்கும், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**மிதுனம்:** சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும், கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள், வெளியூர்ப் பயணங்களால் ஆதாயம் கிடைக்கும்.

**கும்பம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவமொன்று இடம்பெறலாம், கூட்டுத் தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கலாம், கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| | | சூரி, சுக் | செவ், புத ராகு |
| | இராசி பலன் | | சந் |
| | | | |
| சனி, கேது | குரு | | |

கிரகநிலை
சந்திராஷ்டமம்
உத்தராடம், திருவோணம்

08.06.2019
வைகாசி 25, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு
பஞ்சமி காலை 7.21 மணிவரை
சஷ்டி பின்னிரவு 4.56 மணிவரை
ஆயிலியம் முன்னிரவு 7.30 மணிவரை
சுபநேரம் 2.52-4.22 மணிவரை
இராகுகாலம் 8.52-10.22 மணிவரை
உலக சமுத்திர தினம்,
சஷ்டி விரதம்

வளவன்

**கடகம்:** உங்களைப் பற்றி விமர்சிக்கும் சிலரிடம் எதிர்த்துப் பேசாமல் செல்வீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், ஆழ்ந்த சிந்தனையுண்டு.

**மகரம்:** மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிம்மம்:** எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது.

**தனுசு:** எதையும் பலமுறை யோசித்து செய்வது நல்லது, பிரயாண பயமுண்டு, கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, வேலைச்சுமை கூடும், விரயங்கள் கூடும் நாள்.

**விருச்சிகம்:** விருந்தினர் வருகையுண்டு, வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும்.

**துலாம்:** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**கன்னி:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

# மாணவர்கள் நால்வர் சீனச்சுற்றுப் பயணத்திற்குத் தெரிவு



(யாழ்ப்பாணம்)

"தோழர்களாகிய நூல்களே நேசமிகு நண்பர்கள்" தேசிய மட்ட வாசிப்புப் போட்டியில் சந்திர குமார் சாருஜன், வரதராஜா சுமி த்திரா, மகேஸ்வரக் குருக்கள் தக்ஷிகா, தெய்வேந்திரராஜா கிருத்திகன் ஆகியோர் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இருந்து சீனாவுக்கு சுற்றுப்பயணம் செல்வதற்காக தேசிய ரீதியில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (5-7)

# கல்வி இராஜாங்க அமைச்சர் பொலிஸ் நிலையத்துக்கு விஜயம்



(கரணவாய்)

வடமராட்சிக்கு விஜயம் மேற்கொண்ட கல்வி இராஜங்க அமைச்சர் திருமதி. விஜயகலா மகேஸ்வரன் நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கும் சென்றார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவுகளில் இடம்பெற்ற சமுர்த்தி உரித்து வழங்கும் நிகழ்வுக்கு சென்றிருந்த அமைச்சர் பிற்பகல் நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்குச் சென்றார்.

நெல்லியடி பொலிஸ் நிலையம் உள்ள காணி தனியாருக்கு சொந்தமான காணி எனவும் அதனை விடுவித்துத் தருமாறு அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட நிலையிலே அங்கு சென்ற அமைச்சர் நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி ஜெயதிலகவுடன் அது சம்பந்தமாக கலந்துரையாடியதுடன் அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார். (5-60)

# ஆனல்ட் அடுத்த மாதம் அமெரிக்கா செல்கிறார்



(யாழ்ப்பாணம்)

உலகத் தமிழராராட்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக யாழ். மாநகரசபை முதல்வர் இ. ஆனல்ட் எதிர்வரும் மாதம் அமெரிக்கா செல்லவுள்ளார்.

அமெரிக்காவிலுள்ள லியானோஸ் நகரத்தில் இடம்பெறவுள்ள குறித்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக யாழ்.மாநகர முதல்வருக்கு யாழ்ப்பாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி குறித்த அழைப்பிதழ் அனுப்பப்பட்டுள்ளது. (இ-10)

# யாழ்.மாநகர சபை கழிவகற்றலை தனியார் மயமாக்கக் கோரிக்கை

யாழ்.மாநகரசபை பகுதிகளில் முறையற்ற விதத்தில் கழிவகற்றல் செயற்பாடு இடம்பெறுவதால் கழிவகற்றலைத் தனியார் மயப்படுத்துமாறு யாழ்.மாநகரசபை உறுப்பினர்கள் சபையில் கோரிக்கை முன்வைத்தனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற சபை அமர்வில் கலந்துகொண்ட உறுப்பினர்களில் அதிகமானோர் குறித்த கோரிக்கையை யாழ்.மாநகர முதல்வரிடம் முன்வைத்தனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த சபை முதல்வர், மக்களுக்குச் சேவையாற்றுவதற்காகவே நாம் அனைவரும் கட்சி பேதங்களுக்கு அப்பால் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம். மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படும் வகையில் தொடர்ந்து செயற்பட்டால் மக்களுக்காக தீர்க்கமான முடிவொன்றை எடுக்க நேரிடும் என அவர் மேலும் தெரிவித்தார்.(5-10)

# நிர்வாகத் தெரிவு

(சாவகச்சேரி)

மீசாலை தெற்கு மதுவன் சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகத் தெரிவு நாளை 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் இடம்பெறவுள்ளதாக சனசமூக நிலையத் தலைவர் நா.சரவணமுத்து தெரிவித்துள்ளார்.

குறித்த நிகழ்வில் விருந்தினராக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் சுவீற்றா கலந்து கொள்வார். (5-30)

## கல்வியியற் கல்லூரியில்

# கழிவுப் பொருட்களிலிருந்து கூட்டெரு தயாரிக்கும் பயிற்சி



(யாழ்ப்பாணம்)

"நஞ்சற்ற காய்கறிகளையும் பழவகைகளையும் உணவுகளையும் உண்ண முடியும்" எனும் தொனிப் பொருளில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் பயிலும் ஆசிரிய மாணவர்களுக்கு கல்லூரி சுற்றாடல் மன்றத்தின் ஏற்பாட்டில் வடமாகாண விவசாயப்பயிற்சி திணைக்களத்தின் அனுசரணையுடன் கூட்டெரு தயாரிக்கும் பயிற்சியும் கல்லூரி வளவில் இருக்கும் மாமரங்களை கவ்வாது பண்ணும் பயற்சியும் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி சு.பரமானந்தம் தலைமையில் இடம்பெற்ற இப்பயிற்சி நெறிக்கான ஒழுங்குகளை கல்லூரியின் விரிவுரையாளரான நா. அம்பிகைபாகன் மேற்கொண்டு இருந்தார். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி வளவில் இருக்கும் பெருமளவிலான மரங்கள் மூலமாக சேகரிக்கப்படும் சேதனக்கழிவுகளை ஒன்று சேர்த்து அவை விரயமாகாமல் அவற்றை பயனுள்ள முறையில் கல்லூரிக்குள்ளேயே விவசாய நடவடிக்கைகளில் பயன்படுத்துவதற்காக இச் செயற்றிட்டம் ஒழுங்கமைக்கப்பட்டது.

வடமாண விவசாயத்திணைக்களத்துடன் இணைந்து காலத்திற்கு ஏற்ற ஒரு முன்னோடி செயற்றிட்டமாக கல்லூரியின் சுற்றாடல் மன்றத்தினர் இதை ஒழுங்கமைத்தனர்.

இப்பயிற்சிநெறியில் ஆசிரிய மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்காக வடமாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி. அஞ்சனா சிறிரங்கன் நேரடியாகப் பங்கு கொண்டு பயிற்சியை வழங்கினார். அவருடன் விவசாயத் திணைக்களத்தின் விவசாய போதனாசிரியர்களான சரண்ஜா நகுலேஸ்வரன், மதுபாஜினி அழகேசன் ஆசிரிய மாணவர்களுக்கு மாமரங்களை கவ்வாது பண்ணும் பயிற்சியை வழங்கினர். இவர்களுடன் விவசாயத்திணைக்களத்தை சேர்ந்த துறைசார்ந்த ஊழியர்கள் அறுவர் இச்செயற்றிட்டத்தில் இணைந்து கொண்டனர். வெற்றிகரமாக அமைந்த இச் செயற்றிட்டம் அனைத்துப் பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்துமிடத்து இயற்கை உரப்பாவனையை விவசாய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதை ஊக்குவிக்கலாம் என கல்லூரியின் பீடாதிபதியும் மாகாண விவசாயப்பணிப்பாளரும் தெரிவித்தனர். இவற்றை பார்வையிட்ட மக்கள் இச்செயற்றிட்டத்தில் பங்கு கொண்ட அனைவரையும் பாராட்டினார்கள்.

மேலும் இச் செயற்றிட்டத்தில் யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதி கலாநிதி பாலசுப்பிரமணியம் தனபாலன். சுற்றாடல் மன்ற காப்பாளர் பாசிங்கம் பாலகணேசன். விரிவுரையாளர்களான அ.ஜேம்ஸ், நா. நாகேந்திரம், கல்லூரியின் கல்விசார ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இத்திட்டத்தை சரியாக நடைமுறைப்படுத்தினால் நஞ்சற்ற காய் கறிகளையும் பழவகைகளையும் உணவுகளையும் உண்ண முடியும் என்பது செயற்றிட்டத்தின் தொனிப் பொருளாக அமைந்தது. (5-7)




# கற்றல் உபகரணம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு நாளை 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொள்வார். (இ-5)




முன்னாள் பிரதி சபாநாயகரும் பாராளுமன்ற உறுப்பினருமான அமரர் முருகேசு சிவசிதம்பரத்தின் 17 ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வு கரவெட்டி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கடந்த புதன்கிழமை நெல்லியடி நகரில் உள்ள அவரின் உருவச் சிலைக்கு முன்பாக நடைபெற்றது. இந் நிகழ்வில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்து கொண்டார்.

(படங்கள்:- கரணவாய் செய்தியாளர்)

# பயங்கரவாதி சஹ்ரானின் சகோதரரின் சடலம் நேற்று மீண்டும் தோண்டி எடுப்பு



(சாய்ந்தமருது)

அம்பாறை சாய்ந்தமருது பிரதேசத்தில் குண்டை வெடிக்கச் செய்து கொண்டு உயிரிழந்த பயங்கரவாதி சஹ்ரானின் சகோதரனுடைய புதைக்கப்பட்ட சடலம் நீதிமன்ற உத்தரவுக்கமைய நேற்று மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டது.

அம்பாறை பிரதான நீதவான் அசங்க ஹெட்டிவத்தவின் முன்னிலையில் இந்த தோண்டும் பணி முன்னெடுக்கப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி குண்டை வெடிக்கச் செய்து கொண்டு இவன் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு உயிரிழந்தவர்களின் உடல் உறுப்புக்கள் ஏற்கனவே அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்ததாகவும், அதில் சிலது பழுதடைந்து காணப்படுவதனால், தேவையான சில உறுப்புக்களைப் பெறுவதற்கே நேற்று மீண்டும் தோண்டப்பட்டதாகவும் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார். (இ-7)

# விண்ணப்பத் திகதி நீடிப்பு

கடந்த மாதம் 5ஆம் திகதி வெளியான வர்த்தமானியின் பிரகாரம் வனபரிபாலனத் திணைக்களத்திலுள்ள வன வெளிக்கள உதவியாளர் ஆட்சேர்ப்பிற்கான விண்ணப்ப முடிவுத்திகதி இம் மாதம் 14 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டதாகக் காடு பேணுதற் தலைமை அதிகாரி டபிள்யூ ஏ.சீ.வேரகொட தெரிவித்தார். (இ-10)

# உரும்பிராய்ப் பகுதியில் தங்கச் சங்கிலி அறுப்பு

உரும்பிராய் வடக்குப் பகுதியில் வீதியால் சென்ற பெண்ணின் தங்கச் சங்கிலி கடந்த 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை அறுக்கப்பட்டது. குறித்த சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது, குறித்த பெண் வீதியால் சென்று கொண்டிருந்த வேளை மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாத நபர்களினால் கழுத்தில் அணிந்திருந்த தங்கச் சங்கிலி அறுத்துச் செல்லப்பட்டது. சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5-10)

# ஊடகக் கற்கைகள் துறை பெயர்ப் பலகை திரை நீக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடத்தின் ஊடகக் கற்கைகள் துறைப் பெயர்ப்பலகை திரை நீக்க நிகழ்வு நாளை மறுதினம் 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணியளவில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தகுதிவாய்ந்த அதிகாரி சிரேஷ்ட பேராசிரியர் கே.கந்தசாமி, சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கலைப் பீட பீடாதிபதி கலாநிதி கே.சுதாகர் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# ஞானசார தேரருக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டுப் பயணத் தடை நீக்கம்

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரியொருவரின் கடமைக்கு இடையூறு செய்தமை தொடர்பிலான வழக்கில், பொதுபல சேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டுப் பயணங்களுக்கான தடை உத்தரவை தற்காலிகமாக நீக்குவதற்கு கொழும்பு மேலதிக நீதவான் காஞ்சனா நெரஞ்ஜலா டி சில்வா நேற்று உத்தரவு பிறப்பித்தார்.

ஜப்பானில் நடைபெறும் செயலமர்வொன்றில் கலந்து கொள்ளச் செல்வதற்காக, தனது வெளிநாட்டுப் பயணத் தடையை நீக்குமாறு கோரி நீதிமன்றத்திடம் விடுத்த வேண்டுகோளின் பேரில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதற்கான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சட்டமா அதிபரின்



ஆலோ சனையின்படி, அரச ஊழியரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்திய சம்பவம் குறித்த குற்றப்பத்திரம் ஒழுங்க மைக்கப்பட்ட குற்றவியல் பிரிவால் நீதிமன்றத்தில் சமர்ப் பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## நாகரிகம் பற்றிப் பேச வேண்டாம்

# தவிசாளரை வெளியேற்றிய கூட்டமைப்பு உறுப்பினர்

## சமாதானப்படுத்தி அழைத்து வந்த ஐ.தே.க.உறுப்பினர்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை விசேட அமர்வு இடம் பெற்றுக் கொண்டிருந்த போது தவிசாளருக்கும் கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவருக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்று இறுதியில் தவிசாளர் சபையை விட்டு வெளியேறிய சம்பவம் இடம்பெற்றது.

பொதுச் சந்தையைக் குத்தகைக்கு வழங்கும் தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்வதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட விசேட அமர்வின் தொடக்கத்தில் இச் சம்பவம் இடம்பெற்றது. குத்தகை வழங்கும் தீர்மானத்தைக் கண்டித்து சந்தை வியாபாரிகள் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கவுள்ளனர் என்ற பத்திரிகைச் செய்தியைப் பார்த்தவுடன் இந்த மீள் பரிசீலனைக் கூட்டம் நடத்தி இருக்க வேண்டும்.


அதை விடுத்து ஆர்ப்பாட்டம் செய்து முடித்த பின்னர் மீள் பரிசீலனை செய்து பிரியோசனம் இல்லை எனக் கடுந்தொனியில் கூட்டமைப்பு உறுப்பினர் கருத்து தெரிவித்த வேளையில் தவிசாளர் குறுக்கிட்டு சபையில் நாகரிகமாக நடந்துகொள்ள வேண்டும். கடுந்தொனியில் பேச வேண்டாம் எனக் கூறினார்.

தவிசாளரின் கருத்தை எதிர்த்து கூட்டமைப்பு உறுப்பினர் சபைத் தீர்மானத்தை மீறும் நீங்கள் நாகரிகம் பற்றிப் பேச வேண்டாம் எனப் பதிலடி கொடுத்துள்ளார். இதனால் கோபமடைந்த தவிசாளர் உறுப்பினரை சபையில் இருந்து வெளியேறுமாறு கூற அதற்கு மறுப்புத் தெரிவித்த உறுப்பினர் வேண்டுமானால் நீங்கள் சபையை விட்டு வெளியேறுங்கள் எனக் கூறினார்.

இதனால் கோபமடைந்த தவிசாளர் உடனடியாக சபையை விட்டு வெளியேறினார். பின்னர் சுமார் அரை மணி நேரத்தின் பின்னர் ஐ.தே.கட்சி உறுப்பினர் சர்வானந்தன், தவிசாளரை சமாதானப்படுத்தி சபைக்கு அழைத்து வந்தார்.

உறுப்பினர் தவிசாளரை வெளியேறக் கூறியமைக்கு சில உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்திருந்தனர். சில உறுப்பினர்கள் மௌனமாக இருந்தனர். தவிசாளரும் குறித்த உறுப்பினரும் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் இந்த உறுப்பினர் சந்தைக் குத்தகை விடயத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு சார்பாக நடந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (இ)

# முழுமையான அரேபிய தேசமாக மாறிய காத்தான்குடி! வெடிக்கும் புதிய சர்ச்சை




(காத்தான்குடி)

கிழக்கிலங்கையின் சில பகுதிகள் முழுமையாக அரேபிய தேசமாக மாறியுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. இலங்கை அரசியலமைப்புக்கு அமைய தேசிய மொழியான சிங்களம், தமிழ் மொழிகளை தவிர்த்து அரேபிய மொழிக்கு முதன்மை இடம் வழங்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசியலமைப்பை மீறி அரேபிய மொழிக்கு முதன்மையிடம் வழங்கியுள்ளமை விபரீத விளைவுகளை ஏற்படுத்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

காத்தான்குடியின் நுழைவிடத்தில் உள்ள வரவேற்பு பலகையில் ஆங்கிலம், தமிழ், சிங்களம் மொழிக்கு மேலதிகமாக அரேபிய மொழியில் எழுதப்பட்டுள்ளது.

அரபு நாடுகளை போன்று நிர்மாணிக்கப்பட்டுள்ள காத்தான்குடியில், தேசிய மொழிகளான சிங்களம் மற்றும் தமிழ் மொழி தவிர்க்கப்பட்டுள்ளது. அரேபிய மொழிக்கு முதலிடம் வழங்கப்பட்டுள்ளதாக குறித்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

காத்தான்குடி பொலிஸ் நிலையத்திலுள்ள காட்சிப்பலகையிலும் அரேபிய மொழியே பயன்படுத்தப்பட்டுள்ளது.

சில இடங்களில் முதலில் அரேபிய மொழியிலும் பின்னர் தமிழ், சிங்கள மொழியும் பயன்படுத்தப்பட்டுள்ளது. காத்தான்குடிக்குள் நுழையும் வாயிலில் அமைந்துள்ள பெயர்ப் பலகையும் அரேபிய மொழியிலேயே காணப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தில் மேலும் பல நகரங்களில் இதே நிலைமை காணப்படுகிறது. அத்துடன் திருகோணமலை - மூதூர் நகரில் அரச நிறுவனமான வலய கல்வி அலுவலகத்திலும் அரேபிய மொழியில் வரவேற்பு பலகை காணப்படுகின்றது.

அத்துடன் காத்தான்குடி முற்றிலும் அரேபிய மொழிக்கு இணையான வகையில் மாறிக் கொண்டிருப்பதாக குறித்த ஊடகம் குற்றம் சாட்டியுள்ளது. (இ-7)

# புதிதாக வழங்கப்படுகின்ற சமுர்த்தி உரித்துப் பத்திர திட்டம் நிலையானதா?

## நாடாளுமன்றில் டக்ளஸ் கேள்வி



(கொழும்பு)

நாட்டில் ஏற்கனவே சுமார் 14 இலட்சம் சமுர்த்திப் பயனாளிகள் இருக்கின்ற நிலையில், மேலும் 6 இலட்சம் பேருக்கு புதிதாக சமுர்த்தி உரித்துப்பத்திரம் வழங்குகின்ற நிகழ்வுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

ஏற்கனவே சமுர்த்தித் திட்டம் மூலமாகப் பயன்களைப் பெறுகின்றவர்கள் அங்கத்துவ மற்றும் உரித்துப் பத்திரங்களைப் பூர்த்தி செய்தும், அந்த ஆவணங்கள் பிரதேச செயலக மட்டத்தில் பேணப்பட்டும், பயனாளிகளாவோர் சிறு குழுவில் இணைந்தும், சமுர்த்தி வங்கியில் கணக்குகளை ஆரம்பித்தும், சேமிப்புக்களை மேற்கொண்டுமே சமுர்த்திப் பயனாளிகளாக உள்வாங்கபட்டுள்ளனர் எனத் தெரிய வருகின்றது. இவ்வாறு சமுர்த்திப் பயனாளிகளாக உள்வாங்கப்பட்டவரது குடும்பம் சார்ந்து பிறப்பு, திருமணம், நோய்வாய்ப்படல், இறப்பு போன்ற சம்பவங்களின் போது, சமூக நன்மைகள் அக்குடும்பங்களுக்குக் கிடைத்து வருகின்றன.

இத்தகைய நிலையில், தற்பாது வழங்கப்பட்டு வருகின்ற சமுர்த்தி உரித்துப் பத்திரம் என்பது எமது மக்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்களையே தோற்றுவித்திருக்கின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். இது ஏதோவொரு ஏமாற்று ஏற்பாடோ? என்ற சந்தேகம் எமது மக்களிடையே ஏற்பட்டிருக்கின்றது. இந்த நிலையில், இவ்விடயம் தொடர்பில் பின்வரும் கேள்விகள் எழுகின்றன:-

தற்போது புதிதாக வழங்கப்படுகின்ற சமுர்த்தி உரித்துப் பத்திரம் மூலமான திட்டம் நிலையானதா? எந்த வகையில்?

ஏற்கனவே சமுர்த்திப் பயனாளிகளாக இருக்கின்றவர்களைச் சமுர்த்தித் திட்டத்தில் உள்வாங்கப்பட்டபோது, கடைப்பிடிக்கப் பட்ட நடைமுறைகள் புதிதாக தற்போது இணைத்துக் கொண்டுள்ளவர்கள் தொடர்பில் கடைப் பிடிக்கப்பட்டுள்ளனவா? எந்த வகையில்?

சமுர்த்திப் பயனாளிகளாகத் தற்போது இருப்பவர்கள் ஒரு குறிப்பிட்ட காலப் பங்களிப்பைச் செலுத்திய பின்னரே சமூகப் பாதுகாப்பு நன்மைகளைப் பெறலாம். ஆனால் புதிய பயனாளிகள் எந்த வகையில் பெற்றுக் கொள்வார்கள்?

ஏற்கனவே சமுர்த்திப் பயனாளிகளின் பிள்ளைகளுக்குக் கல்விக் கொடுப்பனவு என்ற வகையில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் உயர்தரம் கற்பதற்கு இரண்டு வருடங்களுக்கு மாதம் 1,500 ரூபா வீதமாக ('சிப்தொர') புலமைப்பரிசில் திட்டம் நேர்முகத் தெரிவுக்கூடாக மேற்கொள்ளப்பட்டு வந்தது. அந்த முறை இனியும் தொடருமா? அல்லது எல்லோருக்கும் வழங்கப்படுமா?

ஏற்கனவே சமுர்த்திப் பயனாளிகளாக இருப்பவர்களில் ஒரு பகுதியினரை இரத்துச் செய்து விட்டு புதிய தெரிவுகளைச் சேர்த்துக் கொள்கின்றீர்களா? அல்லது ஏற்கனவே இருப்பவர்களுக்கு மேலதிகமாக இவ் 6 இலட்சம் பயனாளிகளை இணைத்துக் கொள்கின்றீர்களா?

மேற்படி புதிய சமுர்த்திப் பயனாளிகளுக்கான கொடுப்பனவுகளுக்குரிய நிதி எங்கிருந்து ஒதுக்கப்படுகின்றது? தற்போதைக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது?

போரால் அதிகம் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இதுவரை எவ்வளவு பேர் பயனாளிகளாக உள்வாங்கப்பட்டுள்ளனர். அந்த மாவட்டங்களின் தேவையைப் பூரணமாகப் பூர்த்தி செய்ய முடியுமா?

மேற்படி எனது கேள்விகளுக்கான பதில்களையும், எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பிலான விளக்கங்களையும் அமைச்சர் தயா கமகே வழங்குவார் என எதிர்பார்க்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பூஜிதவின் உரிமை மீறல் மனு பரிசீலனைக்காக ஒத்திவைப்பு!

(கொழும்பு)

கட்டாய விடுமுறை வழங்கப்பட்ட பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு பரிசீலனைக்காக ஒத்திவைக்கப்பட்டது.

அதன்படி குறித்த மனு எதிர்வரும் 24 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. (இ-7)







(கேலிச்சித்திரம்)

## கொள்ளையர்களின் ஆதிக்கம் மீண்டும் மேலோங்குகிறது

# நாட்டை முன்னேற்ற தீய செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்-சம்பிக்க



(கண்டி)

நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டுமென்றால் தீய செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டியது மிகவும் அவசியமென அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கண்டியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே சம்பிக்க இதனைத் தெரிவித்தார்.

"நாட்டைக் கொள்ளையர்களிடமிருந்து பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவே ஆட்சி மாற்றத்தை மக்கள் ஏற்படுத்தினார்கள். ஆனால் மீண்டும் அவர்களது ஆதிக்கம் மேலோங்கி வருகின்றது.

இதேவேளை ஒரு பிரச்சினைக்கு நீதிமன்றத்தின் ஊடாக தீர்வைப் பெற முயற்சித்தால் பல வருடங்கள் செல்கின்றன. இதனை நீங்களே அறிவீர்கள்.

மேலும் ஊடகங்களுக்கு உண்மையான விடயங்களை எழுத முடியாது. அதற்காக பேனாவோ கமராவோ இயங்குவது இல்லை.

நாட்டு மக்களிடம் பிரச்சினைகளை ஏற்படுத்தும் விதமாக தகவலை பரப்பாமல் பொறுப்புடன் அனைத்து ஊடகங்களும் நடந்துகொள்ள வேண்டும்.

மேலும் அவசியமற்ற தீய விடயங்களை ஒழிப்பதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டியது அவசியமாகும்.

அதேபோன்று நாம் முன்னேறிச் செல்ல வேண்டுமென்றால் வலுவான சட்ட ரீதியான தீர்மானங்கள் சிலவற்றை முன்னெடுக்க வேண்டிய தேவையுள்ளது.

இதேவேளை அண்மையில் மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிந்து பலர் உயிரிழந்தபோது அவ்விடயம் குறித்து பலரும் பேசி சில நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகக் கூறினர். ஆனால் தற்போது அதனை எவரும் பொருட்படுத்தாமல் கவனிப்பாரின்றி கிடக்கிறது" எனவும் சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டினார். (இ-7)

# மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்து விபத்து-17பேர் காயம்!


(தம்புள்ளை)

குருநாகல் - தம்புள்ள பிரதான வீதியின் தல்கொடபிட்டி பிரதேசத்தில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற தனியார் பேருந்தொன்று எதிரில் வந்த பேருந்தொன்றுடனும் மற்றும் பாரவூர்தியொன்றுடனும் மோதி விபத்துக்குள்ளானது.

நேற்றுக் காலை இடம்பெற்ற இந்த விபத்தில் 17 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

காயமடைந்தவர்களில் 13 பேர் பாடசாலை மாணவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பேருந்தின் சாரதி படுகாயமடைந்த நிலையில் அவர் குருநாகல் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.



பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்துச் சாரதியின் கவனயீனத்தால் இந்த விபத்து இடம்பெற்றதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்தது. (இ-7)

# இலங்கையில் சிறுவர் பாலியல் முறைகேடுகள் திடீர் அதிகரிப்பு

இலங்கையில் சுற்றுலா மற்றும் பயணத்துறையில் சிறுவர் பாலியல் முறைகேடுகள் திடீரென அதிகரித்திருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் தொடர்பான குழு தெரிவித்தது.


அதன் அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

சிறார்கள் பாலியல் முறைகேடுகளுக்கு ஆளாவதில் இருந்து பாதுகாப்பதற்கான கொள்கைகள், இலங்கையில் சுற்றுலாத் துறை உள்ளிட்ட பிரிவுகளில் அமுலாக்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. (இ-7)

# ஜிகாத் கொள்கையை தனிமைப்படுத்தி அழிக்க

# அனைத்து உதவிகளையும் வழங்கத்தயார்

## இந்திய உயர்ஸ்தானிகர் உறுதி



(கொழும்பு)

**ஜிகாத் கொள்கையை தனிமைப்படுத்தி அழிக்க வேண்டும் எனத் தெரிவித்த இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து, ஜிகாத் கொள்கை பிராந்திய சமாதானத்திற்கும் உலக சமாதானத்திற்கும் ஆபத்தானது எனவும் எச்சரித்தார்.**

இலங்கையுடனான இந்திய உறவுகள் கடந்த ஐந்துவருடங்களில் பாரிய மாற்றங்களை சந்தித்துள்ளதாகவும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியாவில் அண்மையில் இடம்பெற்ற தேர்தல்களில் பிரதமர் நரேந்திரமோடிக்கு கிடைத்த தீர்க்கமான மக்கள் ஆணை அரசாங்கத்தின் கொள்கைகள் தொடரவேண்டும் என மக்கள் விரும்புவதை வெளிப்படுத்தியது எனவும் அவர் தெரிவித்தார்.

மோடி அரசாங்கத்தின் இந்தக் கொள்கைகள் வலுப்படுத்தப்படுவதும் தொடர்வதும் இலங்கையின் நலன்களுடன் தொடர்புபட்டுள்ளது எனவும் உயர்ஸ்தானிகர் சந்து தெரிவித்தார்.

இலங்கையில் உயிர்த்த ஞாயிறு அன்று தாக்குதல்கள் இடம்பெற்றுள்ள நிலையில் பிரதமர் மோடி இந்திய மக்களின் ஆதரவு மற்றும் நம்பிக்கையை தெரிவிக்கும் செய்தியுடன் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வார்.

பயங்கரவாதம் மனித குலத்திற்கான கூட்டு ஆபத்துக்கள் என இலங்கையில் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்கள் இலங்கைக்கானவை மாத்திரமல்ல எனவும் உலகில் எந்த பகுதியில் இடம்பெறும் பயங்கரவாத தாக்குதலும் மனிதகுலத்தின் மனச்சாட்சிக்கு எதிரானது. இது நாங்கள் அனைவரும் ஒன்று என்ற உணர்வின் மீது தாக்குதலை மேற்கொள்கின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

ஜிகாத் கொள்கையை தனிமைப்படுத்தி அழிக்கவேண்டும். இலங்கை வேண்டுகோள் விடுத்தால் இந்த விடயத்தில் பிரதமர் மோடி இலங்கைக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குவார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி கரிபுலம் வைரவர் ஆலய அலங்கார உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் ஆரம்பமாகி தொடர்ந்து 30 நாட்கள் நடைபெறும். இவ் அலங்கார உற்சவத்தில் மாணவர்களின் சமயச் சொற்பொழிவும் இடம்பெறும். (5-10)

## கலைச் சங்கமம் நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

கதிர் தொலைக்காட்சியின் ஏற்பாட்டில் "கலைச் சங்கம்" நிகழ்வு இன்று 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் நெல்லியடி கதிர் தொலைக்காட்சி கலையகத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வுக்கு ஓய்வு நிலை மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியம் தலைமை தாங்குவார்.

இதில் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (இ-5)

## சந்தை வியாபாரிகளின் கோரிக்கை நிறைவேற்றம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொதுச் சந்தையை குத்தகைக்கு வழங்க வேண்டாம் என்ற சந்தை வியாபாரிகளின் கோரிக்கை வெற்றியளித்துள்ளது. சாவகச்சேரிப் பொதுச் சந்தையை குத்தகைக்கு வழங்குவது என்ற நகரசபையினரின் சபைத் தீர்மானத்தைக் கண்டித்து சந்தை வியாபாரிகள் அண்மையில் ஜனநாயகப் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

வியாபாரிகளின் கோரிக்கைகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் மீள் பரிசீலனைக் கூட்டம் ஒன்றினை நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்தார். இதன்போது கடந்த சபை அமர்வில் சந்தையைக் குத்தகைக்கு வழங்க வேண்டும் என்ற சபைத் தீர்மானம் மீள் பரிசீலனை செய்யப்பட்டது.

மீள் பரிசீலனை செய்வதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பினைத் தெரிவித்திருந்தனர். இருப்பினும் மீண்டும் சபையில் சந்தையைக் குத்தகைக்கு கொடுப்பதா இல்லையா என்ற வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்போது சுதந்திரக் கட்சி, ஈ.பி.டிபி மற்றும் ஐ.தே.கட்சி உறுப்பினர்கள் தமது முடிவினை மாற்றி சந்தையைக் குத்தகைக்கு வழங்க விருப்பமில்லை எனத் தெரிவித்திருந்தனர்.

இதன் காரணமாக சந்தை வியாபாரிகளின் கோரிக்கை பெரும்பான்மை உறுப்பினர்களின் வாக்குகளால் வெற்றியீட்டியது. (5-30)

## மருத்துவ நிபுணர்கள் பங்களிப்புடன் இலவச மருத்துவ முகாம் நாளை

(யாழ்ப்பாணம்)

துறைசார் மருத்துவ நிபுணர்கள் பங்குகொள்ளும் இலவச மருத்துவ முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை காரைநகர் சைவ மகா சபை மண்டபத்தில் இடம்பெறும்.

சைவமகா சபையின் 100 ஆவது ஆண்டு நிறைவையொட்டி காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் பிரதேச செயலகம் இணைந்து குறித்த மருத்துவ முகாமை ஏற்பாடு செய்துள்ளன.

இம் மருத்துவ முகாமில் பொது மருத்துவம், கண், மகப்பேறு, பெண் நோயியல், குழந்தை மருத்துவம், உள மருத்துவம் போன்ற துறைகளின் மருத்துவ நிபுணர்கள் மற்றும் மருத்துவர்கள் கலந்து கொள்வர்.

ஆகவே குறித்த நோய்கள் தொடர்பான சந்தேகங்களை தெளிவுபடுத்தவும் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளவும் விரும்புவோர் குறித்த இம் மருத்துவ முகாமில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது. (5-10)

## விபத்தில் சுயநினைவை இழந்த முதியவர் மரணம்

கைதடிப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் சுயநினைவை இழந்த முதியவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை உயிரிழந்தார். நாவற்குழி தெற்குக் கைதடியைச் சேர்ந்த பெ. நாகேந்திரம் வயது(67) என்றவரே இவ்வாறு உயிரிழந்தார்.

கடந்த மாசி மாதம் கைதடிப் பகுதியில் வீதியால் சென்றுகொண்டிருந்த வேளை மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் குறித்த முதியவர் சுய நினைவின்றி (கோமா) பல மாதங்களாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் கடந்த மாதம் 27 ஆம் திகதி வீட்டுக்கு அனுப்பப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

சடலம் உடற் கூற்றுப் பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு சாவகச்சேரி நீதவான் உத்தரவிட்டார். (5-10)



தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 60 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 1485 புதிய சமுர்த்திப் பயனாளிகளுக்கு நேற்று முன்தினம் சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் சமுர்த்தி நிவாரண உரித்துச் சான்றிதழ் வழங்கப்பட்டது. ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சினால் நாடளாவிய ரீதியில் ஆறு இலட்சம் பயனாளிகளுக்கு இந்த சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படுகிறது. அந்த வகையில் தென்மராட்சி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி கௌசிகன் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி.விஜயகலா மகேஸ்வரன் கலந்து கொண்டு உரித்துச் சான்றிதழ்களை பயனாளிகளுக்கு வழங்கினார். மேலும் நிகழ்வில் சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் சிவமங்கை இராமநாதன், முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் சயந்தன், அமைச்சின் இணைப்புச் செயலாளர் லோகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:- சுபேசன்)

## யாழில் கைக்குண்டு மீட்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மணியம் தோட்டப்பகுதியில் காணி துப்புரவு செய்யும் போது, கைக்குண்டு மீட்கப்பட்டதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை காணி உரிமையாளர் காணியைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்ட போதே பழைய கைக்குண்டு இருப்பதைக் கண்டு யாழ்ப்பாணம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார்.

அந்தத் தகவலின் பிரகாரம் விசேட அதிரடிப் படையினர், சம்பவ இடத்திற்குச் சென்று கைக்குண்டை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட கைக்குண்டை செயலிழக்கச் செய்யும் நடவடிக்கையை விசேட அதிரடிப் படையினர் முன்னெடுத்துள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். (இ-101)

## கிளி.தம்பகாமம் வண்ணாங்கேணி வடக்கில்
# இரு மாதிரி கிராமங்கள் திறந்து வைப்பு







(பரந்தன்)

கிளிநொச்சி தம்பகாமம் வண்ணாங்கேணி வடக்கு பகு தியில் ஆராதி நகர்,சஞ்சீவி நகர் மாதிரி கிராமம் நேற்று அமைச் சர் சஜித் பிரேமதாஸவினால் திறந்து வைக்கப்பட்டது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் செமட்ட செவன வேலைத்திட்டத்தின் கீழ் நேற்று கிளிநொச்சி தம்பகாமம் வண்ணாங்கேணி வடக்கு பகுதியில் ஆராதி நகர்,சஞ்சீவி நகர் கிராமங்கள் திறந்து வைக்கப்பட்டு பயனாளிகளிடம் வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் உள்ள தம்பகாமம் வண்ணாங்கேணி வடக்கு பகுதியில் குறித்த திட்டத்தின் கீழ் மாதிரி கிராமங்கள் இரண்டு அமைக்கப்பட்டு 32 பயனாளிகளுக்கான காணி உரிமங்கள் கையளிக்கப்பட்டன.

அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 100 பேருக்கு மூக்குக் கண்ணாடிகளும், 50 பேருக்கு தொழில் உபகரணங்களும், 350 பேருக்கு 50 ஆயிரம் , ஒரு லட்சம், இரண்டு லட்சம் பெறுமதியான கடன் திட்டத்தின் கீழான காசோலைகளும் கையளிக்கப்பட்டன. அத்துடன் 7.5 லட்சம் பெறுமதியான வீட்டுத்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 150 பேருக்கு முதல் கட்ட காசோலைகளும் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் அமைச்சர் மற்றும் ராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், பா.ம. உறுப்பினர் சி.சிறிதரன் , கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர், வீடமைப்பு அதிகாரசபை அதி காரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (9-312)

# கிணற்றிலிருந்து வெடிபொருட்கள் மீட்பு!



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்குட்பட்ட தேவிபுரம் பகுதியில் உள்ள கிணற் றிலிருந்து வெடிபொருட்கள் சில கடந்த புதன்கிழமை மீட்கப்பட்டுள்ளன.

குறித்த காணியின் உரிமையாளர் கிண்ற்றினை இறைத்து துப்புரவு செய்யும் போது வெடி பொருட்கள் உள்ளிட்ட சில பொருட்கள் இருப்பதை இனம் கண்டுள்ளார். இச்சம்பவத்தைத் தொடர்ந்து அருகிலுள்ள படை முகாமிற்கு தகவல் வழங்கி யதையடுத்து குறித்த இடத்திற்கு சென்ற படையினர் கிணற்றிலுள்ள வெடி பொருட்களை மீட்டுள்ளார்கள்.

இதில் கைக்குண்டுகள் இரண்டும், ஆர்.பி.ஜி.குண்டு ஒன்றும், துப்பாக்கி ரவைகள், இரும்பு பொருட்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன. (9-281)

# போதைக்கு எதிரான சுற்றிவளைப்பில் கசிப்புடன் 10 பேர் கைது

(பனிக்கன்குளம்)

நாட்டுக்காக ஒன்றிணைவோம் வேலைத்திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு விசுவமடு மாணிக்கபுரம் கிராமத்தில் போதை தடுப்புக்கான சுற்றி வளைப்பு நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டது. இதன் போது 10 பேர் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாணிக்கபுரம் பகுதியில் போதை ஒழிப்பிற்கு எதிரான விழிப்புணர்வு கருத்தரங்குகள் கடந்த சில நாட்களாக சிவில் பாதுகாப்பு குழுவினால் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் நாட்டுக்காக ஒன்றிணைவோம் என்ற ஜனாதிபதியின் கருத்திட்டத்தின் கீழ் போதையற்ற நாடு என்ற தொனிப்பொருளுக்கு அமைவாக விசுவமடு மாணிக்கபுரம் கிராமம் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது நான்கு வீடுகளில் சட்டவிரோத கசிப்பு கைப்பற்றப்பட்டதுடன் அதனை பாவனைக்குட்படுத்திய மற்றும் உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் இருந்து 19.6 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளதாக புதுக் குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (9-281)

# ஆக்கத்திறன் போட்டிக்கான பயிற்சிப்பட்டறை இன்று

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் வடமாகாண அரச உத்தியோகத்தர் ஆக்கத்திறன் போட்டிக்கான பயிற்சிப் பட்டறை மாவட்ட மட்டத்தில் நடத்தப்படவுள்ளது. இப்பயிற்சிப்பட்டறை, இன்று காலை 10 மணி முதல் 12 மணி வரையும் 5 மாவட்டங்களிலும் ஒரே நேரத்தில் நடைபெறுமென, வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி.சி.சுஜீவா தெரிவித்துள்ளார். யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ளோருக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், கிளிநொச்சி மாவட்டத்திலுள்ளோருக்கு டிப்போச் சந்திக்கு அருகிலுள்ள மாவட்டச் செயலகப் பயிற்சி நிலையத்திலும் நடைபெறவுள்ளது. மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்திலும், வவுனியா மாவட்டத்திற்கு கோவிற்குளத்திலுள்ள அகிலாண்டேஸ்வரி நுண்கலைக்கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

கவிதை, சிறுகதை, பாடலாக்கம், மன்றங்களுக்கிடையிலான கலைத்திறன் போட்டிகளில் பங்குபற்றுவோர், இப்பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்ளவுள்ளனர். பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாவட்ட உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக மட்ட பண்பாட்டு உத்தியோகத்தர்கள் இப்பயிற்சிப் பட்டறையை வழிநடத்தவுள்ளனர். அரச ஊழியர் ஆக்கத்திறன் போட்டிகள் மிக விரைவில் நடத்தப்படவுள்ளது. வடக்கு மாகாண பண்பாட்டு விழாவில் வைத்து வெற்றி பெறுவோருக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படுவது வழக்கமாகும். (9)



நாட்டுக்காக ஒன்றிணைவோம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நகர்ப்புறத்தை அழகுபடுத்தல், சூழலை பாதுகாப்போம் என்ற கருப்பொருளில் பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஊட்டும் வகையில் முல்லைத்தீவு நகர்ப்பகுதியில் முதன்மை வீதிகளின் இரு மருங்குகளிலும் மரக்கன்றுகள் நாட்டிவைக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு நகர்ப்பகுதியில் இருந்து மாங்குளம் வீதியிலும், முல்லைத்தீவு பரந்தன் வீதியின் இருமருங்கிலும் 152 மரக்கன்றுகள் நாட்டிவைக்கப்பட்டுள்ளன.

இந்த மரம் நடுகை திட்ட நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், ஜனாதிபதி செயலக அதிகாரிகள், முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள், காணிப்பயன்பாட்டு அதிகாரிகள்,சுற்றுச்சூழல் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள், முல்லைத்தீவு மகா வித்தியாலய பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் 59 ஆவது படைப்பிரிவினை சேர்ந்த படையினர் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நாட்டிவைத்தனர். (படம்:பனிக்கன்குளம் செய்தியாளர்)

# போர்ச் சூழலில் மூடப்பட்ட பாடசாலைகளை மீள் இயக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தில், கடந்தகால போர்ச் சூழலின் போது மூடப்பட்ட எட்டு பாடசாலைகளையும் மீள் இயங்கவைப்பதற்கான நடவடிக்கைகளை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை வேகமாக முன்னெடுக்கவில்லை என பெற்றோர்களால் தெரிவிக்கப்படுகின்றது.

பூநகரிக் கல்விக் கோட்டத்தில் ஆறு பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. பொன்னாவெளி சைவப் பிரகாச வித்தியாலயம், பல்லவராயன்கட்டு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, அத்தாய் முத்துக்குமாரசுவாமி வித்தியாலயம், தம்பிராய் அ.த.க. பாடசாலை, செட்டியகுறிச்சி அ.த.க. பாடசாலை, கௌதாரிமுனை அ.த.க.பாடசாலை என்பன மூடப்பட்டுள்ளன.

இதேபோன்று கரைச்சிக் கோட்டத்திலும் இரு பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. 2010ஆம் ஆண்டில் குறித்த பாடசாலைகளை இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் இதுவரை குறித்த பாடசாலைகள் இயங்கவில்லை. பொன்னாவெளி சைவப் பிரகாச வித்தியாலயத்தை கிராஞ்சிக்கும் வேரவிலுக்கும் இடையில் இயங்க வைக்க வேண்டும் என, வலயக் கல்விப் பணிமனையிடம் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, பல்லவராயன் கட்டுப் பாடசாலை உடனடியாக இயங்கக்கூடிய நிலையில் கிராமச் சூழல் உள்ள போதிலும் வலயக் கல்விப் பணிமனை இதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என, பல்லவராயன் கட்டு மக்கள் தெரிவிக்கின்றனர்.

பூநகரியில் போரால் பாடசாலைகள் மூடப்பட்டுள்ள போதிலும் உவரப்பரம்பல் ஏற்பட்டு மக்கள் இடம்பெயர்ந்து இருப்பதன் காரணமாக மக்கள் செறிவாக வாழ்கின்ற பகுதிகளில் பாடசாலைகளை இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளிடம் பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பாடசாலைகள் மூடப்பட்டிருப்பதன் காரணமாக, பூநகரியில் 10 கிலோமீற்றருக்கு அதிகமான தூரம் மாணவர்கள் பிற பாடசாலைகளுக்கு செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது எனவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (9)




# பால் உற்பத்திப் பொருட்கள் சந்தைப்படுத்தும் நிலையம் திறப்பு

முல்லைத்தீவு மாவட்டம் செம்மலைப்பகுதியில் கிராமிய மக்கள் சக்தி வேலைத் திட்டத்தின் கீழ் செம்மலைப்பகுதியில் இரண்டு இலட்சம் ரூபா செலவில் மீள் நிர்மாணம் செய்யப்பட்ட பால் உற்பத்தி பொருட்கள் சந்தைப்படுத்தல் கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு ஜனாதிபதியின் நாட்டுக்காக ஒன்றிணைவோம் வேலைத்திட்டத்தின் கீழ் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் , ஜனாதிபதி செயலக அதிகாரிகள், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் உமாமகள் மணி வண்ணன், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளரும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினருமான ச.சத்திய சுதர்சன் ,கிராம மக்கள் என பலர் கலந்துகொண்டனர். (9-281)

# YMCA அமைப்பின் 175 வருட பூர்த்தி



(மன்னார்)

வை.எம்.சி.ஏ (YMCA)பொது அமைப்பின் 175 வருட பூர்த்தியை முன்னிட்டு மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் சிறுவர் பிரிவிற்கு சுமார் 25000 ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் மன்னார் பொது வைத்தியசாலை சிறுவர் பராமரிப்பு பிரிவுப் பொறுப்பதிகாரி வைத்தியர் செந்தூர்பதிராஜா, வைத்தியர் றொஷான், மன்னார் வை.எம்.சி.ஏ. தலைவர் எல்.யூட் பிகிறாடோ உட்பட அமைப்பின் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர். (9-285)

# கஞ்சா மீட்பு

(மன்னார்)

மன்னார் - பேசாலை கடற் பகுதியில் கைவிடப்பட்டிருந்த 140 கிலோகிராமிற்கும் மேற்பட்ட கேரளக்கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

கடலில் நங்கூரமிடப்பட்டிருந்த ட்ரோலர் படகொன்றிலிருந்து நேற்று முன்தினம் மாலை கேரளக்கஞ்சா கைப்பற்றப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

பேசாலை, கடற்பரப்பில் முன்னெடுக்கப்பட்ட சோதனையின் போதே குறித்த ரோலர் படகில் இருந்து கேரளக்கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

எனினும், குறித்த படகிலிருந்த சந்தேகநபர்கள் தப்பிச்சென்றுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (9)

# ஆலயத்துக்கான அடிக்கல் நாட்டல்



மன்னார் பேசாலை வெற்றி மாங்குடியிருப்பு 50 வீட்டுத் திட்டம் பிரதான வீதி வடக்கு கடற்கரை அண்டி பகுதியில் "அடைக்கல அன்னை சிற்றாலயம்" அமைக்க நேற்று முன்தினம் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஒதுக்கிய 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு மற்றும் பேசாலை கட்டுமான தொழிலாளர்கள் சங்கம், மீனவர்களின் ஒத்துழைப்புடன் குறித்த சிற்றாலய கட்டுமான பணிகள் இடம் பெறவுள்ளன.

பேசாலை பங்குத்தந்தை அருட்தந்தை தேவராஜா கொடுத்தோர் அடிகளார் தலைமையில் இடம் பெற்ற அடிக்கல் நாட்டும் நிகழ்வில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினரும் சட்டத்தரணியுமான எஸ். பிரிமுஸ் சிறாய்வா, மன்னார் பிரதேச சபை உறுப்பினர்களான கொன்சல் குளாஸ், திருமதி கிறிஸ்டி சின்னராணி குரூஸ் உட்பட பலர் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி வைத்தனர். (9-285)

# மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகராக பந்துல வீரசிங்க நியமனம்



(மன்னார்)

மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகராக பந்துல வீரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தனது கடமையை கடந்த 28 ஆம் திகதி மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் பொறுப்பேற்றுள்ளார்.

மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றிய சியந்த பீரிஸ் காலி அல்பிட்டிய மாவட்ட பொலிஸ் அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-285)

# வறட்சியை கருத்திற்கொண்டு நீரை சிக்கனமாக பயன்படுத்தவும்

## விவசாயிகளிடம் வேண்டுகோள்

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் வறட்சியைக் கருத்திற்கொண்டு பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் நீரைச்சிக்கனமாகப் பயன் படுத்துமாறு விவசாயத்திணைக்களத்தினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டில்நிலவும் கடும் வறட்சி காரணமாக பல்வேறு வகையான பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாரிய மற்றும் நடுத்தர சிறிய நீர்ப்பாசனக்குளங்களின் கீழ் தீர்மானிக்கப்பட்ட அளவுகளில் சிறுபோகப் பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சிறுபோகச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் நீரைச்சிக்கமாகப் பயன்படுத்துமாறும் நீர் வீண்விரயமாவதை தவிர்த்துக் கொள்ளவேண்டும் எனவும் விவசாயத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-315)

# வன முகாமைத்துவத்தின் மூலம் வாயு மாசுபாட்டினை குறைப்போம்



(மன்னார்)

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு பேண்தகு வன முகாமைத்துவத்தின் மூலம் வாயு மாசுபாட்டினை குறைப்போம் எனும் தொனிப்பொருளில் மர நடுகையும் விழிப்புணர்வு நிகழ்வும் மன்னார் வலய கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட மன்/ லூசியா மகா வித்தியாலயத்தில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மன்னார் பொறுப்பதிகாரி கலாநிதி. திருமதி.ராஜேஸ் கிமலதா தலைமையில் நேற்று நடைபெற்றது.

மன்னார் மாவட்ட சுற்றாடல் அதிகார சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபால, சிறப்பு விருந்தினர்களாக மன்னார் பிரதேச செயலாளர் திருமதி.சிவசம்பு கனகாம்பிகை , மன்னார் வலயக் கல்வி பணிப்பாளர் பிரட்லி , ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆரம்ப நிகழ்வாக மரங்கள் பாடசாலை வளாகத்தில் நாட்டி வைக்கப்பட்டதுடன் வாயு மாசுபாட்டினை குறைப்பதற்கான உறுதி மொழியும் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன் பின்னர் மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் விருந்தினர்களால் விசேட கருத்தமர்வு இடம் பெற்றதுடன் கடந்த வருடத்தில் சுற்றாடல் சார்ந்து சிறப்பாக செயற்பட்ட மாணவ மாணவிகளுக்கான பதக்கங்கள், சான்றிதழ்கள் மற்றும் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (9-285)

# விவசாயிகளை ஊக்குவிக்கும் நோக்கில் மாந்தை கிழக்கில் பல்வேறு செயற்றிட்டங்கள்

(பனிக்கன்குளம்)

நாட்டுக்காக ஒன்றிணைவோம் வேலைத்திட்டத்தின் கீழ் தேசிய உணவு உற்பத்தி திட்டத்தில் திணைக்களத்தினால் 14 நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

விவசாயிகளின் விவசாய செய்கையினை ஊக்குவிக்கும் நோக்கில் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் உள்ள ஒட்டறுத்த குளம் கிராமத்தில் காளான் அறுவடை விழாவும், தேனிவளர்ப்பு மற்றும் ஆரோக்கிய இளைஞர் விவசாய கழகத்திற்கான மில் திறப்பு விழா நிகழ்வு என்பன கொல்லவிளாங்குளத்திலும், சேதன முறையிலான வீட்டுத் தோட்ட செய்கை பாலிநகரிலும், நிலக்கடலை செய்கை தொடர்பான பயிற்சி வகுப்பு உள்ளிட்டவை மாந்தை கிழக்கில் உள்ள விவசாய கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் சேதன முறையிலான வீட்டுத்தோட்ட பயிற்சி அனைத்து விவசாயிகளுக்கும் வழங்கப்பட்டது. (9-281)




# முல்லையில் இருந்து ஜனாதிபதிக்கு 380 முறைப்பாடுகள்



(பனிக்கன்குளம்)

நாட்டுக்காக ஒன்றிணைவோம் வேலைத் திட்டத்தின் கீழ் ஜனாதிபதியிடம் முறையிடுவதற்காக ஜனாதிபதி விசேட பிரிவு ஒன்று பிரதேச செயலகம் வாயிலாக மக்களது குறைகளை கேட்டறியும் செயற்றிட்டமொன்றை முன்னெடுத்து வருகின்றது

அந்த வகையில் மணலாறு, ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, துணுக்காய், புதுக்குடியிருப்பு ஆகிய ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கடந்த 5 நாட்களாக இடம்பெற்ற இந்த மக்களது கருத்துக்களைக் கேட்டறியும் விடயத்தில் 380 முறைப்பாடுகள் ஜனாதிபதிக்கு கிடைக்கப் பெற்று இருப்பதாக அந்தப் பிரிவில் கடமையாற்றுகின்ற அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (9-281)

# கிளிநொச்சி ஜெயபுரம் மக்களின் வயல்காணிகளை ஒரு மாதத்துக்குள் அவர்களுக்கே வழங்க நடவடிக்கை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பூநகரி ஜெயபுரம் வடக்கு பகுதியில் வனவளத் திணைக்களம் ஆக்கிரமித்துள்ள விவசாயிகளின் வயல்காணிகளை அந்த மக்களுக்கே உரித்துடையது என்றும் அதனை அவர்களுக்கு வழங்க வேண்டும் என நேற்று முன்தினம் உள்ளக உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் பாராளுமன்ற அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 1983ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக மலையகம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் பூநகரி ஜெயபுரம் கிராமத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

1984 ஆம் ஆண்டில் இந்தப் பிரதேசத்தில் 548 குடும்பங்களுக்கு குடியிருப்பதற்கான காணிகளும் அவர்கள் நெற் செய்கையை மேற்கொள்ளக்கூடிய வகையில் தலா ஒரு ஏக்கர் வரையான வயல் காணிகளும் அப்போது வழங்கப்பட்டிருந்தன.

யுத்தசூழல் அற்று அமைதியான இக்காலப்பகுதியில் 2009 ஆம் ஆண்டு இறுதியிலிருந்து மக்கள் மீள்குடியேறினர்.

2017ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18ஆம் திகதி பூநகரிப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் ஜெயபுரம் மக்களுக்குரிய வயல் காணிகளில் கண்ணிவெடிகளை அகற்றிய பகுதிகளிலிருந்து 100 ஏக்கர் காணியை முதற்கட்டமாக விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பதென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந் தக்காணிகளை துப்புரவு செய் வதற்காக ஒரு மில்லியன் ரூபாவும் டிசெம்பர் மாதம் 12ஆம் திகதி ஒரு மில்லியன் ரூபா நிதியும் விடுவிக்கப்பட்டு துப்புரவுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில் வனவளத் திணைக்களம் குறித்த காணிகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள காணிகள் எனத்தெரிவித்து அதன் துப்புரவுப்பணிகளை தடுத்து நிறுத்தியது.

இதனை அடுத்து, இப்பகுதி கமக்கார அமைப்பினர் மக்கள் பிரதிநிதிகளிடம் தங்களுடைய கோரிக்கை மனுக்களை கையளித்துள்ளனர்.

ஆனால் எந்தவித தீர்வும் கிடைக்காத நிலையில் கடந்த ஜனவரி மாதம் இது தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட அலுவலகத்திலும் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த நிலையில் இக்காணி தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனை தொடர்பு கொண்டு கேட்ட போது கடந்த புதன் கிழமை நாடாளுமன்ற அலுவலகத்தில் உள்ளக உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் வஜிர அபேவர்த்தன தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் குறித்த காணிகளை மேற்படி மக்களுக்கே வழங்க வேண்டும் என முடிவெடுக்கப்பட்டுள்ளதாகவும் முடிவில் தொடர்புடைய தரப்பினரிடையே இணக்கம் காணப்பட்டு குறித்த வயற்காணிகளை உடனடியாக அளவீடு செய்து ஒரு மாத காலத்திற்குள் அம்மக்களுக்கு கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்ற முடிவு எட்டப்பட்டது எனத் தெரிவித்தார். (9)


# பாரதம்

# சஞ்சய் தத்துக்கு ஒரு நீதி! ஏழு தமிழருக்கு ஒரு நீதியா?

## சீமான் சீற்றம்


முருகன் ▲ சாந்தன் ▲ பேரறிவாளன்





(சென்னை)

மும்பை குண்டுவெடிப்பு சம்பவத்தில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட சஞ்சய் தத்துக்கு ஒரு நீதி! ராஜீவ்காந்தி படுகொலை வழக்கில் சிறையில் இருக்கும் ஏழு தமிழர்களுக்கு ஒரு நீதியா? என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் சீற்றத்துடன்கேள்வியெழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"மும்பை குண்டுவெடிப்பு வழக்கில் இந்திய ஆயுதச்சட்டத்தில் ஐந்தாண்டுகள் சிறைத்தண்டனை பெற்ற ஹிந்தி நடிகர் சஞ்சய் தத்தின் கருணை மனு குடியரசுத்தலைவரால் நிராகரிக்கப்பட்டது.

எனினும், மராட்டிய மாநில அரசே அவரை விடுதலை செய்திருக்கிற தகவலானது தம்பி பேரறிவாளன் தொடுத்த தகவலறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் தெரிய வந்திருப்பது ஏழு தமிழர்களை விடுதலை செய்யத் தமிழக அரசுக்குத் தடையேதுமில்லை என்பதை மீண்டும் ஒரு முறை நிரூபித்திருக்கிறது.

250 இற்கும் மேற்பட்டோரை பலிகொண்ட மும்பை குண்டு வெடிப்புச் சம்பவத்தில் சட்டவிரோதமாக ஆயுதம் வைத்திருந்ததாக ஹிந்தி நடிகர் சஞ்சய் தத்துக்கு ஆறாண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு, பின்னர், அது ஐந்து ஆண்டுகளாக உச்சநீதிமன்றத்தால் குறைக்கப்பட்டது.

மத்திய அரசின் ஆளுகைக்கு உட்பட்ட தண்டனை பெற்ற சிறைவாசியான அவருக்கு, அச்சிறைக் காலத்தில் எல்லா சலுகைகளும் சிறை விடுப்பும் மாநில அரசாங்கத்தாலே அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், சஞ்சய் தத் தண்டனைக்காலம் முடிவதற்கு 8 மாதங்களுக்கு முன்பாகவே மராத்திய மாநில அரசால் விடுதலை செய்யப்பட்டார் என்பதும் கடந்த மாதம் கிடைக்கப்பெற்ற ஆர்.டி.ஐ. மனுவால் வெட்டவெளிச்சம் ஆனது.

இப்போது, டிசெம்பர் 2015 இல் சஞ்சை தத்தின் முன் விடுதலைக்காக அனுப்பப்பட்ட கருணை மனுவும் குடியரசுத் தலைவரால் நிராகரிக்கப்பட்டுள்ளதும் தெரியவந்துள்ளது.

இதன்மூலம் குடியரசுத் தலைவரால் முன்விடுதலைக்கான கருணை மனு நிராகரிக்கப்பட்ட ஒரு சிறைவாசிக்கு, மாநில அரசு தனக்குள்ள அதிகாரத்தின்படி, முன்விடுதலை செய்யலாம் என்பது நிரூபணமாகியுள்ளது.

மேலும், நன்னடத்தையின் அடிப்படையில் எந்த ஒரு சிறைவாசியையும் மாநில அரசே முன்விடுதலை செய்யலாமா? என்கிற சந்தேகமும் தெளிவடைந்துள்ளது.

இப்படி மாநில அரசாங்கத்தின் அனைத்து அதிகாரமும் உறுதிசெய்யப்பட்ட பின்பும் எந்த சட்டவிதி மீறலும் இல்லாமல், எழுவர் விடுதலைக்காக 161 ஆவது சட்டப்பிரிவின்படி, தமிழக அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றி ஏறக்குறைய ஒரு வருடத்தைக் கடக்கவிருக்கிற நிலையில் இன்னும் அத்தீர்மானத்திற்கு ஒப்புதல் தராது மௌனம் சாதிக்கிறார் தமிழக ஆளுநர்.

இது அப்பட்டமான விதிமீறல். மக்களின் பிரதிநிதித்துவத்தைப் பெற்ற ஓர் அரசின் முடிவை, மக்களால் தேர்வுசெய்யப்படாத ஆளுநர் தடுத்து வைத்திருக்கிறார் என்றால், இது மக்களாட்சித் தத்துவத்திற்கே மாபெரும் பாதகத்தையும் களங்கத்தையும் ஏற்படுத்துவதாகும்.

சட்டமும் நீதியும் அனைவருக்கும் சமம் எனும் அரசியலமைப்புச் சாசனத்தின் அடிநாதத்தையே புறந்தள்ளி சஞ்சய் தத்துக்கு ஒரு நீதி? ஏழு தமிழர்க்கு ஒரு நீதி? எனப் பாகுபாடு காட்டுவது தனிமனித வஞ்சம் தீர்க்கச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தும் அதிகார அத்துமீறல்.

அதனைச் சனநாயகத்தின் மீது பற்றுறுதி கொண்ட, நீதியின்பால் நம்பிக்கை கொண்ட எவராலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

எனவே, சஞ்சய் தத் வழக்கில் மத்திய அரசு விடுதலையை நிராகரித்தபோதும் மாநில அரசே தண்டனைக்கழிவு வழங்கி விடுதலையைத் தந்த நடைமுறையை அடியொற்றி, தமிழக அரசு தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி தண்டனைக் கழிவு வழங்கி ஏழு தமிழர்களையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன்" என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

# ஜம்மு-காஷ்மீரில் துப்பாக்கிச் சமர் 4 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை

ஜம்மு-காஷ்மீரின் புல்வாமா மாவட்டத்தில் பாதுகாப்பு படையினர் நடத்திய என்கவுண்டரில் 4 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஜம்மு-காஷ்மீர் மாநிலம் புல்வாமா மாவட்டத்தின் லசிபோரா பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக பாதுகாப்பு படையினருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.


இதையடுத்து அங்கு சென்ற பாதுகாப்பு படையினர் தேடுதல் பணியில் ஈடுபட்டனர். அவர்களைக் கண்டதும் அங்கு பதுங்கியிருந்த பயங்கரவாதிகள் துப்பாக்கிகளால் சுடத் தொடங்கினர்.

அவர்களுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் பாதுகாப்புப் படையினர் சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர். இந்த என்கவுண்டரில் 4 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களிடம் இருந்து 3 ஏ.கே. ரக துப்பாக்கிகளை பறிமுதல் செய்தனர். தொடர்ந்து அந்த பகுதியில் தேடுதல்வேட்டை நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

# மலாவியில் தேர்த

# எதிர்ப்பு தெரிவித

## பொலிஸார் கண்ணீர்



(லிலோங்வி)

**மலாவியில் தேர்தல் முடிவுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதால் அங்கு பதற்ற நிலை தோன்றியுள்ளது.**

மலாவியில் கடந்த மே மாதம் 21 ஆம் திகதி நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக முன்னணி கட்சி வேட்பாளர் பீட்டர் முத்தாரிகா வெற்றி பெற்றார்.

மலாவி காங்கிரஸ் கட்சியின் தலைவர் லாசரஸ் சக்வேரா தோல்வியடைந்தார். இந்தத் தேர்தல் முடிவை ஏற்க மறுத்த லாசரஸ் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

அத்துடன் தேர்தலில் மோசடியில் ஈடுபட்டு பீட்டர் முத்தாரிகா வெற்றி பெற்றுவிட்டதாகக் கூறி மலாவி காங்கிரஸ் கட்சியினர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

தலைநகர் லிலோங்வியிலுள்ள கட்சித் தலைமையகத்தில் தொண்டர்கள் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் வன்முறை வெடித்தது.

# டுபாயில் பேருந்து விபத்து;



(டுபாய்)

துடுபாயில் நடைபெற்ற வீதி விபத்தில் பேருந்தில் பயணம் செய்த 17 பேர் பரிதாபமாக பலியாகியுள்ளனர்.

ஓமன் நாட்டு தலைநகரம் மஸ்கட்டில் இருந்து டுபாய் நோக்கிப் பயணிகள் பேருந்து ஒன்றில் நேற்று முன்தினம் மாலை வெளிநாட்டவர்கள் உட்பட 30 இற்கும் மேற்பட்டோர் பயணம் செய்தனர்.

டுபாய் அருகே வந்தபோது, பேருந்து விபத்தில் சிக்கி நொருங்கியது. இந்த விபத்தில் பேருந்தில் பயணித்த 17 பேர் சம்பவ

# சிரியாவில் வான்

# 5 சிறுவர்கள் உட


சிரியாவில் அரச படைகள் நிகழ்த்திய வான்தாக்குதலில் 5 சிறுவர்கள் உட்பட அப்பாவி மக்கள் 10 பேர் பலியாகினர்.

சிரியாவில் ஆதிக்கம் செலுத்தி வந்த ஐ.எஸ். பயங்கரவாதிகள் அனைவரும் விரட்டியடிக்கப்பட்டு அவர்கள் வசமிருந்த அனைத்து நகரங்களும் மீட்கப்பட்டு விட்டன. எனினும் நாட்டின் தென் மேற்குப் பகுதியிலுள்ள இட்லிப் மாகாணத்தில் அல்-கொய்தா அமைப்பின் ஆதரவு பெற்ற ஹயாத்தாஹிர் அல்ஷாம் பயங்கரவாத இயக்கம் ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. அவர்கள் வசமுள்ள நகரங்களை மீட்க இட்லிப் மாகாணத்தில் உச்ச



# வெளிநாடு

## தல் முடிவுகளுக்கு
## ித்து போராட்டம்
### ீர்ப்புகைப் பிரயோகம்





கூட்டத்தில் இருந்தவர்கள் கற்களை வீசித் தாக்கினர். இதனால், கூட்டத்தை கலைப்பதற்காக பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை பயன்படுத்தியுள்ளனர்.

இதன் காரணமாக அப்பகுதியில் பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது. (7)

## து; 17 பேர் பரிதாபமாக பலி!



இடத்திலேயே பரிதாபமாகப் பலியாகினர். மேலும் 5 பேர் படுகாயம் அடைந்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற பொலிஸார் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்த்து சிகிச்சை அளித்துள்ளனர். விபத்து நடந்தது குறித்து பொலிஸார் விசாரித்து வருகின்ற நிலையில் பேருந்தில் பயணித்தவர்கள் ஓமனில் ரம்ழான் கொண்டாட்டங்களில் பங்குபற்றித் திரும்பியது தெரிய வந்தது. இச்சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (7)

## ன்வழித் தாக்குதல்
## ட்பட 10 பேர் பலி


கட்ட தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. அரச படைக்கு ஆதரவாக ரஷ்யா மற்றும் ஈரான் நாட்டுப் படைகள் பயங்கர வாதிகளை குறிவைத்து வான்தாக்குதல்களை நடத்தி வருகின்றன. ஆனால் இந்த தாக்குதல்களில் அப்பாவி மக்களே அதிக அளவில் பலியாகின்றனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் ரம்ழான் பண்டிகை கொண்டாட்டத்தின் போதும் இட்லிப் மாகாணத்தில் அரச படைகள் வான்தாக்குதல் நடத்தின. அங்குள்ள காபர் அவித் நகரில் போர் விமானங்கள் குண்டு மழை பொழிந்ததில் 5 சிறுவர்கள் உட்பட அப்பாவி மக்கள் 10 பேர் பலியாகினர். (7)

## உலகில் முதன் முறையாக கப்பலில் இருந்து ரொக்கெட்டை விண்ணில் செலுத்தியது சீனா

(பீஜிங்)

வழக்கமான ஏவு தளங்களுக்குப் பதிலாக கப்பலில் இருந்து ரொக்கெட்டை விண்ணில் செலுத்தி சீனா சாதனை படைத்துள்ளது.



சீனா அண்மைக்காலமாக ரஷ்யா மற்றும் ஜப்பான் நாடுகளை விட பாதுகாப்பு மற்றும் இராணுவத்துக்கு அதிகமாகச் செலவழித்து வருகிறது. இராணுவப் பலத்தை அதிகரிக்கத் தேவையான நடவடிக்கையில் தீவிரம் காட்டி வருகிறது.

அடுத்த ஆண்டுகளில் சீனா தனது விண்வெளி திட்டத்துக்கு அதிக முன்னுரிமை கொடுக்க உள்ளது. பீஜிங்கில் தனது சொந்த விண்வெளி ஆய்வு நிலையத்தை அடுத்த ஆண்டு ஆரம்பிக்க உள்ளது.


இந்நிலையில் சீனாவின் ஷாங்டாக் மாகாணத்தை ஒட்டிய மஞ்சள் கடலில் நிறுத்தப்பட்டிருந்த தனது கப்பலில் இருந்த 'லாங்- மார்ச்-11' ரக ரொக்கெட்டை சீனா நேற்று முன்தினம் விண்ணில் செலுத்தியது. வழக்கமான ஏவு தளங்களுக்குப் பதிலாக, கப்பலில் இருந்து ரொக்கெட்டை விண்ணில் செலுத்துவது இதுவே முதல் முறை ஆகும்.

வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்த அந்த ரொக்கெட் இரண்டு சோதனை செயற்கைக்கோள்களை அவற்றின் சுற்று வட்டப் பாதையில் செலுத்தியது என்று தகவல்கள் வெளியாகி உள்ளன. இந்த செயற்கைக் கோள்கள் தகவல் தொலைத் தொடர்புக்கு உதவ கூடியது. பீஜிங் சார்ந்த தொழில் நுட்ப நிறுவனம், உலகளாவிய அளவில் இணைய சேவைகளை வழங்க நூற்றுக்கணக்கான செயற்கைக்கோள்களை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது. (7)

## ஜேர்மனில் நோயாளிகளுக்கு மாரடைப்பு ஏற்படுத்தி கொன்றவருக்கு ஆயுள் தண்டனை விதிப்பு

(பேர்லின்)

ஜேர்மனில் உள்ள வைத்தியசாலையில் நோயாளிகளுக்கு மாரடைப்பு ஏற்படுத்தி கொன்ற ஆண் செவிலியருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.



ஜேர்மனி ஆண் செவிலியராகப் பணியாற்றிய நீல்ஸ் ஹோஜல், நோயாளிகளுக்கு மாரடைப்பு ஏற்படுத்தி அவர்களை பிழைக்கச் செய்வதாக நினைத்து 85 பேரை கொலை செய்துள்ளார். இந்த தொடர் கொலையாளியின் செயல் ஜேர்மனில் பரபரப்பை ஏற்படுத்தியது. பின்னர் அவர் கைது செய்யப்பட்டு ஓல்டென்பெர்க் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிமன்றம், குற்றங்களின் குறிப்பிட்ட நோக்கத்தை (அபாயநிலையை) அடிப்படையாகக் கொண்டு, குற்றவாளி நீல்ஸ் ஹோஜலுக்கு (வயது -42) ஆயுள் தண்டனை வழங்கியுள்ளது.

முதல் கட்ட விசாரணையில் டெல்மென்ஹார்ஸ்ட் வைத்தியசாலையில் 90 நோயாளிகளுக்கு மாரடைப்பு ஏற்படுத்தியதாகவும் அதன் பின்பு ஓல்டென்பெர்க் வைத்தியசாலையில் 10 பேரை கொன்றதாகவும் கூறியுள்ளார். மாரடைப்பு ஏற்படுத்தி அவர்களை இவர் காப்பாற்றுவது போன்ற உணர்வு இவருக்கு மகிழ்ச்சியைத் தந்ததாக விசாரணையின்போது கூறியுள்ளார்.

மொத்தம் 100 கொலைகளை செய்ய முயற்சி செய்துள்ளார். 15 கொலைகளுக்கு ஆதாரம் இல்லை எனவும் நீதிமன்ற தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இறந்த நோயாளிகளை தோண்டி அவர்கள் உடலை ஆய்வு செய்தனர்.

7 மாத காலம் நடைபெற்ற இந்த வழக்கு விசாரணையில், நீல்ஸ் 43 கொலைகளை செய்ததாக இறுதியாக ஒப்புக்கொண்டார். மேலும் 5 பேரை பற்றி விவாதத்தில் ஈடுபட்டதாகவும் மீதமுள்ள 52 பேர் பற்றி தனக்கு நினைவு இல்லை என கூறியதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் நடந்த இறுதிக்கட்ட விசாரணையின்போது, தனது கொடூரச் செயலுக்காக நீல்ஸ் மன்னிப்புக் கேட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## சீனப் பொருட்கள் மீது மேலும் வரி விதிக்க திட்டம்
### ட்ரம்ப் எச்சரிக்கை

(வோஷிங்டன்)

சீனப் பொருட்கள் மீது மேலும் 50 இலட்சம் கோடி ரூபாய்க்கு மேல் வரி விதிக்கப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சீனாவுடனான வர்த்தக விவகாரம் குறித்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த போதே, டொனால்ட் ட்ரம்ப் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவிக்கையில், "சீனாவுடனான பேச்சுவார்த்தையில் பல சுவாரஸ்ய சம்பவங்கள் நடந்துள்ளன. என்ன நடக்கிறது எனப் பார்க்கலாம்.

சீனப்பொருட்களுக்கு மேலும் 300 பில்லியன் டொலர்கள் அளவில் வரி விதிப்பது குறித்து யோசித்து வருகிறோம். இதை சரியான தருணத்தில் அமுல்படுத்த உள்ளோம்" என்று தெரிவித்தார்.

இதனிடையே, சீனா மற்றும் அமெரிக்காவுக்கிடையில் வர்த்தகப் போர் உச்சத்தை அடைந்துள்ளது.

இரு நாடுகளும் மாறி மாறி பொருட்கள் மீதான வரி விதிப்பை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

# குண்டுத் தாக்குதல் குறித்து நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரணை நடத்த முடியாது

## விஜயதாஸ எதிர்ப்பு



(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு அன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் தொடர்பில் நாடாளு மன்றத் தெரிவுக்குழுவால் விசாரணை நடத்தப்பட முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.**

சபாநாயகர் கருஜெய சூரிய விற்கு அனுப்பி வைத்த கடிதத் தில் அவர் இந்த விடயத்தை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தத் தாக்குதல் தொடர்பில் உச்ச நீதிமன்றில் ஐந்து மனு க்கள் விசாரணைக்கு உட்படுத் தப்பட்டு வருவதால் சப் ஜூரிட்ஸ் விதிக்கு அமைய நாடாளுமன் றத் தெரிவுக்குழுவால் விசா ரணை நடத்தப்பட முடியாது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் ஊடாக புலனாய்வுப் பிரிவு தகவல்களைப் பகிர்ந்து கொள்வது நாட்டின் பாதுகாப்பற்ற நிலையை உருவாக்கும்.

இவ்வாறான விடயங்கள் நாட்டில் பாதக விளைவுகளை ஏற்படுத்தி விடும். இந்த விவகா ரம் தொடர்பிலான முழுப் பொறுப் பையும் அரசாங்கமும் சபாநாய கரும் ஏற்றுக்கொள்ள வேண்டு மெனவும் விஜயதாஸ தெரி வித்தார். (இ-7)

# சுற்றாடல் பாதுகாப்புச் சட்டங்களை அர்ப்பணிப்புடன் செயற்படுத்துங்கள்

## அனைத்துத்துறைகளுக்கும் ஜனாதிபதி அறிவுரை



(கொழும்பு)

சுற்றாடல் பாதுகாப்புச் சட்டங் களையும் சுற்றாடல் பாதுகாப் பிற்கான கொள்கை ரீதியிலான தீர்மானங்களையும் உரியவாறு நடைமுறைப்படுத்த அர்ப்பணிப் புடன் செயற்படுதல் நாட்டைக் கட்டியெழுப்பவும் நாட்டு மக் களின் நலனில் அக்கறையும் கொண்ட அனைத்து அரசியல் வாதிகள் மற்றும் அதிகாரிகளின் கடமையாகுமென ஜனாதிபதி தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சர்வதேச சுற்றாடல் தின விழாவின்போதே ஜனா திபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜூன் 5 ஆம் திகதி அனு ஷ்டிக்கப்படும் உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு "பேண்தகு வன முகாமைத்துவத்தின் ஊடாக வளிமாசடைதலைக் குறைத்தல்" எனும் தொனிப் பொருளின் கீழ் இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி தற்போது உலகம் முகங்கொடுத்துள்ள சுற்றாடல் சவால்களுக்கு மத்தி யில் சுற்றாடலை பாதுகாப்பதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென தெரி வித்தார்.

சுற்றாடல் அமைச்சர் என்ற வகையில் சுற்றாடல் பாதுகாப் பிற்கான பல்வேறு சட்டங்கள் தம்மால் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட போதிலும் அவற்றின் அமுலாக்கம் குறித்து மகிழ்ச்சியடைய முடியாதுள்ள தாகத் தெரிவித்த ஜனாதிபதி பொலித்தின் தடை உள்ளிட்ட சூழல்நேய தீர்மானங்களை நடைமுறை ரீதியில் அமுல்ப டுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுதல் எதிர்கால சந்ததி யினருக்காக நாம் நிறை வேற் றும் பொறுப்பாகும் எனவும் தெரி வித்தார்.

மரங்களை வெட்டும் சென்சோ இயந்திரங்கள் இறக்கு மதி செய்வதை வர்த்தமானி அறிக்கை மூலமாக தடை செய்து ள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி புதிய தச்சு வேலைத் தளங்களை பதிவு செய்வதை நிறுத்துவத ற்கும் மர ஆலை உரிமையா ளர்களை வேறு தொழில்களில் ஈடுபடுத்துவதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கு மாறும் பணிப்புரை விடுக்கப்பட் டுள்ளதாக தெரிவித்தார்.

இலங்கையின் வன அடர் த்தியை அதிகரிக்கும் அதே வேளை மக்களின் வாழ்க்கைக்கு உகந்த சூழலை உருவாக்குவத ற்கு குறைந்தபட்சம் பத்தாண்டு காலமாவது இந்த வேலைத் திட் டங்களை தொடர்ச்சியாக முன் னெடுக்க வேண்டுமென ஜனாதி பதி தெரிவித்தார்.

சூழலியலாளர்கள், பேராசிரி யர்கள், துறைசார் நிபுணர்கள் மற்றும் அரச அதிகாரிகள் தமது அறிவையும் அனுபவத்தையும் அதேபோன்று சர்வதேச சுற்றா டல் மாநாடுகளில் தாம் பெற் றுக்கொண்ட அறிவையும் நாட்டி ற்காக நடைமுறைப்படுத்துவத ற்கு முன்வருமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

சர்வதேச சுற்றாடல் தின கொண்டாட்டத்தை அடையாளப் படுத்தும் முகமாக ஜனாதிபதி மரக்கன்று ஒன்றை நட்டதுடன், வளிமண்டல தரவுகளை அளவி டும் ஊர்தியை ஜனாதிபதி பார் வையிட்டார்.

சுற்றாடல் உறுதிமொழியை ஏற்றதன் பின்னர் சர்வதேச சுற்றாடல் தினக் கொண்டாட் டங்கள் ஆரம்பமாகின.

வளி மற்றும் நீர் தர நிர்ணய பிரிவுகள் தொடர்பிலான இணை யத்தளத்தையும் ஜனாதிபதி திறந்துவைத்தார்.

வாகனப் புகை வெளியேற்றம் பற்றிய நிதியத்தால் வழங்கப்ப டும் புகை அளவீட்டுப் பிரிவு ஜனாதிபதியால் உத்தியோக பூர்வமாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்திடம் கையளிக்கப்பட்டது.

பேண்தகு வன முகாமை த்துவத்திற்காக வளிமாசடைத லைக் கட்டுப்படுத்தல் வழிகாட் டுதல் தொடர்பான கையேடும் "சொபாகெத" சஞ்சிகையும் ஜனா திபதியிடம் கையளிக்கப்பட்டன.

2019 சர்வதேச சுற்றாடல் தினத்திற்கு சமகாலத்தில் ஜனா திபதி கைச்சாத்திட்டுள்ள புகை வெளியேற்றத்தைக் கட்டுப்படுத் துவதற்கான வர்த்தமானியை மத்திய சுற்றாடல் அதிகார சபை யின் பணிப்பாளர் நாயகம் ஜனா திபதியிடம் கையளித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பிரம்ம ஞான விளக்கம்

ஒரு நாள் பிரம்ம ஞானத்தைப் பற்றி ஏதோ கொஞ்சம் சொல் லப் போய், சிலபேர் நேராகவே தேடிக் கொண்டு வர ஆரம்பித்து விட்டார்கள் சேர்.

நான் ஏதோ அந்த ஞானத்தை மொத்தமாக வைத்துக் கொண்டு வியாபாரம் செய்வதாக நினைத்துக் கொண்டு எனக்குக் கொஞ்சம் கொடு என்று கேட்க ஆரம்பித்து விட்டார்கள்.

என்னிடம் அது இருந்தால் நான் ஏன் இப்படி அதைப்பற்றி வெளியிலே சொல்லிக் கொண்டு உட்காந்திருக்கின்றேன்? என் றேன்.

"சேர் மிகவும் அடக்கமாக பேசுகின்றார்! நிறைகுடம் தளும் பாது" என்றார் ஒருத்தர்.

வெறும் குடமும் தளும்புவது இல்லை என்ற விபரம் அவருக் குத் தெரிவில்லை. ஒரு தகப்பன் தன்னுடைய இரு பிள்ளைக ளுக்கும் பிரம்ம ஞானம் வரணும் என்று ஆசைப்பட்டார். ஒரு நல்ல குருவிடம் அனுப்பி வைத்தார்.

குருகுலவாசம் முடிந்து அவர்கள் இருவரும் திரும்பி வந்தார் கள். முதலில் மூத்த பையனைப் பார்த்து பிரம்மத்தைப் பற்றி நீ என்ன தெரிந்து கொண்டாய் என்றார் தகப்பன்.

உடனே அவன் ஒரு பெரிய பிரசங்கமே செய்ய ஆரம்பித்தான். வேதங்களில் இருந்து சாஸ்திரங்களில் இருந்து நிறைய உதார ணங்கள் காட்டினார். பிரசங்கம் முடியவில்லை.

சரி போதும் நிறுத்து என்று கூறி விட்டு இரண்டாவது பிள்ளை யைப் பார்த்து பிரமத்தைப் பற்றி நீ என்ன தெரிந்து கொண்டாய்? என்று கேட்டார் தகப்பன். அவன் பதில் சொல்லவில்லை. தலையைக் குனிந்து கொண்டு நின்றான். தகப்பன் பார்த்தார் நீ தான் பிரம்மத்தைப் பற்றி ஏதோ கொஞ்சம் தெரிந்து வைத்திருக் கின்றாய் என்றார்.

பிரம்மம் என்றால் என்ன என்பதைப் பற்றி முழுவதும் தெரிந்து கொண்டதாக பலபேர் நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அது எப்படி இருக்கின்றது என்றால்,

பிரமாண்டமான சர்க்கரை மலையிலேயிருந்து ஒரு துணுக்கு சக்கரையை எடுத்துக் கொண்டு போற எறும்பு அடுத்த தடவை முழு சர்க்கரை மலையையும் தூக்கிக் கொண்டு போவேன் என்று சொல்வது போல் இருக்கின்றது என்றார் ராமகிருஷ்ண பரமகம்சர்.

பிரம்மம் என்பது நம்முடைய எண்ணங்களுக்கும் வார்த்தை களுக்கும் அப்பாற்பட்டது. சுகதேவர் போல் உள்ள பெரிய மகான் கள் கூட இது விடயத்தில் ஒரு பெரிய எறும்பு என்று சொல்லலாம். அவ்வளவு தான்.

பிரம்மன் என்கின்ற பெரிய கடலின் கரையிலே நின்று அவர்க ளெல்லாம் காலை நனைத்திருக்கின்றார்கள். அந்த அளவு தான் சொல்ல முடியும். அதிலே அவர்கள் மூழ்கவில்லை. மூழ்கியிருந் தால் அவர்கள் திரும்பியிருக்க மாட்டார்கள்.

ஒரு சின்ன உப்பு பொம்மை இருந்ததாம். அதற்கு ஒரு ஆசை! என்ன தெரியுமா?

கடல் எவ்வளவு ஆழம் இருக்கின்றது என்று நேராக உள்ளே போய்ப் பார்த்து கண்டு பிடிக்க வேண்டும் என்று ஆசை. ஆசை வந்ததற்கு பின் சும்மா இருக்குமா? சரி அளந்து பார்த்து விடு வோம் என்ற தீர்மானம் செய்தது.

உடனே பொத் என்று கடலில் குதித்தது. கொஞ்சத் தூரம் சென்றது அவ்வளவு தான். உப்பு பொம்மை கடலில் விழுந்தால் என்ன நடக்கும். கொஞ்சம் கொஞ்சமாக கரைய ஆரம்பித்தது. கொஞ்ச நேரத்தில் சுத்தமாக கரைந்து ஒன்றுமில்லாமல் போய் விட்டது. அந்த பொம்மையாலே ஆழத்தைக் கண்டுபிடிக்க முடிய வில்லை. அதையே கண்டு பிடிக்க முடியவில்லை என்றதற்குப் பின் அது போய் கடல் ஆழத்தை எந்தக் காலத்தில் கண்டு பிடிக்கப் போகின்றது?

பிரம்ம ஞானம் வந்து விட்டது என்றால் மனிதன் மௌனமாகி விடுகின்றான். அது வருகின்ற வரைக்கும் அவன் சர்ச்சை செய்து கொண்டிருப்பான். தேன் குடிப்பதற்காக ஒரு வண்டு வருகின்றது. அது மலர் மேல் உட்காரும் வரைக்கும் தான் ரீங்காரம் செய்து கொண்டிருக்கும். உட்கார்ந்து விட்டால் மௌனமாகி விடும். அது போல் தான். இதெல்லாம் ராமகிருஷ்ணனுடைய அமுத மொழிகள். இது ஒரு பக்கம் இருக்கட்டும். என்னிடம் வந்து பிரம்ம ஞானத் திற்கு விளக்கம் கேட்ட ஒருவரிடம் எனக்கு என்னென்ன தோன் றியதோ அதை எல்லாம் விளக்கமாகச் சொன்னேன்.


அவர் என்னிடம் வருகின்ற போது நிறைய வளவளான்று பேசிக்கொண்டு, கேள்வி கேட்டுக் கொண்டு வந்தார். ஒரு அரை மணி நேரம் என்னுடைய பேச்சைக் கேட்டவுடனே அவர் மௌன மாகி விட்டார். பிரம்ம ஞானம் வந்து விட்டது போல்!

மௌனமாக எழுந்து என்னிடம் சொல்லிக் காட்டாமல் புறப் பட்டார். ஏன் சேர் புறப்பட்டீங்க? என்றேன்.

தெரியாத்தனமாக உங்களிடம் வந்து விளக்கம் கேட்டு விட்டேன். அதை கேட்டவுடனே ஏற்கனவே கொஞ்சம் நஞ்சம் தெரிந்து வைத்ததையும் மறந்து விட்டேன். இனிமேல் சந்தேகம் வருவ தற்கே சான்ஸ் இல்லை. அதனால் தான் மௌனமாகி விட்டேன் என்றார்.

# றிசாத் குற்றவாளியே!

## ஆதாரங்கள் உண்டு என்கிறார் மகிந்தானந்த



(கொழும்பு)

முஸ்லிம் அமைச்சர்களின் இராஜினாமா ஸ்ரீகொத்தாவால் அரங்கேற்றப்படும் நாடகமா கும். அதனால் றிசாத் பதியுதீனுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் ஏனைய முஸ்லிம் அமைச்சர்களும் அதன் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற இலங்கை மதிப்பீட்டாளர்கள் நிர்வாக திருத்தச் சட்ட மூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

றிசாத் பதியுதீன் மீது நம்பிக்கையில்லாப்பிரேரணை கொண்டுவரப்பட்டது. அவருக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

அவரை இராஜினாமா செய்ய வேண்டுமென வலியுறுத்தப்படுகின்றது. இந்நிலையில் அவர் மட்டும் இராஜினாமா செய்தால் முஸ்லிம் மக்களின் தனிப்பெரும் தலைவராக அவர் மாறி விடுவார் என்ற அச்சத்திலேயே ஏனைய 8 முஸ்லிம் அமைச்சர்களும் தமது அமைச்சுப்பதவிகளை இராஜினாமா செய்து நாடகம் ஒன்றை அரங்கேற்றியுள்ளனர்.

இது ஸ்ரீகொத்தாவால் அரங்கேற்றப்படும் நாடகமாகும்.

றிசாத் குற்றவாளி என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன. அவர் குற்றவாளியாக நிரூபிக்கப்படும்போது அவருக்காக தமது அமைச்சுப்பதவிகளை இராஜினாமா செய்த ஏனைய 8 முஸ்லிம் அமைச்சர்களும் றிசாத்தின் குற்றங்களின் பொறுப்பை ஏற்க வேண்டிவரும் .

அத்துடன் றிசாத் குற்றவாளியான பின்னர் இந்த 8 முஸ்லிம் அமைச்சர்களும் மீண்டும் அமைச்சுப்பதவிகளை ஏற்கக்கூடாது. முஸ்லிம் அமைச்சர்கள் ஒற்றுமையாக இருப்பதாக உலகிற்கு காட்ட முற்படுகின்றனர். இது பிழையான முன்னுதாரணமாகுமென அவர் தனது உரையின் போது தெரிவித்தார். (இ-7)

### முஸ்லிம் அமைச்சர்களின்

# பதவி விலகல் கடிதம் செல்லுபடியற்றது




(பொறளை)

முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரும் கூட்டாகப் பதவி விலகினாலும் தனித்தனி பதவி விலகல் கடிதங்களை கையளித்திருக்க வேண்டும். கூட்டாக கையெழுத்திட்டு கொடுத்த கடிதம் செல்லுபடியற்றது என பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

பொறளையில் பாராளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபாலவின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குற்றம்சாட்டப்படாமல் பதவி விலகிய அமைச்சர்கள் குற்றம் சாட்டப்பட்டவரை பாதுகாப்பதற்காகப் பதவி விலகினார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகி விடக் கூடாது.

கத்தோலிக்க மக்களை இலக்கு வைத்து தேவாலயங்களில் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு நூற்றுக்கணக்கான மக்கள் பலியான போது. இடம்பெறவிருந்த பாரியதொரு வன்முறையை பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தடுத்தி நிறுத்தி மிகவும் பொறுமையுடன் செயற்பட்டார்.

அன்று தடுத்து நிறுத்தப்பட்ட வன்முறை தற்போது இடம்பெறுவதற்கு இடமளிக்கப்படக் கூடாது. இதனைப் பதவி விலகிய முன்னாள் முஸ்லிம் அமைச்சர்கள் கவனத்திலெடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பொலநறுவை ஏரியிலிருந்து கிளைமோர் குண்டுகள் மீட்பு

(பொலநறுவை)

பொலநறுவையில் கிளைமோர் வெடிகுண்டுகள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மெதிரிகிரிய பிசோபுர தஹாம் ஏரியிலிருந்து நேற்று முன் தினம் மாலை இவை மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மெதிரிகிரிய பிசோபுர பிரதேசத்தை சேர்ந்த மீனவர் ஒருவருக்கு இந்தக் குண்டுகள் கிடைத்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

ஏரிக்குச் சென்று மீன் பிடிப்பதற்காக வீசிய வலையில் இந்த வெடிகுண்டுகள் சிக்கியதாக குறித்த மீனவர் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

பின்னர் உடனடியாக பொலிஸார் அவ்விடத்திற்குச், சென்று சோதனையிட்ட போது இந்தக் குண்டுகள் வெளிநாடு ஒன்றில் தயாரிக்கப்பட்ட கிளைமோர் ரக குண்டு எனத் தெரியவந்தது.

கடந்த முதலாம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் மகாவலி சுற்றுலா விடுதி உட்பட பல இடங்கள் திறக்கப்பட்டன.

மக்கள் சந்திப்பு ஒன்றும் இடம்பெற்ற இடத்திற்கு அருகில் இருந்தே இந்தக் குண்டுகள் கிடைத்ததாக தெரியவந்தது.

இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

### பெற்றோர் அவசியமில்லை

# அனைத்துப் பாடசாலைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பணியில் முப்படையினர்

(கொழும்பு)

பாடசாலைகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதற்காக பெற்றோரை அழைக்க வேண்டிய அவசியமில்லை என, கல்வி அமைச்சு அறிவித்தது.

இது தொடர்பாக கல்வி அமைச்சு விடுத்த அறிக்கையில் சர்வதேச பாடசாலைகள் உட்பட அனைத்துப் பாடசாலைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பணியில் முப்படையினர், சிவில் பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸார் ஈடுபட்டு வருவதால் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஆகையால், பாடசாலைகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதற்காக பெற்றோரை அழைக்க வேண்டிய அவசியமில்லை எனத் தெரிவித்தது. (இ-7)

### நாடு நெருக்கடியிலிருந்து விடுபட

# "ஒரே தேசம் ஒரே நாடு" அமைப்பு ஆறு அம்ச திட்டத்தில் கையொப்பம்

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய நெருக்கடியிலிருந்து விடுபடவும் அனைத்து இனத்தவர்களையும் ஒன்றிணைக்கவும் தற்போதைய மற்றும் எதிர்கால ஆட்சியாளர்களை ஒன்றுபடுத்தவும் "ஒரே தேசம் ஒரே குரல்" என்ற அமைப்பு 6 அம்சங்களை உள்ளடக்கிய மகஜரில் மக்களின் கையொப்பத்தை பெறுவதற்கான செயற்பாட்டை ஆரம்பித்துள்ளதாக அந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஜானக ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பு ரினியம் ஹோட்டலில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஜானக ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் நாட்டு மக்களுக்கு தமது தனிப்பட்ட பாதுகாப்பு,



நாட்டின் பாதுகாப்பு மற்றும் நாட்டின் எதிர்காலம் பற்றிய சந்தேகம் எழுந்துள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவம் நாட்டின் பொருளாதாரம், சுற்றுலாத்துறை மற்றும் அரசியலிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த சூழ்நிலையை தணிப்பதற்கு அனைத்து மதகுருமார்களும் தமது பொறுப்பு வாய்ந்த செயற்பாடுகளையும் முன்னெடுத்ததுடன் எதிர்காலத்தில் நாட்டை முன்னெடுத்து செல்வதற்கான பல்வேறு யோசனைகளை முன்வைத்திருந்தனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாட்டில் உள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரையும் இலங்கையர் என்ற ரீதியில் ஒன்றுபடுத்தவும் தற்போதைய, எதிர்கால ஆட்சியாளர்களை ஒன்றுபடுத்தவும் 6 அம்சக் குறிக்கோள்களை உள்ளடக்கிய மகஜரை உருவாக்கியுள்ளோம்.

01. ஜாதி, மதம், இனம் மற்றும் மொழி ஆகிய வேற்றுமைகளுக்கு அப்பால் அனைவருக்கும் பொதுவான ஒரு சட்டமுறைமையை உருவாக்கல்.

02. இலங்கையில் தற்போது காணப்படும் இன, மத, மொழியை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளை இல்லாதொழித்து புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்குதல்.

03. தேசிய பாதுகாப்பை பிரதானமாகக் கொண்ட பொதுவான தேசியக் கொள்கையை உருவாக்குவதற்கான அரசியல் வழிமுறைகளை செயற்படுத்தல்.

04. மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அனைத்து அரசியல்வாதிகளையும் சாதாரண மனிதர்களாக பார்த்தல் மற்றும் அவர்கள் சம்பந்தமாக ஒரு பொதுவான ஒழுங்கு விதிகளை உருவாக்கல்.

05. அனைத்து இலங்கையரினதும் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

06. தீவிரவாதம் மற்றும் அடிப்படைவாதத்தை முற்றாக நாட்டில் இருந்து இல்லாதொழிப்பதற்கான அவசியமான சட்டதிட்டங்களை முன்னெடுத்தல் என்ற குறிக்கோள்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்தக் குறிகோள்களை மகஜராகவும் சமூகவலைத்தளங்களின் மூலமாகவும் பத்திரிகைகள் மூலமாகவும் மக்களுக்கு தெரிவித்து அவர்களின் கையெழுத்துடன் மக்கள் ஆணையாக அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவுள்ளோம். இதன் மூலமாக மக்கள் இந்த விடயங்களை ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பதை அரசாங்கத்திற்கு உணர்த்தி மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

இலங்கையில் பிரச்சினைகள் காலத்திற்குக் காலம் தோற்றம் பெற்று வந்துள்ள நிலையில் மீண்டும் இவ்வாறான சம்பவங்கள் உருவாகாமல் தடுக்கும் வகையிலான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். இந்தியா, சீனா, சிங்கப்பூர் அனைத்து இன, மத, மொழி மக்களையும் உள்ளடக்கியதான திட்டங்களை முன்னெடுத்து வளர்ச்சியடைந்துள்ளன.

ஆசியாவின் முத்து என்று அழைக்கப்படும் இலங்கையை உலக நாடுகள் கண்காணித்துக் கொண்டிருக்கின்றன. உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் சுற்றுலாத்துறையானது மீண்டும் 10 ஆண்டுகள் பின்னோக்கி சென்றுள்ளது. இதன் மூலமாக பலர் தமது தொழில் வாய்ப்புக்களையும் இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன ரீதியில் பிரிந்து செயற்படக் கூடாது

## பௌத்த பீடங்களுடன் முழுமையாக இணைந்து கொள்கின்றேன்–ரணில்



முஸ்லிம் பிரதிநிதிகள் தொடர்பில் பௌத்தபீடங்களின் தேரர்கள் விடுத்த கோரிக்கையுடன் நாங்கள் இணைந்து கொள்கின்றோம். அவ்வாறு கோரிக்கை விடுத்தமைக்காக நன்றி தெரிவிக்கின்றோம். அத்துடன் மல்வத்து பீடத்தின் தேரர் நியங்கொட விஜித சிறியை சந்தித்து இது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்த எதிர் பார்க்கின்றேன் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இன ரீதியில் நாங்கள் பிரிந்து செயற்படக்கூடாது. சுதந்திரத்தின் பின்னர் அமைச்சரவையில் முஸ்லிம் பிரதிநிதிகளும் அங்கம் வகித்தனர். புலிகளின் யுத்த காலத்திலும் முஸ்லிம் அமைச்சர்கள் அங்கம் வகித்தனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றக் கட்டடத் தொகுதி யில் ஆளும்கட்சி பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்களு டன் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த வாரம் மேற் கொள்ளப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டம் மற்றும் அதன் பின்னர் முஸ்லிம் அமைச்சர்கள் பதவியை இராஜினாமா செய்தமை என்பன ஆரோக்கியமான நிலைமைகள் அல்ல. இது தொடர்பில் நான்கு பௌத்த பீடங்களும் முன்வைத்த கோரிக்கையுடன் நான் முழுமையாக இணைந்து கொள்கின்றேன். இன ரீதியில் பிரிந்து செயற்படுவது ஆரோக்கியமான செயற்பாடாக அமையாது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் நாட்டின் அனைத்து இன மக்களும் இணைந்து செயற்பட்டனர். அவ்வாறான ஓர் ஒற்றுமை இதற்கு முன்னர் இருந்ததில்லை. அந்த ஒற்றுமையை வைத்து எதிர்கால பயணத்தை முன்னெடுக்க நாங்கள் திட்டங்களைத் தயாரித்தோம். எனினும் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட உண்ணாவிரதப் போராட்டம் அதனால் மேலெழும்பிய இன வாதம், முஸ்லிம் அமைச்சர்கள் பதவி விலகியமை என்பன காரணமாக முஸ்லிம் மக்கள் தூர விலகிச் சென்றுள்ளனர். இது நாட்டுக்கு ஒரு சிறந்த நிலைமை அல்ல என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். கடந்த வாரம் ஓர் இனவாதச் செயற்பாடு இடம்பெற்றது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். பயங்கரவாத தாக்குதலின் பின்னர் சந்தேக நபர்களைக் கண்டுபிடிக்க விரைவாக நடவடிக்கை எடுத்திருந்தோம். சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்பட்டது. எனினும் ஒரு சிலர் அதனை முறியடித்துச் செயற்பட்டனர். குளியாப்பிட்டி பிர தேசத்தில் ஓர் இனவாத செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. அதேபோன்று கடந்த வாரமும் ஓர் இனவாதச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. பிரதேச மட்டத்திலேயே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. காரணம் நாட்டில் அமைதி நிலவுவதையும் ஐ.எஸ். பயங்கரவாதம் கட்டுப்படுத்தப்படுவதையும் இனவாதிகள் விரும்பவில்லை.

பௌத்தபீடங்களின் தேரர்கள் விடுத்த கோரிக்கையுடன் நாங்கள் இணைந்துகொள்கின்றோம். அவ்வாறு இணைந்தமைக்காக நன்றி தெரிவிக்கின்றோம். இன ரீதியில் நாங்கள் பிரிந்து செயற்படக் கூடாது. சுதந்திரத்தின் பின்னர் முஸ்லிம் பிரதிநிதிகளும் அமைச்சரவையில் அங்கம் வகித்தனர். புலிகளின் யுத்த காலத்திலும் முஸ்லிம் அமைச்சர்கள் அங்கம் வகித்தனர். இது தொடர்பில் ஒரு பரந்துபட்ட கலந்துரையாடலை எதிர்பார்க்கின்றோம். அத்துடன் மல்வத்து பீடத்தின் தேரர் நியங்கொட விஜிதசிறியைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த எதிர்பார்க்கின்றேன். யாராவது இனவாதச் செயற்பாடுகளை முன்னெடுத்தால் அதற்கு நாம் முகம்கொடுக்கத் தயாராக வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கையின் நிலக்கண்ணிவெடி ஆபத்துக் கல்வி நிகழ்ச்சித்திட்டம்

## வெற்றிகரமான நிகழ்ச்சித் திட்டமாக பூகோளப் பங்காளர்களால் ஏற்பு



2019 மே 22-24 ஆம் திகதி வரை ஜெனிவாவில்பிரதான மன்றத்துடனும் பக்கநிகழ்வுகளுடனும் நிலக்கண்ணிவெடி அகற்றல் பற்றிய ஒருமீளாய்வுக் கூட்டம் இடம்பெற்றது. பிரதானமாக இலங்கையின் வடக்கு, கிழக்கு மாவட்டங்களில் ஆரம்பத்தில் 1302 சதுர கிலோமீற்றர் நிலப்பகுதியில் நிலக்கண்ணிவெடி ஆபத்துள்ளது உறுதி செய்யப்பட்டதாக அறிக்கையிடப்பட்டது. நிலக்கண்ணிவெடி அகற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின்மீது அரசாங்கத்தின் விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், நிலக்கண்ணிவெடி செயற்பாட்டுக்கானதகவல் முகாமைத்துவ முறைமையின்படி (IMSMA) அதன் பயனாக 2019 ஏப்ரல் மாதமளவில் நிலக்கண்ணிவெடிகள் அகற்றப்படவுள்ள எஞ்சிய 25 சதுர கிலோமீற்றர்களாக குறைந்துள்ளது. எவ்வாறாயினும், ஏற்கனவே நிலக்கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு எஞ்சியிருக்கும் நிலப்பகுதி 18.5 சதுர கிலோ மீற்றர்களாக இருப்பதுடன், வேறு அநேக நாடுகளுடன் ஒப்பிடும் போது அதுமிகவும் பாரா ட்டத்தக்க அடைவென தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள்,மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

தேசியகொள்கைகள்,பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம்,புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் நேரடி நோக்கெல்லையின் கீழுள்ள தேசிய நிலக்கண்ணிவெடி செயற்பாட்டு மத்தியநிலையம்,அதன் விடயப் பொறுப்பு அமைச்சர் என்ற வகையில் பிரதமரால் நெறிப்படுத்தப்படுகிறது. முன்னைய கூட்டத்தில் நிலக்கண்ணி வெடி அகற்றல் சம்பந்தமாக இலங்கை அரசாங்கம் அடைந்துள்ள முன்னேற்றம் சம்பந்தமாக இளவரசர் மிரெத்ராத் செய்ட் அல்-ஹுசைனினால் பாராட்டப்பட்டது.

2020 ஆம் ஆண்டளவில் நிலக்கண்ணிவெடிகளற்ற ஒரு நாடு என்ற நோக்கை அடைந்து கொள்வது இலங்கையின் இலக்காகும். எவ்வாறாயினும், நிலக்கண்ணி வெடிகள் உள்ள எஞ்சிய பகுதிகளில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு கொடை வழங்குநர்களிடமி ருந்து நிதி பெற்றுக்கொள்வது ஒரு துரித தேவைப்பாடாகும். அண்மையில் 6.8 மில்லியன் ஐ.அ.டொலர் பெறுமதியான உதவிகளை வழங்க நோர்வே அரசாங்கம் முன்வந்துள்ளது. வேறு கொடை வழங்குநர்களும் நிலக்கண்ணி வெடி அகற்றும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு உதவி வழங்குவதற்கு அக்கறையுடன் காணப்படுவதுடன் அவசியமான மொத்த நிதியாக 30 மில்லியன் ஐ.அ.டொலர் தொகை மதிப்பிடப்பட்டுள்ளது.

யுனிசெப் மற்றும் பிற அபிவிருத்திப் பங்காளர்களினால் நெருங்கிய ஒத்துழைப்புடன் வினைத்திறனான நிலக்கண்ணி வெடி ஆபத்துக் கல்விநிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக நிலக்கண்ணி வெடியால் ஏற்படும் காயங்களையும் மரணங்களையும் குறிப்பிடத்தக்க அளவில் குறைக்க முடிந்தது. நிலக்கண்ணி வெடி ஆபத்துக் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தில் பாடசாலைப் பிள்ளைகள், ஆசிரியர்கள், சமூகம், உலோகங்களைச் சேகரிப்போர், விறகு சேகரிப்போர் போன்ற ஆபத்தை எதிர்நோக்கும் கூடுதல் வாய்ப்புள்ள குழுக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும், பிள்ளைகளுக்கு பாதுகாப்பான பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன்,பிறநாடுகளுடன் ஒப்பிடும்போது, மரணங்களும் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையும் நிலக்கண்ணிவெடி ஆபத்துக் கல்வி மூலம் குறிப்பிடத்தக்க அளவால் குறைந்திருப்பதாக அமைச்சின் செயலாளர் வே.சிவஞான சோதி தெரிவித்தார். ஜெனீவா மன்றத்தில் கலந்து கொண்ட அநேகமான பங்காண்மை நாடுகளால் இது வெற்றிகரமான ஒரு நிகழ்ச்சித் திட்டமாகக் குறிப்பிடப்பட்டது.

பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவி வழங்கல்துறையானது கடந்த காலத்தில் பூகோளரீதியாக கூடுதல் கவனம் செலுத்தப்படாததும்குறைவாக நிதியளிக்கப்பட்டதுமான ஒருதுறையாக காணப்பட்டது. இலங்கை தேசிய நிலக்கண்ணிவெடி செயற்பாட்டு உபாயமுறையினால் முதலுதவி, மருத்துவச்சிகிச்சைகள் ,ஆலோசனை, உள-சமூக உதவிகள்,செயற்கைக் கால்கள் மற்றும் சக்கரநாற்காலிகள், கைப்பிடிகள், ஊன்றுகோல்கள் முதலான ஆதாரகருவிகள் போன்ற பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகளை வழங்குவதன்மீது கூடுதல் கவனம் செலுத்தப்படுகிறது. நிலக்கண்ணிவெடிகளுக்கு இரையானவர்களுக்கு சமூக மற்றும் பொருளாதார ரீதியாக மீண்டும் சமூகத்தோடிணைவதற்கு இயலுமான வகையில் அவர்களுக்கு தொழில் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சியளிப்பது நிலக்கண்ணி வெடி செயற்பாட்டு உபாயமுறையின்மையே இலக்காகும். இந்த உபாய முறையினால் நிறுவன ரீதியான சமூகப் பொறுப்புகளின் கீழ் தனியார்துறை நிதிகளை ஈடுபடுத்துவதற்கும் வழி கோலுவதாக அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

ஹலோட்ரஸ்ட், மெக்,டேஷ், ஷார்ப், இலங்கை இராணுவம் என்பன நிலக்கண்ணி வெடி அகற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. கொடை வழங்குநர்கள்,சர்வதேச அரசசார்பற்ற ஒழுங்கமைப்புகள், ஐக்கிய நாடுகள் முகவராண்மைகள் உள்ளிட்ட அரச சார்பற்ற ஒழுங்கமைப்புகளும் மனிதாபிமான நிலக்கண்ணிவெடி அகற்றும் ஜெனீவா சர்வதேச மத்திய நிலையத்தின் செயற்படுத்துவதற்கான உதவி அலகுடன் (ISU-GICHD) இணைந்து அரசாங்கத்தின் உயர்மட்ட அர்ப்பணிப்பு, தேசிய உரித்து ,அரசாங்கத்தின் ஒருங்கிணைப்பும் கண்காணிப்பும் பேரில் இலங்கையின் நிலக்கண்ணி வெடிஅகற்றும் நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமான ஒரு நிகழ்ச்சித் திட்டமாகக் கருதப்படுகிறது.

நிலக்கண்ணிவெடித் தடை பற்றிய ஒட்டாவா சமவாயத்தின் 5 ஆம் வாசகத்திற்கு அமைவாக இலங்கை அதன் முன்னேற்ற அறிக்கையைச் சமர்ப்பித்தது. ஒட்டாவா சமவாயத்திற்கு அமைவாக 737,464 ஆளெதிர்ப்பு நிலக்கண்ணிவெடிகளும் 1, 407, 689 வேறுவெடிபொருட்களும் இலங்கையினால் நிர்மூலமாக்கப்பட்டன. மேலும், இலங்கை தேசிய நிலக்கண்ணிவெடி செயற்பாட்டு நியமங்களுடன் அமைந்தொழுகுவதுடன், மீள்கு டியேற்றத்திற்கான குடியிருப்புப் பகுதிகள், வாழ்வாதாரப் பகுதிகள், விவசாய மற்றும் உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்திப் பகுதிகள் உள்ளிட்ட பாடசாலைகள், மருத்துவமனைகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களை அணுகுவதற்கு அவசியமான பகுதிகள் போன்ற உயர் தாக்கமுள்ள பகுதிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

செயற்பாட்டு உதவி அலகும் (ISU) மனிதாபிமான நிலக்கண்ணிவெடி அகற்றுவதற்கான ஜெனீவா சர்வதேச மத்திய நிலையமும் (GICHD)நிலக்கண்ணி வெடி அகற்றும் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நிதியங்களை ஈடுபடுத்துவதில் வசதியளிக்கும் பொருட்டு தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சுடன் மிக நெருங்கிய ஒத்துழைப்புடன் செயலாற்றுகின்றன. நிலக்கண்ணி வெடி அகற்றும் வேலைத்திட்டத்திலான இலங்கையின் முன்னேற்றமானது ஜெனீவா ஐக்கிய நாடுகள் அமைப்பின் நோர்வே யிற்கான நிரந்தரப் பிரதிநிதி தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர்,மனிதாபிமான நிலக்கண்ணிவெடி அகற்றுவதற்கான ஜெனீவா சர்வதேச மத்திய நிலையத்தின் உபாய முறை முகாமைத்துவம் பற்றிய மதியுரைஞர் திருமதி அசாமசல் பர்க் மற்றும் ஏனைய தரப்பு நாடுகளின் பாராட்டைப் பெற்றது.

மனிதாபிமான நிலக்கண்ணி வெடி அகற்றுவதற்கான ஜெனிவா சர்வதேச மத்திய நிலையத்தின் பணிப்பாளர் தூதுவர் ஸ்டெபானோ டொஸ் கானோ, ஜெனீவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பின் நோர்வேயிற்கான நிரந்தரப் பிரதிநிதி தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர்,தேசிய கொள்கைகள்,பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞான சோதி, ஜெனீவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக்கான நிரந்தரப் பிரதிநிதி தூதுவர் ஏ.எல்.ஏ. அசீஸ்,GICHD அமுலாக்கல் உதவி அலகின் பணிப்பாளர் ஜுவான் கார்லோஸ் ருஅன், மனிதாபிமான நிலக்கண்ணிவெடி அகற்றுவதற் கான ஜெனீவா சர்வதேச மத்திய நிலையத்தின் உபாயமுறை முகாமைத்துவம் பற்றிய மதியுரைஞர் திருமதி அசாமசல்பர்க், பல்வேறு தரப்பு நாடுகளிலிருந்து இன்னும் அநேக அதிகாரிகளும் மீளாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)


கலாநிதி மு.குணசிங்கம்

268

## சுதந்திரத்தின் பின் இலங்கை அரசின் அரசியல் நடவடிக்கைகளும் தமிழ்த் தேசியத்தின் எழுச்சியும் (கி.பி.1948-கி.பி.1983)

மேலும் தமிழ் அரசியல் தலைவர்களுக்கு இது ஓர் எச்சரிக்கையாகவும் விடப்பட்டுள்ளது. எனவே சிங்கள அரசியல்வாதிகள் தமது அரசியல் நகல் திட்டத்தை வெகுசாதுரியமாக 1947 இல் அறிமுகப்படுத்தியதிலிருந்து இன்று வரை எதுவித நியாயமான ஜனநாயக உரிமைகளையும் தமிழருக்கு வழங்க முன்வரவில்லை என்ற அரசியல் அத்தியாயத்தின் ஆரம்பமாக மேற்படி தேசியக்கொடி விடயத்தைக் காண முடிகிறது.

ஆனால், இலங்கைக்கு சுதந்திரம் கிடைக்கும் வரையில் டி.எஸ். சேனநாயக்க இந்தியத் தமிழரின் பிரஜாவுரிமை பற்றிய விவாதங்களைப் பெரிதாக முன்வைக்கவில்லை. சகல சிறுபான்மைப் பிரதிநிதிகளையும் பல்வேறு வகைகளில் திருப்திப் படுத்திய பின் மாசி 1948 இல் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த பின்னரே அவர் இந்தியத் தமிழர் பிரஜாவுரிமை பற்றிய பிரச்சினையைப் பாராளுமன்றத்தின் முன் கொண்டு வருவதை ஹன்சாட் மூலம் அறியமுடிகிறது.



இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டபோது

இவ்விடயம் பற்றி 1945களிலிருந்து கலந்துரையாடப்பட்டபோதும் 1948 மாசி 4 ஆம் திகதி இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்ததிலிருந்து 14.10. 1948 இல் புதிய பாராளுமன்றம் கூட்டப்பட்டது வரையில் இப்பிரச்சினை சம்பந்தமான விவாதங்களை டி.எஸ். சேனநாயக்க அரசு முன்னெடுக்கவில்லை.

சகல இனத்தவரினதும் ஒத்துழைப்பைப் பல்வேறு நடைமுறைகள் மூலம் சம்பாதித்துக் கொண்டு சிறுபான்மையினப் பிரதிநிதிகளுக்கு அமைச்சுப் பதவிகளையும் துணையமைச்சுப் பதவிகளையும் மூத்தோர் அவையில் அங்கத்துவம் போன்றவற்றையும் வழங்கி அவர்களைத் திருப்திப்படுத்தி பிரித்தானிய அரசின் மதிப்பையும் நம்பிக்கையையும் பெற்று முதலில் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைக்க வழி செய்த பின்னர் இந்தியத் தமிழரின் பிரஜாவுரிமைப் பிரச்சினையைப் பாராளுமன்றத்தில் முன்வைப்பதே டி.எஸ்.சேனநாயக்கவின் அரசியல் சாணக்கியம் என்று தெரிகிறது.

சோல்பரி ஆணைக்குழுவினர் அரசியல் யாப்பை அறிமுகப் படுத்தியபோது பிரஜாவுரிமை பற்றிப் பின்வருமாறு முடிவை எடுத்திருந்தனர். தற்போதுள்ள வாக்குரிமை, தேர்தல் என்பன சம்பந்தமான சட்டங்கள் சில தற்காலிக திருத்தங்களுடனேயே திருத்தியமைக்கப்பட்ட நகல் திட்டத்துடன் சேர்க்கப்பட்டுள்ளன. எனவே சோல்பரி ஆணைக்குழுவின் சிபாரிசுக்கு இணங்க இச்சட்டங்களைச் சீரமைக்கும் பணி இலங்கையின் புதிய பாராளுமன்றத்தினதாகும்.

ஆணைக்குழுவானது இந்தியத் தமிழரின் வாக்குரிமை, பிரஜாவுரிமை பற்றிய விடயங்களில் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னர் எதுவித நடவடிக்கையும் எடுப்பதற்கு விரும்பவில்லை என்பதனையே மேற்படி கூற்று காட்டுகின்றது.

இந்த விடயம் புதிய சட்டசபையினது பணியாகும் என்பதே அவர்களினது சிபாரிசாக இருந்தது. ஆனால் இறுதியாக எடுக்கப்பட்ட முடிவோ பொன்னம்பலத்திற்கும் அவருக்கு ஆதரவளித்த பல்வேறு இலங்கைத் தமிழருக்கும் மாபெரும் ஏமாற்றத்தையே அளித்தது.

சோல்பரி ஆணைக்குழுவினரின் சிபாரிசுக்கு இணங்க டி.எஸ்.சேனநாயக்க தான் ஏற்கனவே திட்டமிட்டபடி 1948 ஒகஸ்ட் 4 ஆம் திகதி இந்தியர் பிரஜாவுரிமை மசோதாவைப் பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடரில் முன்வைத்தார். இதைத் தொடர்ந்து மிகவும் காரசாரமான வாதப் பிரதிவாதங்கள் டிசெம்பர் 1948 வரையில் இடம்பெற்றன.

டி.எஸ். சேனநாயக்க, டட்லி சேனநாயக்க, எஸ். டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்க, ஜே. ஆர்.ஜெயவர்த்தன போன்றவர்களும் மற்றும் பல ஐக்கிய தேசியக் கட்சிப் பிரதிநிதிகளும் இந்தியத் தொழிலாளருக்குப் பிரஜாவுரிமை வழங்குவதில் தமது விருப்பமின்மையை வெளிப்படையாகவே பாராளுமன்ற விவாதங்களின் போது தெரிவித்தனர்.

தமிழராகிய சி.சுந்தரலிங்கமும் தான் சார்ந்திருந்த அரசை ஆதரிக்க வேண்டிய ஒரு நிலைப்பாட்டில் காணப்பட்டார். இடதுசாரிகளான கொல்வின் ஆர்.டி.சில்வா, என். எம். பெரேரா போன்றவர்களும் ஏனைய இடதுசாரிப் பிரதிநிதிகளும் இந்தியத் தமிழருக்குப் பிரஜாவுரிமை மறுக்கப்படுவதை மிகத் தீவிரமாக எதிர்த்தனர். இவ்விடயத்தில் என்.எம். பெரேரா பாராளுமன்ற விவாதத்தின் போது கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் பின்வருமாறு கூறுகின்றார்.

இந்தியர்களை உங்கள் நாட்டவராக நீங்கள் ஏன் நடத்தக்கூடாது? சிங்களவரை மட்டுமே உங்கள் நாட்டவராக நீங்கள் நடத்தவேண்டுமா? இந்தியர் இங்கு வாழ்வதற்கும் தொழில் புரிவதற்கும் ஏன் சாவதற்கும் தயாராக இருக்கும் பட்சத்தில் அவர்களுக்குப் பிரஜாவுரிமை வழங்கப்படுவது ஆகக்குறைந்தபட்ச நீதியாகும். அவர்கள் மனிதரைப் போன்று நடத்தப்படல் வேண்டுமே அல்லாது வெறுமனே வேண்டத்தகாதவர்களாக நடத்தப்படல் ஆகாது.

முஸ்லிம் பிரதிநிதிகளும் குறிப்பாக ரி.பி.ஜயா, எச்.எஸ். இஸ்மாயில், ஏ.சின்னலெப்பை போன்றவர்களும் அரசுக்கு இவ்விடயத்தில் தமது ஆதரவை அளித்தனர். இவர்களைவிட இலங்கைத் தமிழ்ப் பிரதிநிதிகளும் ஒரு சில இந்தியத் தமிழ்ப் பிரதிநிதிகளும் குறிப்பாக ஜி.ஜி.பொன்னம்பலம், சி. சுந்தரலிங்கம், கே. கனகரட்ணம், வி. நல்லையா, எஸ்.யு. எதிர்மனசிங்கம், ரி.ராமலிங்கம், ஏ.எல்.தம்பிஐயா போன்றவர்கள்கூட இவ்விடயத்தில் அரசுக்கு ஆதரவு வழங்கினர்.

தமிழ்ப் பிரதிநிதிகளில் குறிப்பாக எஸ்.ஜே.வி. செல்வநாயகம், பி.குமாரசிறி, கே.ராஜலிங்கம், டி.ராமானுஜம், எஸ். சிவபாலன், எம். சுப்பையா, எஸ்.தொண்டைமான், சி.வன்னியசிங்கம், வி.வேலுப்பிள்ளை போன்றவர்கள் தமது தீவிர எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இறுதியாக இந்தியர் பிரஜாவுரிமை மசோதா பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டபோது 52 பிரதிநிதிகள் சாதகமாகவும் 32 பிரதிநிதிகள் எதிர்த்தும் வாக்களித்தனர்.

(தொடரும்)

# தவறு செய்தது ஜனாதிபதியாக இருந்தாலும் தண்டனை வழங்கப்படும்-மனோ எச்சரிக்கை



(மட்டக்குளி)

தவறு செய்தது ஜனாதிபதியாக இருந்தாலும் அவருக்கு தண்டனை வழங்கப்படுமென தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக முன்னேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் மனோ கணேசன் எச்சரித்தார்.

மட்டக்குளி - அலிவத்த பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாட்டில் தற்போது தோன்றியுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதப் பிரச்சினையை அனைவரும் ஒன்றிணைந்து முறியடிக்க வேண்டும்.

அதனைத் துடைத்தெறிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. யார் குற்றம் செய்திருந்தாலும் அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படும்.

அது ஜனாதிபதியோ, பிரதமரோ, றிசாத் பதியுதீனோ அல்லது நானாக இருந்தாலும் தண்டனை வழங்கப்படும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## குண்டுத்தாக்குதல் குறித்த

# ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை அறிக்கை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

## அரசிடம் அநுர வலியுறுத்து



(கொழும்பு)

குண்டுத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நிலையியற்கட்டளையின் 27/2 இன் கீழ் விசேட அறிக்கையொன்றை விடுத்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

உயிர்த்த ஞாயிறு அன்று இலங்கையில் எட்டு இடங்களில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக மூவரடங்கிய விசாரணைக் குழுவை ஜனாதிபதி நியமித்தார்.

ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி முதல் அக்குழுவின் பணிகள் ஆரம்பமாகின. இடைக்கால விசாரணை அறிக்கை தமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா மே முதலாம் திகதி அறிவித்தார்.


அறிக்கை சட்டமா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், இரண்டு வாரங்களுக்குள் இறுதி அறிக்கை வெளிவரும் என்றும் அவர் தெரிவித்தார். எனவே, இறுதி விசாரணை அறிக்கை எப்போது வெளியிடப்படும், அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமா என்றும், இடைக்கால அறிக்கையிலுள்ள பரிந்துரைகள் எவை என்றும் ஜனாதிபதியின் சார்பில் பிரதமர் இச்சபைக்கு பதிலளிக்க வேண்டும்" என்று அநுரகுமார சுட்டிக் காட்டினார்.

மேற்படி கேள்விகளுக்கு ஆளுங்கட்சியின் சார்பில் பிரதம கொறடா கயந்த கருணாதிலக பதில்களை வழங்கினார். இதன் பின்னர் இடையீட்டுக் கேள்வியொன்றை எழுப்பி கருத்து வெளியிடுகையிலேயே, இறுதி அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்" என்று அநுர வலியுறுத்தினார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1742

### தருண்

டேய் நீ என்ன அடக்குறது இருக்கட்டும் முதல்ல டவுசர் போட்டுட்டு வாடா... எனக்கே வெக்கமா இருக்கு




### கண்ணன்

மனைவி: நான் கொஞ்சம் வெளியே போறேன்... உங்களுக்கு ஏதாவது வேணுமா
கணவன்: அது போதும்மா எனக்கு



### ராஜன்

அப்பாகிட்ட பொம்மை கேட்டேன்... காசு இல்லைன்னு சொல்லிட்டு இப்ப அரசு பேருந்துல கிளம்பிக்கிட்டு இருக்காரு... இதெல்லாம் நியாயமா?



### விமலன்

பணம் கொடுத்தாலும் பெற முடியாத பத்து விடயங்கள்




### குமணன்

யாரை எங்கே நிறுத்தவேண்டும் என்பதைவிட நாம் எங்கே நிற்கவேண்டும் என்று உணர்ந்து கொள்வதே சிறப்பு



### ராகவன்

எதை நீ இழந்தாலும் மனம் தளர்ந்து விடாதே... எதிர்காலம் என்ற ஒன்று இன்னும் இருக்கிறது!



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சுக்கான் பொறிக்கப்பட்ட ஆடை அணிந்த முஸ்லிம் பெண் 21 நாட்கள் சிறைவாசம்

## நீதிமன்றத் தீர்ப்பு குறித்து அமீர் அலி விசனம்



(கொழும்பு)

றிசாத் பதியுதீனுக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் நாங்கள் தீர்மானம் ஒன்றை எடுப்போம். அதேபோன்று விமல் வீரவன்சவுக்கு முதுகெலும்பு இருக்குமானால் ச.தொ.ச வாகனங்கள் பயங்கரவாதிகளுக்குப் பயன்படுத்தியதை ஒப்புவிக்க வேண்டும் என முன்னாள் பிரதி அமைச்சர் அமீர் அலி பாராளுமன்றில் தெரிவித்தார்.

அத்துடன் பயங்கரவாத தாக்குதலைத்தொடர்ந்து அப்பாவி முஸ்லிம்கள் அதிகமானவர்கள் சிறையிலடைக்கப்பட்டனர். சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்படுபவர்களையும் பிணை வழங்க முடியாதவாறு பொலிஸார் குற்றங்களைப் பதிவு செய்தனர்.

கப்பலின் சுக்கான் பொறிக்கப்பட்ட ஆடை அணிந்தமைக்காக முஸ்லிம் பெண் ஒருவர் 21 நாள் சிறையிலடைத்து விசாரிக்கப்பட்டார்.

ஆனால் குருநாகலையில் தாக்குதல் நடத்தியவர்கள் அனைவரும் சாதாரண சட்டத்தில் கைது செய்யப்பட்டும் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அதனால் இந்த நாட்டின் நீதிமன்ற தீர்ப்புக்கள் முஸ்லிம்களுக்கு ஒருசட்டமும் மற்றவர்களுக்கு ஒரு சட்டமாகவும் இருக்கின்றதாகவே தெரிகின்றது.

அத்துடன் மகாசங்கத்தினரின் கோரிக்கைக்கு நாங்கள் மதிப்பளிக்கின்றோம். அவர்கள் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் போன்று சிந்திப்பவர்கள் அல்லர். நாட்டின் எதிர்காலம் குறித்து சிந்தித்தே எம்மிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

அதனால் அவர்களின் கோரிக்கை தொடர்பில் நாங்கள் அவர்களுடன் கலந்துரையாடவுள்ளோம் என்றும் தெரிவித்தார். (இ-7)

# பயங்கரவாதத்தோடு தொடர்புடையவர்களை வெளியுலகிற்கு காட்ட வேண்டியது எமது கடமை

## நாடாளுமன்றில் வியாழேந்திரன் விளக்கம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு இணைக்கப்பட்டால் இரத்த ஆறு ஓடும் என எச்சரித்தவர்களும் தமிழ் மக்களின் காணிகளைப் பெற்று பள்ளிவாசல்களைக் கட்டினோம் என்று மார்தட்டியவர்களும் எம்மை முஸ்லிம் மக்கள் மத்தியில் இனவாதிகளாக காட்ட முற்படுகிறார்கள் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற இலங்கை மதிப்பீட்டாளர்கள் நிர்வாக திருத்தச் சட்ட மூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு



தெரிவித்தார்.


ஐ.எஸ் .ஐ.எஸ்.பயங்கரவாதிகளுக்கு உதவியவர்களை நாம் வெளிக்கொணரும்போது எம்மை முஸ்லிம் மக்கள் மத்தியில் இனவாதிகளாகக் காட்டுவதற்கு பலர் முயற்சி செய்கின்றனர். முஸ்லிம் மக்கள் அனைவரும் குற்றவாளிகள் இல்லை. எனினும் பயங்கரவாதத்தோடு சம்பந்தப்பட்டவர்களை வெளி உலகுக்கு காட்ட வேண்டியது எமது கடமை.

அத்துடன் மீண்டும் வடக்கு-கிழக்கு இணைக்கப்பட்டால் இரத்த ஆறு ஓடும் என்பவர்களும் தமிழ் மக்களின் காணிகளை பெற்று பள்ளிவாசல்களைக் கட்டினோம் என்று கூறுபவர்களும் எம்மை முஸ்லிம் மக்கள் மத்தியில் இனவாதியாக காட்ட முற்படுகிறார்கள்.

இத்தகைய செயற்பாடுகளை செய்தவர்கள் தம்மை நல்லவர்களாக காட்டிக்கொண்டு எம்மை இனவாதிகளாக்கப் பார்க்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பயங்கரவாதத்தை ஒழிக்க முஸ்லிம் மக்கள் தயார்

## அமைச்சர் காமினி தெரிவிப்பு



(கொழும்பு)

இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை வலுப்படுத்தும் நோக்கில் நாட்டில் அமைதியை வேண்டியும் புனித யாத்திரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என புத்தசாசன மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா தெரிவித்தார்.

பொசன்போயா தினத்தை முன்னிட்டு "வடக்கிலிருந்து தெற்கு வரை புத்தபகவானை தரிசிக்கும் வரப்பிரசாதம்" என்னும் தொனிப் பொருளில்புகையிரதத்தின் ஊடான ஆசீர்வாத புனித யாத்திரையொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய பெலியத்தை பகுதியிலிருந்து காங்கேசன்துறை வரையான பகுதிக்கு இம்மாதம் 11 இலிருந்து 16 வரையான காலப் பகுதியில் ஆசீர்வாத யாத்திரையொன்று பாதுகாப்பான முறையில் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பொசன் போயா தினத்தை முன்னிட்டு மேற்கொள்ளப் படவுள்ள விசேட செயற்றிட்டங்கள் தொடர்பில் ஊடகங்களை தெளிவுபடுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகச் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பு நெருக்கடி நிலையை கருத்தில் கொண்டு வெசாக் தினக்கொண்டாட்டங்கள் வரையறுக்கப்பட்டிருந்தன. இந் நிலையில் பொசன் போயா தினக் கொண்டாட்டங்களை சிறந்த முறையில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பௌத்த மதகுருக்கள் கேட்டுக் கொண்டமைக்கு அமைய பொசன் போயாதின கொண்டாட்டங்களை சிறந்த முறையில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. அதன் ஒரு அங்கமாக வடக்கிலிருந்து தெற்கு வரையில் மக்கள் அனைவரும் புத்தபகவானை தரிசிக்கும் வகையிலும் நாட்டின் அமைதிக்காகப் பிரார்த்திக்கும் வகையிலும் புகையிரதத்தினூடான யாத்திரை ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பயங்கரவாதத்தை நாட்டிலிருந்து இல்லாதொழிப்பதற்கான ஒத்துழைப்பை வழங்க முஸ்லிம் மக்கள் தயாராகவுள்ளனர். பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்வதற்கு ஏதுவான தகவல்களையும் முஸ்லிம் மக்கள் வழங்கியுள்ளனர். இந்த முஸ்லிம் பயங்கரவாதத்தை நாட்டிலிருந்து ஒழிக்க தேவையான ஒத்துழைப்புக்களை முஸ்லிம் சமூகத்தினர் வழங்கிவருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# செய்தித்துளிகள்

## மிளகாய்த்தூள் வைத்தியம் பார்த்தவர் பரிதாப மரணம்

(தம்புள்ள)

நாய் கடித்தமைக்கு சிகிச்சை பெற்றுக்கொள்ளாத நபரொருவர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சில மணிநேரங்களில் மரணித்த சம்பவமொன்று தம்புள்ள வைத்தியசாலையில் இடம்பெற்றது.

கலேவெல தேவஹூவ ஹீனுக்கல பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயது சாந்த அபேரத்ன என்பவரே இவ்வாறு உயிரிழந் தார்.

சில மாதங்களுக்கு முன்னர் நாயொன்று அவரை கடித்துவிட்டதென, அந்த நபர், தன்னுடைய தாய்க்கு தெரிவித்தார்.

ஆனால் அவர், சிகிச்சைபெற்றுக்கொள்ளாது, அந்தக் காயத்தின் மேல், மிளகாய்தூளை தூவி, காயம் காய்ந்து விடுமென, உறவினர்களிடம் தெரிவித்தார்.

எனினும், உடலில் ஏற்பட்ட சில மாற்றங்களை அடுத்து, நேற்று முன்தினம் பிற்பகல், அவர் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டார்.

வைத்திய பரிசோதனைக்குப் பின்னர், சில மணிநேரத் அவர் மரணித்துவிட்டார். (இ-7)

## தந்தை தாக்கி மகன் பலி! மனைவி வைத்தியசாலையில்

(மாளிகாவத்தை)

மாளிகாவத்தை பிரதேசத்தில் வீடொன்றில் ஒருவர் கூரிய ஆயுதங்களால் மேற்கொண்ட தாக்குதலில் அவரின் மகன் உயிரிழந்தார்.

குறித்த நபர் தனது மனைவிக்கும் இதன்போது தாக்குதல் நடத்தியுள்ளதுடன், அவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மகன் உயிரிழந் துள்ளதார்.

நீண்ட காலமாக தொடர்ந்து வந்த குடும்ப பிரச்சினை காரணமாக இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். 17 வயதுடைய நபர் ஒருவரே உயிரிழந்ததுடன், சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 200 |
| தக்காளி | 100 | 110 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 130 | 100 |
| கோவா | 100 | 70 | 120 |
| கரட் | 220 | 80 | 240 |
| பூசணி | 60 | 40 | 80 |
| புடோல் | 70 | 70 | 80 |
| வாழைக்காய் | 50 | 55 | 80 |
| சின்ன வெங்காயம் | 170 | 140 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 120 |
| பாகற்காய் | 150 | 150 | 160 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 80 |
| பயற்றங்காய் | 100 | 120 | 120 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 |
| பீற்றூட் | 100 | 70 | 120 |
| கறிமிளகாய் | 160 | 80 | 200 |
| முருங்கைக்காய் | 140 | 120 | 200 |
| போஞ்சி | 260 | 200 | 240 |
| கத்தரிதம்புள்ள | — | 35 | 120 |
| கீரை -1பிடி | 30 | 20 | 20 |
| தேசிக்காய் | 300 | 280 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 20-40 |
| இராசவள்ளி | 160 | 100 | 160 |
| வெங்காயப்பூ | 240 | 180 | 240 |
| முள்ளங்கி | 80 | 40 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | — | 120 |




# வித்தைக்காரனை வென்ற கதை



தெனாலிராமன் கிருஷ்ணதேவராயரின் புகழைக் கேள்விப்பட்டு அவரைக் காண்பதற்காக விஜயநகரத்தை நோக்கிப் புறப்பட்டான். பல நாட்கள் அவ்வூரில் தங்கி முயற்சித்தும் அரசரைக் காண இயலவில்லை. எப்படியாவது அரசரைப் பார்த்துவிடுவது என்று முயற்சித்துக் கொண்டே அவ்வூரிலேயே தங்கியிருந்தான். தினமும் அரண்மனைக்குப் போவதும் திரும்பி வருவதுமாக இருந்தான்.

ஒருநாள் வித்தைகள் செய்து வேடிக்கைகள் செய்து காட்டும் செப்படி வித்தைக்காரனைச் சந்தித்தான். அவனும் அரசரிடம் தன் வித்தைகளைக் காட்டிப் பரிசு பெறும் எண்ணத்துடன் இருப்பதைப் புரிந்து கொண்டான். அவனுடனேயே தானும் ஒரு வித்தைக்காரனைப் போல சேர்ந்து கொண்டான். அரசர் கிருஷ்ண தேவராயர் முன்னிலையில் வித்தைக்காரன் செப்படி வித்தைகளைச் செய்து காட்டி அனைவரையும் மகிழ்வித்தான். அரசரும் அவன் செய்து காட்டிய வித்தைகளால் மிகவும் மகிழ்ந்து ஆயிரம் பொன் பரிசளித்தார்.

ஆனால் அவன் அந்தப் பரிசைப் பெறும்முன்பாகவே இராமன் "அரசே! இவனைவிட வித்தையில் வல்லவனான நான் இருக்கிறேன். நான் செய்யும் வித்தையை இவனால் செய்ய முடியுமா என்று கேட்டுப் பாருங்கள். பிறகு பரிசு யாருக்கு என்று முடிவு செய்யுங்கள்" என்றவாறு முன்னால் வந்து நின்றான்.

அரசருக்கு மிக்க மகிழ்ச்சி. போட்டி என்று வந்துவிட்டாலே அது மிகவும் சுவையுடையதாகவே இருக்குமல்லவா? எனவே 'உன் வித்தைகளையும் காட்டு' என்று அனுமதி வழங்கினார் மன்னர். செப்படி வித்தைக்காரனுக்கு ஒரே கோபம். "உனக்கு என்னென்ன வித்தைகள் தெரியும். செய்து காட்டு. நீ செய்யும் அத்தனை வித்தைகளையும் நான் செய்து காட்டுகிறேன்" என்று சவால் விட்டான். அனைவரும் ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தனர். தெனாலிராமனோ பதற்றம் ஏதுமின்றி முன்னால் வந்து நின்றான். "ஐயா! எல்லா வித்தைகளையும் செய்ய வில்லை. ஒரே ஒரு வித்தை மட்டும் செய்கிறேன். அதுவும் கண்களை மூடிக் கொண்டு செய்கிறேன். நீங்கள் கண்களைத் திறந்து கொண்டு அதே வித்தையைச் செய்து காட்டுங்கள். உங்களால் முடியாவிட்டால் அரசர் தரும் ஆயிரம் பொற்காசுகளில் பாதியை எனக்குத் தந்து விட வேண்டும்"என்றான்.

வித்தைக்காரனோ வெகு அலட்சியமாக "ப்பூ, நீ கண்ணை மூடிக்கொண்டு செய்யும் வித்தையை நான் கண்களைத் திறந்துகொண்டே செய்ய வேண்டும் அவ்வளவுதானே? நீ செய்து காட்டு" என்றான். உடனே இராமன் அரசரை வணங்கி விட்டுக் கீழே அமர்ந்தான். தன் கை நிறைய மணலை வாரி எடுத்துக் கொண்டு மூடிய தன் கண்கள் நிறைய கொட்டிக் கொண்டான். அனைவரும் கைதட்டி ஆரவாரம் செய்து சிரித்தனர். மன்னரும் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார். பிறகு இராமன் தன் கண்களிலிருந்து மணலைத் தட்டி விட்டு வித்தைக்காரனைப் பார்த்து "இந்த வித்தையை நீர் உம் கண்களைத் திறந்து கொண்டே செய்து காட்டுங்கள்" என்றான். வித்தைக்காரனால் எப்படி முடியும்? "நான் தோற்றுப் போனேன். என்னை மன்னித்து விடுங்க"ளென்று தலை குனிந்து நின்றான். மன்னர் மகிழ்ந்து இராமனை அழைத்து அவனைப் பற்றி அறிந்து கொண்டார். பிறகு "தெனாலி ராமகிருஷ்ணா! உன் புத்திசாதுர்யத்தை மெச்சினேன். நீ சொன்னபடி ஐந்நூறு பொற்காசுகளைப் பெற்றுக் கொள்" என்றார்.

இராமன் "அரசே! இந்த வித்தைக்காரன் வித்தை காட்டுவதில் தனக்கு மிஞ்சியவர்யாருமில்லை என்று பேசிக் கொண்டிருந்தான். அவன் கர்வமாகப் பேசியதை நான் கேட்டுக் கொண்டிருந்தேன். வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு என்பதை உணர்த்தவும் அவன் கர்வத்தை அடக்கவும் நான் இவ்வாறு செய்தேன். நான் வித்தைக்காரன் என்று பொய் சொன்னதற்கு என்னை மன்னியுங்கள். ஆயிரம் பொன்னையும் அவருக்கே அளியுங்கள்" என்று கேட்டுக்கொண்டான்.

அரசர் கிருஷ்ணதேவராயர் மனம் மகிழ்ந்து இராமன் சொன்னபடியே வித்தைக்காரனுக்கு ஆயிரம் பொற்காசுகளையும் பரிசாக அளித்தார். பின்னர் தெனாலி இராமனுக்கும் பரிசளித்து அவனைத் தன் ஆஸ்தான விகடகவியாக அமர்த்திக் கொண்டார்.

## விடுகதைகளும் விடைகளும்

- வயிற்றில் விரல் சுமப்பான், தலையில் கல் சுமப்பான். அவன் யார்?

  மோதிரம்

- எட்டுக்கால் ஊன்றி இடமும் வலமுமாக வருவான். அவன் யார்?

  நண்டு

- ஓடையில் நிற்கும் ஒற்றைக்காலனுக்கு ஒரே குறி உணவு. அவன் யார்?

  கொக்கு

- ஒற்றைக்கால் பந்தலில் ஊரெல்லாம் தங்கலாம். அது என்ன?

  ஆலமரம்

- முரட்டு மனிதனுக்கு முப்பத்திரண்டு பேர் காவல். அது என்ன?

  நாக்கு

- நடந்தால் நடக்கும், நின்றால் நிற்கும். அது என்ன?

  நிழல்

- உயிரற்ற பறவை, ஊர் ஊராய் பறக்கும். அது என்ன?

  விமானம்

## சிரிப்பு மழை

ஒருத்தர் புதுசா ஒரு ஐடி கம்பனியில வேலைக்குச் சேர்ந்தாரு. முதல் நாள் கன்டீனுக்குப் போன் பண்ணினாரு.

"ஹலோ.. கன்டீனா. ஸ்ட்ரோங்கா.. ஒரு ஃபில்டர்காபி அனுப்புய்யா!" எதிர்முனையில்... "டேய் லூசு... இப்ப நீ தப்பான நம்பருக்குக் கூப்பிட்டிருக்கடா மடையா.

ஒனக்கு நான் யாருன்னு தெரியுமா?"

"தெரியலையே!?!" "நான் இந்தக் கம்பனியோட எம்.டி.டா அறிவு கெட்டவனே..." புதியவர் பயந்தாலும், கெத்தா குரலை உயர்த்திச் சொன்னாரு... "அடேய்... நான் யாருன்னு தெரியுமா?" "தெரியாது!" "அப்பாடா.. தப்பிச்சேன்...!" டொய்ங் ங்ங்! "ங்ங்ங்ங்ங்கே...!"

## பொது அறிவுத்துணுக்குகள்

- நம்முடைய மூளைக்குள் ஒவ்வொரு நிமிடமும் சராசரியாக 800 மில்லி லீற்றர் இரத்தம் பாய்கிறது.
- நாட்டின் பெயரில் அமைந்துள்ள தனிமங்கள் அமெரீஷியம், பிரான்சிஷியம், ஜெர்மேனியம், பொலோனியம்.
- மார்ச் 21 ஆம் திகதியிலும் செப்டெம்பர் 23 ஆம் திகதியிலும் பகலும் இரவும் சமமாக இருக்கும்.
- முட்டையின் ஓட்டில் உள்ள வேதிப்பொருள், கல்சியம் கார்பனேட்.
- மோரின் புளிப்புச் சுவைக்கு காரணம், லாக்டிக் அமிலம்.
- விற்றமின் பி மற்றும் சி இரண்டும் நீரில் கரையக் கூடியவை.
- சிலந்திக்கு எட்டு கால்கள் இருப்பதைப் போன்று, கண்களும் எட்டு இருக்கின்றன.
- முதுகெலும்பு தரையில் படுமாறு உறங்கும் ஒரே விலங்கு, மனிதன் மட்டுமே.
- தேனில், 31 சதவீதம் குளுக்கோஸ் அடங்கியுள்ளது.

அஞ்சி நடுங்கிக் கொண்டிருப்பவனால் சிறிய குட்டையைக் கூட கடக்க முடியாது..

– சாணக்கியன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# இருக்கும் இடம் விட்டு இல்லாத இடம் தேடி...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பற்றி இவ்விடத்தில் எழுதும்போதெல்லாம் நீங்கள் கூட்டமைப்புக்கு எதிரா? என்று யாரேனும் கேட்டு விடுவீர்களோ என்ற மனக் கிலேசம் எம்மிடம் இருக்கவே செய்கிறது.

உண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நாம் எதிரானவர்கள் அல்ல. ஆனால் அவர்களின் செயற்பாடு தமிழினத்துக்கு விரோதமாக இருக்கிறது என்பதுதான் எமக்கு மிகுந்த வேதனையையும் விரக்தியையும் தருகிறது.

இன்று முஸ்லிம் அரசியல்வாதிகள் ஒன்றுபட்ட நுட்பத்தை நாம் யதார்த்தமாகக் கண்டுள்ளோம்.

அவ்வாறான ஓர் ஒற்றுமையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் ஏற்படுத்த முடியுமா என்ன?

இதுதவிர, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அத்தனை நடவடிக்கைகளும் தமிழினத்துக்குப் பாதகத்தை ஏற்படுத்துவதாக இருப்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வர்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவை இலங்கை அரசுக்குக் கால அவகாசம் கொடுக்க வேண்டும் எனக் கூறியது முதல் சர்வதேச விசாரணை முடிந்து விட்டது என்று கூறியது வரையிலும் அரசாங்கத்துக்கான ஆதரவின்போது; தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் காணாமல்போனவர்கள் விவகாரம், காணி சுவீகரிப்பு என்பன தொடர்பில் நிபந்தனை விதிக்கத் தவறியமை வரையில் எல்லாமும் தவறானவையாகவே இருக்கின்றன.

இதற்கு மேலாக ஜனாதிபதி மைத்திரியை ஆதரித்தது எங்கள் தவறு. வடக்கு முதலமைச்சராக நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனைக் கொண்டு வந்தது நாங்கள் விட்ட தவறு எனத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா கூறுகின்ற கருத்துக்களும் அவசரகாலச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என அவர் விடுத்த கோரிக்கையும் தமிழ் மக்களுக்குக் கேடு செய்வதாகும்.

இவைதான் என்றால் இந்தியாவுக்குச் சென்ற மாவை சேனாதிராசா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க. ஸ்டாலினைச் சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு இப்போது அவசரமா என்றால் இல்லவே இல்லை.

இந்திய மத்திய அரசை மீண்டும் தனக் காக்கிக் கொண்டுள்ள பிரதமர் நரேந்திர மோடி, மு.க.ஸ்டாலினுடன் கடுமையான எதிர்ப்பைக் கொண்டுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடிக்கு அரசியலில் எதிரானவராக இருக்கக்கூடிய ஸ்டாலினை பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா சந்தித்தது ஆரோக்கியமானதல்ல என்பதே நம் கருத்து.

முன்னர் ஒருமுறை கலைஞர் கருணாநிதியின் ஆதரவுடன் பிரதமர் மன்மோகன் சிங் மத்தியில் ஆட்சி அமைத்திருக்க, கருணாநிதிக்கு எதிராக இருந்த வை.கோபாலசாமியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்தித்தது.

இச்சந்திப்பால் ஆத்திரமடைந்த கலைஞர் கருணாநிதி பிரதமர் மன்மோகன் சிங்குடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்தவிருந்த சந்திப்பை தடுத்து நிறுத்தினார்.

இந்த அனுபவங்கள் இருந்தும் மாவை சேனாதிராசா இப்போது மு.க.ஸ்டாலினைச் சந்தித்துள்ளார். இச்சந்திப்பின் காரணமாக; கொழும்பில் பிரதமர் மோடியுடன் கூட்டமைப்பு நடத்தவுள்ள சந்திப்பை பலயீனமாக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆக, இருக்கும் இடம் விட்டு இல்லாத இடம் தேடும் வேலையில் கூட்டமைப்பு இப்போது இறங்கியுள்ளது என்பதுதான் உண்மை.

# சுற்றுச் சூழலை பாதுகாக்காவிடின் 20 வருடத்தில் நாடு பாலைவனமாகும்

### ஜனாதிபதி மைத்திரி எச்சரிக்கை

(கொழும்பு)

சுற்றுச்சூழலை பாதுகாக்காவிடின் எதிர்வரும் 15 - 20 வருடங்களில் நாடு பாலைவனமாக மாறுவதை தடுக்க முடியாதென தெரிவித்த ஜனாதிபதி இதனை தடுக்க அனைவரும் தத்தமது பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கண்டி மாநகர சபை எல்லைக்குட்பட்ட துனுமடலாவ பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசத்திலுள்ள பைன் மரங்களை அகற்றி அதற்கு பதிலாக அங்கு உள்நாட்டு வன வளர்ப்பினை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். (ம-3)

# ஐ.தே.கவுக்கு எதிராக உள்ள அனைத்து கட்சிகளிடமும் பேச்சுவார்த்தை முன்னெடுப்போம்

### சு.க பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கும் பொதுஜன பெரமுனவிற்கும் இடையில் நிச்சயம் பரந்துபட்ட கூட்டணியமைக்கப்படும். ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிராக உள்ள அனைத்து அரசியல் கட்சிகளிடமும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்போம்.

அதன்படி அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை எதிர்வரும் 17ம் திகதி இடம்பெறும் என சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகளுக்கு இடையிலான ஐந்தாவது கட்ட பேச்சுவார்த்தை நேற்று எதிர்க் கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம் பெற்றது. சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

உத்தேசிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி தேர்தலில் சுதந்திர கட்சியின் வேட்பாளரான இந்நாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போட்டியிட வேண்டும் என்பது சுதந்திர கட்சியின் நிலைப்பாடு. இதே போன்று பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட வேண்டும் என்பது அவர்களின் நிலைப்பாடு. இவ்வாறான வேறுபட்ட கருத்துக்களினால் பரந்துப்பட்ட கூட்டணியமைத்தலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

இரு தரப்பிலும் இருந்து எழுகின்ற மாறுபட்ட அரசியல் கருத்துக்கள் தொடர்பில் ஆராய்ந்து ஒரு உறுதியான திருப்திகரமான தீர்வை பெறுவதற்காகவே தொடர்ந்து இரு தரப்பு பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இரண்டு பிரதான கட்சிகளின் அரசியல் கொள்கைகளும் தற்போது ஒருமித்த தீர்வை கொள்கையினை பெறுவதற்கு இணக்கப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் எதிர்பார்ப்பிற்கு அமைய நிச்சயம் பரந்துபட்ட கூட்டணி அமைக்கப்படும். கூட்டணி வெற்றிகரமாக அமைந்தால் ஜனாதிபதி வேட்பாளர் யார் பிரதமர் யார் என்ற பிரச்சினைகள் ஒருபோதும் ஏற்படாது. ஐக்கிய தேசிய கட்சிக்க சவால் விடும் அளவிற்கு இரு தரப்பினரும் பலமாக செயற்படுவோம் என்றார்.

(ம-3)

# தெற்கை விட வடக்கிலேயே சோதனைகள் அதிகம்

### சிறீதரன் எம்.பி குற்றச்சாட்டு

தாக்குதல்கள் இடம்பெற்ற தென்னிலங்கை மற்றும் கிழக்கைப் பார்க்கிலும் வடக்கிலேயே தற்போதும் அதிகமான சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அத்தோடு தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள அவசரகாலச் சட்டமும் தமிழர்களுக்கான அச்சுறுத்தலாகவே காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிளிநொச்சி, தம்பகாமம் வண்ணாங்கேணி வடக்கு பகுதியில் ஆராதி நகர், சஞ்சீவி நகர் மாதிரி கிராமம் நேற்று (வெள்ளிக்கிழமை) அமைச்சர் சஜித் பிரேமதாசவால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் தெரிவித்த அவர், "கடந்த ஏப்ரல் மாதம் தென்னிலங்கையிலும் இடம் பெற்ற தாக்குதல்கள் காரணமாக ஸ்தம்பிதம் அடைந்த இலங்கை தற்போது ஓரளவு சுமுகமான நிலைக்கு வந்துள்ளது. எனினும் பாதுகாப்பு இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை.

இந்நிலையில், தாக்குதல்கள் நடத்தப்பட்ட கிழக்கு மாகாணத்திலும் தென்னிலங்கையிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. ஆனால் வடக்கிலேயே அதிகமாக பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எனவே இந்த நாட்டில் தமிழர்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும். உரிமைகள் மறுக்கப்படாது நீதியான முறையில் வாழும் நிலை உருவாக வேண்டும்" என மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

### நெல்லியடி பொலிஸ் பிரிவில்

# வர்த்தக நிலையம் உடைத்து 40 ஆயிரம் பெறுமதியான பொருட்கள் திருட்டு

(கரணவாய்)

வர்த்தக நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த 40 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்கள், பணம் என்பன திருடப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

நெல்லியடி - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள மூத்தவிநாயகர் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள பலசரக்கு வர்த்தக நிலையம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு பின்பக்க சீற்றினை உடைத்து உள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த 7500 ரூபா பணம், தொலைபேசி மீள்நிரப்பு அட்டை, பால்மா, பிஸ்கட் உள்ளிட்ட 40 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது. (ம-60)

# முதியோர்களுக்கான மருத்துவ முகாம்

யாழ். பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஜே/86 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள முதியோர்களுக்கான மருத்துவ முகாம் நாளை 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை மதுருஷா மண்டபத்தில் நடைபெறும்.

இம்மருத்துவ முகாமில் பங்குபற்ற வருபவர்கள் குடும்ப அட்டை, அடையாள அட்டை என்பவற்றைக் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (5)

# பரீட்சைத் திணைக்களத்துக்கு புதிய இணையம் அறிமுகம்

இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு புதிய இணையத்தளம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் டிஜிட்டல் மயப்படுத்தும் திட்டத்தின் மற்றுமொரு நடவடிக்கையாக இந்த புதிய இணையத்தளம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன் ஊடாக சான்றிதழ்களை விநியோகிக்கும் ஆரம்ப வைபவம் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு, எதிர்வரும் 11ஆம் திகதி பரீட்சைத் திணைக்களத்தில் இடம் பெறவுள்ளதுடன், இதில் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனும் பங்கேற்கவுள்ளார். (ம-3)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- உலக வாழ்விலுள்ள பிரச்சினைகளில் இருந்து தப்பி ஓட நினைப்பவனே கோழை.
- வெற்றி தோல்வி பற்றிய சிந்தனை தேவையில்லை. தியாக உள்ளத்துடன் பணியில் ஈடுபடுங்கள்.
- உலகம் ஒரு உடற்பயிற்சிக்கூடம். அதில் நம்மை வலிமை உடையவர்களாக ஆக்கிக் கொள்ளவே நாம் வந்திருக்கிறோம்.
- உண்மையான சமத்துவம் என்பது எப்போதும் இருந்ததில்லை. இனி இருக்கப் போவதுமில்லை.
- பணத்தால் மட்டும் சக்தி கிடைப்பதில்லை. நன்மையும், தெய்வபக்தியுமே சக்திக்கான கருவூலங்கள்.

# சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III யாழ்.பல்கலைக்கழக அணி வெற்றி

சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III தொடருக்கான தகுதி காண் போட்டிகளில் மற்றுமொரு போட்டி மிக அண்மையில் நடந்த போது யாழ். பல்கலைக்கழக அணி , சிறி காமாட்சி அணியை 8 இலக்குகளால் வெற்றி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய சிறிகாமாட்சி அணி 36.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 135 ஓட்டங்களை பெற்றன.

துவாரகன்-11,செந்தில்குமரன்-28,பவிந்தன்-16 தர்ஸன்-10 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில், ஜெனன்தன்-02, தரங்கா 7 இலக்குகளை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலைக்கழக அணி 19.4 ஓவர்களில் 2 இலக்குகளை இழந்து 138 ஓட்டங்களை பெற்றன.

பிரசாத்-30 , ததுஸன்-30 , தரங்கா ஆட்டமிழக்காது -27, துவார கசீலன் ஆட்டமிழக்காது-27 ஓட்டங்களை பெற்றனர். தினேஸ்-2 இலக்குகளை கைப்பற்றினார்.

இப் போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் தரவரிசைப் பட்டியலுக்கு யாழ். பல்கலைக்கழக அணி 8.18 புள்ளிகளையும், சிறி காமாட்சி அணி 1.55 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (கு)



## ஞானமுருகன்,றோயல் அணிகள் வெற்றி






ஏழு கோல்களைப் போட்டு ஞானமுருகன் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தெரிவாகியது

சூசையப்பர் விளையாட்டு கழகம் நடத்தும் மண்டைதீவில் கொலையுண்ட 31 மீனவர்களின் 33 ஆவது ஆண்டு நிறைவு நினைவாக 3வது நாளாக குருநகர் பாடும்மீன் விளையாட்டு மைதானத்தில் நடத்தப்படுகின்ற தூயஒளி வெற்றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட போட்டியில் முதலாவது போட்டியின் போது வளர்மதி விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் மோதியது.

இப் போட்டியில் 7-0 என்ற கோல் கணக்கில் ஞானமுருகன் 7 கோல்களை போட்டு வெற்றி வாகை சூடி அடுத்த சுற்றுக்கு தெரிவாகியது.

இரண்டாவது போட்டியின் போது திருக்குமரன் விளையாட்டு அணியை எதிர்த்து றோயல் அணி மோதியது. இரு அணியினரும் ஒன்றையொன்று கோல்களை போடு வதில் தீவிரமாக விளையாடினர்.

இறுதியில் றோயல் அணி ஒரு கோலினை போட்டது. 1-0 என்ற கோல்கணக்கில் றோயல் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தெரிவாகியது.(க-103)

## சென்.அன்ரனிஸ்,அன்னை அணிகள் அடுத்த சுற்றில்






மண்டைதீவில் கொலையுண்ட 31 மீனவர்களின் 33 ஆவது ஆண்டு நினைவாக நடத்தப்படும் உதைபந்தாட்ட போட்டி குருநகர் பாடும்மீன் விளையாட்டு மைதானத்தில் சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கலைவாணி விளையாட்டுக்கழக அணி மோதியது.

5 - 0 என்ற கோல் கணக்கில் சென்.அன்ரனிஸ் அணி வெற்றி பெற்றது. அடுத்த ஆட்டத்தில் நாவற்குழி அன்னை அணியை எதிர்த்து பொற்பதி விளையாட்டுக்கழகம் மோதியது.

நாவற்குழி அன்னை விளையாட்டுக்கழகம் 8 கோல்களை சரமாரியாக போட்டு 8 - 0 என்ற கோல் கணக்கில் அன்னை அணி வெற்றி பெற்றது. (க-106)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## கடற்கரை கரப்பந்தாட்டம் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி சம்பியன்

பாடசாலைகளுக்கிடையிலான மாகாணமட்ட கடற்கரை கரப்பந்தாட்ட போட்டிகள் வல்வெட்டித்துறை உதயசூரியன் உல்லாசக் கடற்கரை மைதானத்தில் நடைபெற்றது. இதில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணி சம்பியனாக மகுடம் சூடியது.



உடுப்பிட்டி மகளிர் சார்பாக களமிறங்கிய அன்பழகன் அபிநயா மற்றும் அருளானந்தசிவம் அபிநயா ஆகியோர் முதல் போட்டியில் வசாவிளான் மத்திய கல்லூரி அணியையும் காலிறுதிப் போட்டியில் கிளிநொச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலய அணியையும் அரையிறுதியில் தெல்லிப்பழை அருணோதயாக் கல்லூரி அணியையும் இறுதிப் போட்டியில் வவுனியா சிங்கள சுமன வித்தியாலய அணியையும் வீழ்த்தி வெற்றியீட்டி உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்கு மாகாண மட்ட சம்பியனாகவும் ஹட்ரிக் சம்பியனாகவும் பெருமை சேர்த்தனர்.

இந்த அணி ஏலவே 2017, 2018 ஆம் ஆண்டு கடற்கரைக் கரப்பந்தாட்டப் போட்டியில் சம்பியன் பட்டம் வென்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (கு)

அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## பொதுஜன...

நேற்று நடைபெற்றது.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

இந்த கலந்துரையாடலில் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி சார்பில் அதன் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, முன்னாள் பொதுச் செயலாளர் ரோஹன லக்ஷ்மன் பியதாச ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி சார்பில் அதன் தலைவர் ஜீ.எல்.பீரிஸ் பாராளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும ஆகியோர் பங்கேற்றனர்.

இதன்போது பல்வேறு விடயங்களில் கொள்கை ரீதியான இணக்கம் இரண்டு தரப்புக்கும் காணப்பட்டதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முன்னாள் பொதுசெயலாளர் ரோஹன லக்ஷ்மன் பியதாச குறிப்பிட்டார்.

இதன் அடுத்தகட்ட பேச்சுவார்த்தைகள் எதிர வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ம-3)

## ஜனாதிபதி...

நாள் நிகழ்வுகள் இன்றைய தினம் இடம் பெற இருக்கின்ற நிலையில் இன்றைய தினம் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வருகை தருகின்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்ள உள்ளார்.

இன்று முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வருகை தருகின்ற ஜனாதிபதி முதலில் வெலிஓயா பிரதேச செயலகத்தின் கட்டடத்தினை திறந்து வைத்து அதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் ஸ்மார்ட் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் அலுவலகம் திறந்து வைத்து அதனை தொடர்ந்து முல்லைத்தீவு பிரதேச சபை பொது விளையாட்டு மைதானத்தில் நாட்டுக்காக ஒன்றிணைவோம் தேசிய வேலைத்திட்டத்தினுடைய இறுதி நிகழ்வில் பங்கேற்கிறார். (ம-3)

## புலனாய்வு அதி...

தற்போது சேவையிலுள்ள பாதுகாப்புத்துறை அதிகாரிகள் எவரையும் தெரிவுக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்க அனுப்பப் போவதில்லை என்பதோடு, அவர்களது செயற்பாடுகள் தொடர்பான பொறுப்பினை தானே ஏற்றுக் கொள்வதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற பொலிஸ் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகளுடனான மாதாந்த கூட்டத்தின்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைக் குறிப்பிட்டார்.

கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல்கள் தொடர்பான 05 வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டுவரும் பின்னணியில் தெரிவுக்குழுவொன்றினை நியமித்து விசாரணை செய்தல் உயர் நீதிமன்றத்தின் செயற்பாடு களில் பாதிப்பை ஏற்படுத்தும் என சட்டமா அதிபர் தனக்கு எழுத்து மூலமாக அறிவித்துள்ளதாகவும் நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் தான் அதனை சபாநாயகருக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் ஜனாதிபதி ஒருவரினால் சமர்ப்பிக்கப்படும் அத்தகைய கடித ஆவணங்கள் பாராளுமன்ற அமர்வின் தொடக்கத்திலேயே சம்பிரதாயபூர்வமாக சபாநாயகரினால் முன்வைக்கப்படுகின்ற போதிலும் சபாநாயகர் இவ்விடயம் குறித்து பாராளுமன்றத்தில் எதுவித கருத்துக்களையும் வெளியிடாமை தொடர்பில் தான் வருத்தமடைவதாக ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார். (ம-3)

## மைத்திரி, ரணில்...

புறப்படுகின்றார் என இராஜதந்திரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரண்டாவது முறையாகவும் பதவியேற்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, அயல்நாடுகளுக்கான பயணங்களை ஆரம்பித்திருக்கிறார்.

இன்று மாலைதீவுக்கான பயணத்தை மேற்கொள்ளும் அவர், நாளை ஞாயிற்றுக் கிழமை மாலைதீவிலிருந்து முற்பகல் 11 கொழும்பு வருகிறார்.

கொழும்பு வரும் அவருக்கு ஜனாதிபதி செயலகத்தில் வரவேற்பு அளிக்கப்படும். அதனையடுத்து, இரண்டு நாடுகளின் தலைவர்களுக்கும் இடையில் இருதரப்பு பேச்சுக்கள் நடத்தப்படவுள்ளன.

இருதரப்பு பேச்சுக்களை அடுத்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோரையும், இந்தியப் பிரதமர் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இந்தப் பேச்சுக்களை முடித்துக் கொண்டு, 3 மணியளவில் இலங்கையிலிருந்து புறப்படுகிறார். (ம-3)

## நவாலியில்...

கும்பல், மாணவனை வெட்டிக் காயப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அண்ணனை இலக்கு வைத்துத் தாக்குவதற்கு வந்த கும்பல் 16 வயது மாணவனான தம்பியை வாளால் வெட்டிக் காயப்படுத்திவிட்டுத் தப்பித்துள்ளது. தலையில் படுகாயமடைந்த மாணவன் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு 10 மணியளவில் நவாலி சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயத்துக்கு அண்மையில் இடம்பெற்றது. முகத்தை மூடியவாறு வாள்கள் உள்ளிட்ட கூரிய ஆயுதங்களுடன் வீடு புகுந்த கும்பல், அடாவடியில் ஈடுபட்டதுடன், மாணவனை வெட்டி காயப்படுத்திவிட்டுத் தப்பித்துள்ளது. (ம-3)

## நேற்று இரவு...

கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியினால் அவசரமாக கூட்டப்பட்ட இக்கூட்டம், நேற்று இரவு 8.00 மணிக்கு ஆரம்பமாகியதாகவும், இரவு 9.00 மணிக்கு நிறைவடைந்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இக்கூட்டத்திற்கு அமைச்சரவையிலுள்ள சகல அமைச்சர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததாகவும் குறிப்பிடப்படுகின்றது. இருப்பினும், இராஜாங்க, பிரதி அமைச்சர்களும் இந்த கூட்டத்தில் கலந்துகொள்ள வந்திருந்ததாக ஊடகங்கள் சுட்டிக்காட்டியிருந்தன.

எந்தவொரு அமைச்சரும் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்க மறுத்துள்ள நிலையில், இராஜாங்க அமைச்சர் அசோக அபேசிங்க,

நடைபெற்றது அவசர அமைச்சரவைக் கூட்டமொன்று மாத்திரமே. இதில் சுமுகமான ஒரு கருத்துப் பரிமாறல் இடம்பெற்றது. என்ன விடயம் தொடர்பில் பேசப்பட்டது என்பது குறித்து விரைவில் தெரியவரும் எனவும் அவர் கூறினார். (ம-3)

## மாவட்டச் செய...

செயலாளர்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன் எனவும், எங்காவது ஒரு சம்பவம் இடம்பெற்றாலும் நாட்டின் சுற்றுலாத் துறைக்கு அது பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

# தேசிய பாதுகாப்பு மீதான நம்பிக்கையை மோடியின் வருகை அதிகரித்துள்ளது

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்புக்கு எந்த அச்சுறுத்தலும் கிடையாது. இந்நிலையில் இந்தியாவின் பிரதமராக இரண்டாவது முறையாகவும் பதவியேற்ற நரேந்திர மோடி, இலங்கைக்கு முதலாவது முறையாக நாளை உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார். இந்த விஜயமானது தேசிய பாதுகாப்பு மீது இன்னும் நம்பிக்கையை அதிகரித்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சுற்றுலாதுறை நாட்டின் பொருளாதாரத்துக்கு முக்கிய பங்களிப்பை வழங்குகின்றது. தாக்குதல்களை தொடர்ந்து சுற்றுலாதுறையும் பாரிய வீழ்ச்சியினை சந்தித்துள்ளது. தாக்குதல் சம்பவங்களுக்கு முன்னர் இலங்கை வந்த அனைத்து சுற்றுலா பயணிகளும் அவர்களின் சொந்த நாடுகளுக்கு திரும்பியுள்ளனர். தனியார் ஹோட்டல்களின் வருமானமும் பாரிய வீழ்ச்சியை சந்தித்துள்ளது. இந்நிலையில் வெளிநாடுகளில் இலங்கை தொடர்பான விடுக்கப்பட்டுள்ள பயண அறிவுறுத்தல்களை நீக்கி கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறோம். சில நாடுகளில் விடுக்கப்பட்டிருந்த பயண அறிவுறுத்தல் முழுமையாக நீக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று இந்த இரண்டு நாட்களில் ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட இன்னும் சில நாடுகளில் விடுக்கப்பட்டிருந்த பயண அறிவுறுத்தல்கள் நீக்கப்படவுள்ளன. விசேடமாக இலங்கை பாதுகாப்பு தொடர்பில் நம்பிக்கை உள்ளமையின் காரணமாகவே நாளை இந்திய பிரதமர் இங்கு விஜயம் செய்யவுள்ளார். மோடியின் வருகை நாட்டின் பாதுகாப்பு குறித்து அதிக நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுத்து செல்லும் பொறுப்பு அனைத்து மாவட்டங்களுக்கும் உள்ளது.

மேலும் பாதுகாப்பு நிலைமை குறித்து கொழும்பிலுள்ள இலங்கைக்கான சகல வெளிநாட்டு தூதுவர்களுக்கும் உயர்ஸ்தானிகர்களுக்கும் தெளிவுபடுத்தியிருக்கிறேன். குண்டுத் தாக்குதல்களை தடுத்து நிறுத்த முடியாவிட்டாலும் அதனுடன் தொடர்புடையவர்களை கைது செய்யும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. ஐ.எஸ். ஐ.எஸ் பயங்கரவாதிகளின் தாக்கத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளோம் என்றும் அவர்களுக்கு அறிவித்துள்ளேன். அதனை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்றும் குறிப்பிட்டார்.

பொசன் நிகழ்வுகளுக்காக அரசாங்கம் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் சகல மாவட்ட செயலாளர்கள் மற்றும் மாகாண பிரதம செயலாளர்களுடன் விசேட கலந்துரையாடலொன்று நேற்று பிரதமர் தலைமையில் அலரிமாளிகையில் இடம்பெற்றது.

நாட்டின் தற்போதைய நிலையில் இனவாதம் வளர்ந்து விடுமோ? என்று கொழும்பில் உள்ள வெளிநாட்டு நாடுகளினதும் தூதுவர்கள் மத்தியிலும் அச்சம் ஏற்பட்டுள்ளது. சிலர் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக இனவாதத்தை தூண்ட முயற்சிக்கின்றனர். அவர்களின் எதிர்பார்ப்புக்கு இடமளித்து விடக் கூடாது என்று மாவட்ட செயலாளர்கள் மற்றும் மாகாண பிரதம செயலாளர்களிடம் பிரதமர் விக்கிரம சிங்க வேண்டுகோள் விடுத்தார். (ம-3)

## தெரிவுக்குழுவை...

பால சிறிசேன கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், தெரிவுக்குழுவிற்கு புலனாய்வுத்துறை மற்றும் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் இனி வரமாட்டார்கள் எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

அவசர அமைச்சரவைக் கூட்டம் ஒன்று நேற்று இரவு 7.30 மணிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது கடும் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது. இந் நிலையிலேயே, ஜனாதிபதி இந்த கோரிக்கையினை விடுத்துள்ளார்.

விசேட பாராளுமன்ற தெரிவுக்குழு சாட்சியங்கள் மூலம் பாதுகாப்பு தரப்பின் தகவல்கள் பகிரங்கப்படுத்தப்படும் அதேசமயம் தவறுகளை தன் மீது சுமத்த முயல்வதாகவும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், தெரிவுக்குழுவை உடனடியாக இரத்துச் செய்யுமாறும், பாதுகாப்பு அதிகாரிகள் எவரையும் இனி தெரிவுக்குழுவில் கலந்து கொள்ள வேண்டாமென தாம் உத்தரவிட்டிருப்பதாகவும் ஜனாதிபதி இதன்போது கூறியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம-3)

பொசோன் பண்டிகையை முன்னெடுப்பதற்காக, அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் குறித்து விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று அலரிமாளிகையில் பிரதமர் தலைமையில் நடைபெற்றது.

இதில், கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே பிரதமர் இதனைக் கூறியுள்ளார்.

நாட்டை சாதாரண நிலைக்குக் கொண்டு வரவேண்டுமாயின் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அத்துடன், நிருவாக நடவடிக்கைகளும் சீரடைய வேண்டும். இந்த இரண்டும் நடைபெறாத நிலையில் நாடு சாதாரண நிலைக்கு வந்துள்ளது என அறிவிப்புச் செய்ய முடியாது.

கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற பயங்கரவாத குண்டு வெடிப்பின் பின்னர் நாட்டின் சுற்றுலாத்துறை பாரிய வீழ்ச்சியைக் கண்டுள்ளது. வெளிநாடுகள் எமது நாட்டுக்கு வருவதற்கான தடையைப் பிறப்பித்துள்ளன. இதனால், நாட்டிலுள்ள சுற்றுலாப் பயணிகளும் வெளியேறிச் சென்றுள்ளனர். சில ஹோட்டல்களில் அறைகள் வெறுமையாக காணப்படுகின்றன.

இந்த நிலையை மாற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. தற்பொழுது பல நாடுகள் தடைகளை நீக்கியுள்ளன. ஐரோப்பிய நாடுகள் பல விரைவில் தடைகளை நீக்கவுள்ளன. உண்மையில் நாட்டில் ஐ.எஸ்.ஐ.எஸ். பிரச்சினை முடிவடைந்துள்ளது என்பதை சர்வதேசம் ஏற்றுக் கொண்டுள்ளது.

இருப்பினும், சர்வதேசத்துக்கு இன்னுமொரு பிரச்சினையுள்ளது. அதுதான் இனவாத மோதல்கள் நாட்டில் ஏற்படும் என்ற சந்தேகம். இதனால், மாவட்ட செயலர்களிடம் விசேட வேண்டுகோள் ஒன்றை விடுகின்றேன். தமது மாவட்ட செயலக எல்லைக்குள் இன வன்முறைகள் நடைபெற இடமளிக்க வேண்டாம். ஒரு சம்பவம் இடம்பெற்றாலும், மீண்டும் சுற்றுலாப் பயணிகளின் வருகை வீழ்ச்சியடைய முடியும் எனவும் பிரதமர் கேட்டுக் கொண்டார். (ம-3)


**கொவிசெத**
திகதி 2019.06.07
சீட்டிழுப்பு இலக்கம் 2141
S 18 37 51 74

**தன நிதானய**
திகதி 2019-06-07
சீட்டிழுப்பு இலக்கம் 158
V 53 59 73 76

**மஹஜன சம்பத**
திகதி 2019/06/07
சீட்டிழுப்பு இலக்கம் 3933
S 7 8 1 2 9 1

**மெகா பவர்**
திகதி 07/06/2019
சீட்டிழுப்பு இலக்கம் 390
F 26 05 70 72 74

## 15 - 18 வயதின...

குழு அறிவித்துள்ளது.

15 தொடக்கம் 18 வரையான வயதுப் பிரிவினருக்கு வாக்களிக்கும் உரிமை சரியான நேரத்தில் வழங்கப்பகிறது என்பதை உறுதி செய்யும் வகையில் அவர்களையும் பதிவு செய்யும் நடைமுறை கொண்டு வரப் பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக் காட்டியுள்ளது.

அதன்படி தற்போது முன்னெடுக்கப்படும் இந்த ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் பதிவு நடவடிக்கையில் பதிவுடன் 15 தொடக்கம் 18 வயதுடைய இளையோரைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவமும் கிராம அலுவலர்களால் வழங்கப்பட்டு முழுமைப்படுத்தப்பட்டு பெற்றுக்கொள்ளப் படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு குறிப் பிட்டுள்ளது. (ம-3)

## இலங்கைக்கான...

பயண எச்சரிக்கைகளை பிரிட்டன், கனடா ஆகிய நாடுகள் தளர்த்தியிருக்கின்றன.

மிக முக்கியமான சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் இலங்கைக்குப் பயணிப்பதை தவிர்த்துக் கொள்ளுமாறு எமது நாட்டைச் சேர்ந்த பிரயாணிகள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு விடுத்திருந்த பயண எச்சரிக்கையைத் தளர்த்தியிருப்பதாக பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

அதேபோன்று மிக முக்கியமான தேவையில்லை எனும் பட்சத்தில் இலங்கைக்குப் பயணிப்பதைத் தவிர்க்கும்படி கனடா தனது பிரஜைகளுக்கு விடுத்திருந்த பயண அறிவுறுத்தலை நீக்கியிருக்கிறது. எனினும் அவசரகால நிலைமை தொடர்வதுடன், பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் வாய்ப்புகளும் இருப்பதால் இலங்கைக்கு வருகைதரும் கனேடிய பிரஜைகள் உயர் முன்னெச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என்று கனடா தொடர்ந்தும் அறிவுறுத்தியுள்ளது. (ம-3)

## மூங்கிலாறில்...

புதுக்குடியிருப்பில் இயங்கி வருகின்ற தனியார் ஆடை தொழிற்சாலை ஒன்றில் பணி புரிகின்ற குறித்த இளைஞர் ஆடைத் தொழிற்சாலையில் வேலை முடித்து வீடு திரும்பி சென்று கொண்டிருந்த வேளையில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது

மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் பேருந்து ஒன்றை முந்திச் செல்ல முற்பட்ட வேளையில் பேருந்தில் மோதுண்டு தூக்கி வீசப்பட்ட நிலையில் விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்

குறித்த விபத்தில் உயிரிழந்த இளைஞன் உடையார்கட்டு தேராவில் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய ரவீந்திரராசா பிரசாந்த் என்ற இளைஞர் ஆவார்

சம்பவ இடத்திற்குச் சென்ற புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-28)

## உலக...

வாக்குகளையும் பெற்றே வெற்றியீட்டியவர்கள்.

அவர்கள் எங்களுக்காகவும் ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களுக்காகவும் பதவி விலகினார்கள்.

ஆகவே எங்களுடைய ஒற்றுமை என்பது சாதாரண விடயமல்ல. நான் ஜனாதிபதி மைத்திரிக்கு 2 வார கால அவகாசம் கொடுத்துள்ளேன். என் மீதான குற்றச்சாட்டுக்களை உடனடியாக விசாரணை செய்து நிரூபிக்க வேண்டும் எனவும் கோரியுள்ளேன் எனவும் தெரிவித்துள்ளார். (ம-3)


## 'சொர்க்கம் திருமண சேவை'

கனடாவில் வாழும் 30, 32 வயதுடைய மணமகன்களுக்கு தகுந்த மணமகள்களைத் தேடுகின்றோம். லண்டனில் வாழும் 44 வயதுடைய விவகாரத்துப் பெற்ற மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டனில் தேடுகிறோம். (லண்டனில் வதிவிட உரிமை இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்) (C-6629)

தொடர்புகளுக்கு:-
0014166661855, 0014377728129, 0016475043336
Website: www.sorkhammatrimonial.com

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## ராஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில் வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: ராஜ் - 077 679 6623 (9042)

## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு

- தமிழ் ரைப்பிங்,
- பக்க வடிவமைப்பு,
- Photo Shop தெரிந்த, பழக விரும்பும்

ஆண்கள் தேவை,

தகுதியானவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு சுயவிபரம் அடங்கிய விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.

விளம்பர இலக்கம் (7001)
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

## Techno World
தொழில்நுட்பப் பிரிவு

### A/L 2021 ஆரம்பம்

- பொறியியல் தொழில்நுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, இலகு கணிதம், விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம்

08.06.2019
சனிக்கிழமை
காலை 8.30

077 017 5346,
077 170 3549
வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம். (C-6628)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## APEX TRAVELS

- சகல நாடுகளுக்குமான விமானப் பயணச் சீட்டுக்களை மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
- விசா ஒழுங்கமைப்புக்கள், பிரயாணக் காப்புறுதி (Travel Insurance) திகதி மாற்றம், ஹோட்டல் முன்னேற்பாடுகளும் செய்து தரப்படும்.
- விசா ஒழுங்கமைப்புக்கள்: UK, Australia, கனடா மற்றும் சகல ஐரோப்பிய நாடுகளுக்குமான விசா ஒழுங்கமைப்புக்கள் சிறந்த முறையில் செய்து தரப்படும்.

0773504700 / 076 333 3644 / 021 222 8008
fly@apextravels.lk
இல. 105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

## வீடு விற்பனைக்கு

வட்டுக் கிழக்கு, வட்டுக்கோட்டை, குளிப்பன் வீதியில் 1 3/4 பரப்புடைய வீடு சகல வசதிகளுடனும் விற்பனைக்கு உண்டு.
விலை பேசித் தீர்க்கலாம்
077 803 7876

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS (C-6632)

0768226240
மானிப்பாய் • யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
V2 TRAVELS

## சாவகச்சேரியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை.
UK - 525.00, Germany - 675.00, France - 830.00
நிபந்தனைகள் எதுவும் இல்லை

அருள்
இல.1, NDB வங்கிக் கட்டடம்,
தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
076 443 1576

வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரம்பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்
எமரல்ட் ஐல்ஸ அறிமுகப்படுத்திய சிகரம்
கொழும்பு முன்னணி ஹொட்டேல் கல்லூரி, விசா சேவை வழங்குநர், கனேடிய குடிவரவு சட்டவல்லுநர்களூடாக வழங்கும்

## Canada
Student Visa . Work Visa . Migration

| | | |
|---|---|---|
| O/L இல் 3C, 2Sக்கு மேல் உள்ளோர் | 3 - 6 மாத கால Hotel Management கற்கைநெறியுடன் | கனேடிய பட்டக்கல்வி or Work Visa ஏற்பாடு |
| O/L or A/L சிறந்த பெறுபேறு பெற்றோர் | விரும்பிய துறைகளில் கனேடிய பல்கலைக்கழக Diploma / Degree | பட்டக்கல்வியின் பின் Work Permit & PR ஏற்பாடு |
| Degree உள்ளோர் | Masters/PhD in Leading Canadian Universities | Work Permit & PR ஏற்பாடு |
| Degree / Masters / Phd உடன் | 3 - 5 வருட Work Experience உள்ளவர்கள் | தனியாகவோ குடும்பமாகவோ Migration ஏற்பாடு |

New Zealand & Australian Pathways உம் உண்டு
சான்றிதழ்கள், தொழில் அனுபவ கடிதங்கள், சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும்
விபரங்களுக்கு 0777 324 004, 021 222 00 11

No.1 Award Winning Institute of the North
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY

221-1/1, மின்சார நிலைய வீதி.
(2ம் ஒழுங்கை). யாழ்ப்பாணம்
ஷோரா புடவையகம் The Lover Teen Girls க்கு அருகே
www.sikaram.lk Sikaram Academy

## BA, B.com, B.Sc

(காமராசர் பல்கலைக்கழகம் மதுரை (வெளிவாரி)

- மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/L இரண்டு பாடம் சித்தி அடைந்தவர்களும் முழுமைச் சித்தி அடைந்தவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் ஆவர்.
- பரீட்சைகள் யாவும் கடந்த காலங்களில் நடைபெற்றதைப் போன்று காமராசர் பல்கலைக்கழகத்தின் வடமாகாண இணைப்பாளராகிய புதிய உயர் கல்லூரி வளாகத்தில் நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றோம்.
- இப்பட்ட நெறிகள் யாவும் இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வையாகும்.
- பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
- பதிவு முடிவுத் திகதி- 16.06.2019 ஆகும்.
- விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

குறிப்பு:-MA, MCom, MBA, MSc இப்பட்டநெறிகளுக்குரிய பதிவுகளும் நடைபெறுகின்றன.

விபரங்களுக்கு:-
யாழ் இணைப்பாளர்
காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)
021 222 8148, 077 846 9721

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.